லாச்சப்பலில்...
உங்களுக்குத் தேவையான
அனைத்து மளிகைப்
பொருட்களுக்கும்
கோபால் அன் கோ
சுப்பர் மார்சே
64, Rue Louis Blanc, 75010 Paris.
Tel: 01 40 05 04 50
Fax: 01 40 05 09 90

France: 10FFrs. Germany: 2.50DM Swisse: 2.50SFrs. GB: 90P

ஈழமுரசு

Eelamurasu Weekly

முரசு: 3 30 ஜனவரி - 05 பெப்ரவரி 1997 முழக்கம்: 107

லாக்குர்நெவில்...
உங்களுக்குத் தேவையான
அனைத்து மீன், இறைச்சி
வகைகளுக்கும்
KOPAL & Co
CASH & CARRY
39 Rue Maurice La Chatre,
93120 La Courneuve.
Tel: 01 48 37 04 52

# சந்திரிகா மண் கௌவுவார்
# அரசியல் விமர்சகர்கள் எச்சரிக்கை

கடந்த 4 வாரங்களில் சிறீலங்காப் படைகள் 15 வருட கால யுத்தத்தில் இல்லாத அளவுக்கு பாரிய இழப்புக்களை சந்தித்துக்கொண்டிருக்கின்ற நேரத்தில் விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொள்வதற்கு முயற்சி செய்யாமல் போரைத் தொடர்ந்து நடத்த சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்திருப்பது யதார்த்தத்தை புரிந்துகொள்ளாத தோல்வியை நோக்கி நாட்டை வழிநடத்துகின்ற செயல் என்று கொழும்பிலுள்ள அரசியல் விமர்சகர்கள் எச்சரித்துள்ளனர்.

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா 1997 முடிவதற்குள் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து யுத்தத்தை முடிவுக்குக்கொண்டு வருவேன் என்று கொழும்பில் நடந்த செய்தியாளர்கள் மத்தியிலும், கடந்த வாரம் நடைபெற்ற சுதந்திரக்கட்சி மகாநாட்டிலும் பேசிய பேச்சுக்கள் தொடர்பாக கருத்துத் தெரிவித்த அரசியல், இராணுவ ஆய்வாளர்கள், விடுதலைப் புலிகள், மூன்றாவது ஈழயுத்தம் ஆரம்பித்த பின் முல்லைத்தீவில் ஒரு தடவையும், பரந்தனில் இன்னொரு தடவையும் தங்கள் சக்தி என்ன என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். சந்திரிகா எதிர்பார்ப்பது போல் அவர்களைப் புறக்கணித்துவிட்டு எந்த அரசியல் தீர்வையும் கண்டுவிட முடியாது. சந்திரிகா விடுதலைப் புலி

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## பொதுமக்கள் மருத்துவ நிலையத்தில் புலிகள் சிகிச்சை பெறுவதில்லை
### -எம்.எஸ்.எப்

பரந்தன் - ஆனையிறவு தாக்குதல்களில் காயம்பட்ட புலிகள் எங்கு, எவ்வாறு சிகிச்சை பெறுகிறார்கள் என்று அறிவதற்கு சிறீலங்கா அரசாங்கம் பெரும் முயற்சி எடுத்து வருகின்றது.

வன்னிப் பெரு நிலப்பரப்பில் தொண்டர் ஸ்தாபனங்களின் ஆதரவுடன் மிகக் குறைந்தளவு வசதிகளுடன் இயங்கி வரும் மருத்துவ மனைகளில் காயம்பட்ட விடுதலைப்புலி போராளிகள் சிகிச்சை பெறுவருகின்றார்கள் என்று விசாரணை செய்த கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு பிரஞ்சு மருத்துவ சேவை தொண்டர் நிறுவனமான "எல்லைகள் அற்ற மருத்துவர் சங்கம் (எம்.எஸ்.எப்.) விளக்கத்தினைக் கொடுத்துள்ளது.

மல்லாவி வைத்தியசாலைக்குப் பொறுப்பான எம்.எஸ்.எப் அதிகாரியான செல்வி. ஸ்ரெபன்சன் காயம்பட்ட புலிகள் எவருமே மல்லாவி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வரவில்லை எனவும் மடு வைத்தியசாலையிலும் அவர்கள் சிகிச்சை பெறவில்லை எனவும் தெரிவித்துள்ளார். ஆனால் சர்வதேச விதிகளின்படி ஆயுதங்கள் ஏது மற்ற நிலையில் யாராவது வந்

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## இத்தாலியக் கடலில் மூழ்கவிருந்த மற்றொரு கப்பல் காப்பாற்றப்பட்டது

சட்ட விரோதக் குடியேற்றக்காரர்கள் எனக் கருதப்படும் நூறுக்கும் அதிகமானோரை ஏற்றிவந்த துருக்கி நாட்டில் பதிவு செய்யப்பட்ட கப்பல் ஒன்று இத்தாலியின் தென் கடற் பகுதியில் மூழ்கும் ஆபத்தான நிலையில் இருந்து காப்பாற்றப் பட்டுள்ளதாக இத்தாலியக் கரையோரக் காவல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 24.01.97 வெள்ளிக்கிழமை அன்று இத்தாலியின் புக்லியா கடற் பகுதியை மேற்படி கப்பல் தாண்டிச் சென்று கொண்டிருந்த போது அபாய சமிஞ்சை அனுப்பப் பட்டதாகவும் அதனைத் தொடர்ந்து அங்கு விரைந்து சென்ற கரையோரக் கண்காணிப்புப் படையினர் அக் கப்பலைக் காப்பாற்றியதாகவும் தெரியவருகிறது.

அக்கப்பலில் இலங்கையர், ஈரானியர்கள் உட்பட நூற்றுக்கு மேற்பட்டவர்கள் இருந்ததாகவும் அவர்கள் அனைவரும் இத்தாலிக்குள் சட்டவிரோதமாக பிரவேசிக்க திட்டமிட்டிருந்ததாகவும் கப்பலின் மாலுமி தெரிவித்தாகத் தெரிவிக்கப் படுகின்றது.

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## புலிகள் பங்கு பற்றாமலே தமிழருக்கு சமாதானத்தை தருவேன்
### -பி.பி.சி.க்கு சந்திரிகா-

"எனது அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட இனப்பிரச்சனைத் தீர்வுத்திட்டமானது விடுதலைப் புலிகள் பங்குபற்றாமலேயே தமிழ் மக்களுக்கு சமாதானத்தை கொண்டு வரக்கூடிய வலுவினைக் கொண்டுள்ளது. பெரும்பாலான தமிழ் மக்கள் இத்திட்டத்தினை வரவேற்றுள்ளதால் அதனை அமுல் படுத்தக்கூடிய வாய்ப்புகளும் உள்ளன"

இவ்வாறு சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா பி.பி.சி. தொலைக்காட்சிக்கு கடந்த வாரம் அளித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார். கொழும்பு அரசியல் வட்டாரங்களில் "கனவுலகிலிருந்து வழங்கப்பட்ட பேட்டி" என வர்ணிக்கப்படும் இப்பேட்டியில் சந்திரிகா மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வர முன்னர் சில

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## பாதுகாப்பு உயர் மட்டங்களில் புலிகளின் உளவுப்படையினரா?

சிறீலங்கா விமானப் படைக்குச் சொந்தமான 3 விமானங்கள் மிகக் குறுகியகால இடைவெளியில் விழுந்து நொருங்கியும், காணாமல் போயிருப்பது பற்றியும் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் மட்டத்திலும், அரச மட்டத்திலும் பெரும் சந்தேகங்களும், சர்ச்சைகளும் ஏற்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

குறிப்பாக பாதுகாப்பு உயர் மட்டங்களில் புலிகளின் உள

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## திருமலை சந்தை குத்தகையை தமிழரிடமிருந்து பறிக்க பிக்குகள் கங்கணம்

திருமலை நகர சந்தைக் குத்தகை முதன் முறையாக தமிழர் ஒருவரிடம் போய்ச் சேர்ந்த விவகாரம் நாளுக்கு நாள் சூடு பிடித்து வருகிறது. திருமலை நகரசபை கடந்த டிசம்பர் மாதத்தில் தமிழரொருவர் கூடிய கேள்வி கோரியதால் அவரிடமே அதை வழங்கியிருந்தது ஆனால் அதற்கு சிங்கள வியாபாரிகள் பலத்த கண்டனத்தை பௌத்த பிக்குகளின் ஆதரவுடன் தெரிவித்து வருகின்றனர்.

தமிழரிடமிருந்து இந்தக் குத்தகையை எடுத்து மீள சிங்களவரிடம் கொடுக்கும் வரை தாம் ஓயப்போவதில்லை எனவும் பௌத்தபிக்குகள் கங்கணம் கட்டியுள்ளனர்.

இந்தச் சந்தையை போயா நாட்களிலும் திறக்க திருமலை நகரசபை குத்தகையாளருக்கு

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

KUMARS SHOP
S. A. R. L.
80, Bld. Barbes, 75018 Paris. M°: Marcadet Poissonniers
Tél: 01 42 59 35 10 / Fax: 01 42 59 35 00



Singapore Exchange Co.
38 Rue Saint Quentin,
75010 Paris.
Tel: 01 48 74 48 21
Fax: 01 49 70 06 32

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை
ஸ்தாபக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்
ஆசிரியர்:
பி. சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France

விளம்பர விநியோக தொடர்புக்கு
பாரிஸ்:
Tel.: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
அருந்தவராஜா:
Tel: 02 151 39 73 83

டென்மார்க்:
S.E. MAHENDRAN
SPURVE VEJ-20,
7200 GRINSTED.
Tel + Fax: 75310546

சுவிஸ்: மக்கள் கடை
Tel: 01-271 7374

லண்டன்:
ஜெயந்தன் - Tel: 0956906145

இத்தாலி:
S. தில்லைவாசன்
VIA DANTE - 296, PALARMO
Tel: 03473358290

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
தானுவல்தன்
Tel: 0223 680462



லாச்சப்பலில்
சகலவிதமான அச்சுத் தேவைகளுக்கும்
தமிழ் அச்சகம்
Tel: 01 42 09 60 64


(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## பொதுமக்கள்...

தால் சிகிச்சை அளிக்க கடப்பாடு உண்டெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இம் மருத்துவ மனைகளில் அரசின் மருந்துத் தடை காரணமாக போதியளவு மருந்துகள் இல்லை என தெரிவித்த தொண்டர் நிறுவன ஊழியர்கள், இதனால் பல இடர்களை பொது மக்கள் எதிர்நோக்குவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## திருமலை...

அனுமதி அளித்துள்ளதால் பௌத்த மதத்தை தமிழர்கள் அவமதிப்பதாக பிக்குகள் குற்றஞ்சாட்டி உள்ளனர்.

இதே வேளை ஜனாதிபதி சந்திரிகாவிடம் இந்தப் பிரச்சினை சிங்கள வியாபாரிகளால் கொண்டு செல்லப்பட்டுள்ளதால் திருமலை நகர சபைத் தலைவரை கலந்து பேச வருமாறு ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## சந்திரிகா...

களைப் புறக்கணித்து விட்டு அவர்களுடன் யுத்தம் நடத்திக் கொண்டு அரசியல் தீர்வுத்திட்டத்தை அமுல் நடத்துவது என்ற இரட்டை நடவடிக்கையில் காலத்தைச் செலவிடும் ஒவ்வொரு நாளும் சிறீலங்காவின் பொருளாதாரமும் எதிர்காலமும் படுமோசமான வீழ்ச்சியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் என்று கூறியுள்ளனர்.


வீட்டுத் தளபாடங்களை ஏற்றி இறக்கவும், உங்கள் மங்கள வைபவங்களுக்கும், லூர்து யாத்திரை போன்றவற்றிற்கும் தேவையான வாகன வசதிகளுக்கு;



நித்தி
வாகன சேவை
Tel: 01 43 03 07 08
01 48 05 02 14 / 01 49 23 97 32
பிரயாண வசதி கருதி:
06 07 34 80 51


(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## பாதுகாப்பு...

வுப் படையினர் ஊடுருவி விட்டார்களா? என்ற அச்சம் அரச, பாதுகாப்பு வட்டாரத்தை பெரும் குழப்பத்தில் ஆழ்த்தியிருப்பதாக தெரிய வருகிறது. பாதுகாப்பு உயர் அதிகாரிகள் பலர் புலிகளுக்கு துணை போய்க் கொண்டிருக்கிறார்களா? என்ற சந்தேகம் அரச உயர்பீடத்தை கிலி கொள்ள வைத்திருப்பதுடன் அடுத்து என்ன செய்வது என்று தெரியாத இக்கட்டான நிலைக்கு அவர்களை தள்ளியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

விமானக் கோளாறுகள் ஏற்படுவதற்கு எவ்வித சாத்தியமும் இல்லை எனவும் இந்த விமான இழப்புக்களுக்கு உள் சதியே காரணமெனவும் நம்பப்படுகின்றது. அத்துடன் அண்மையில் வவுனியா பம்பைமடுப் பகுதியில் ரத்வத்தை மற்றும் பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடன் தரையிறக்கப்பட்ட உலங்குவானூர்தி விமானியின் தவறுதலால் தரையிறக்கப்பட்டதாக கூறி அவர் மீது விசாரணைகள் நடைபெற்று வருவதும் குறிப்பிடத் தக்கது.

1996.12.12

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## இத்தாலியக்...

கப்பலின் பெயர், எத்துறைமுகத்திலிருந்து அது புறப்பட்டது போன்ற விபரங்கள் இது வரை கிடைக்கப் பெறவில்லை. இவ் விதமே கடந்த மாதம் கிரேக்கக் கடற் பகுதியில் ஒரு கப்பல் மூழ்கியதால் பலர் உயிரிழந்ததும் குறிப்பிடத்தக்கது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## புலிகள்...

நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும். கடந்த ஒன்றரை வருடகாலமாக இத் தீர்வுத் திட்டம் தொடர்பாக எமது அரசு சகல கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடாத்தி வந்துள்ளது. ஆனாலும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் இதுவரை முறையான உடன்பாடேதும் எட்டப்படவில்லை. இக் கட்சியினர்தான் இன்றைய யுத்தத்திற்கான முழுப் பொறுப்பாளிகள் என்பதும் கவனத்திற்கெடுக்கப்பட வேண்டும்.

ஆனால், ஜனநாயக வழிக்குத் திரும்பிய தமிழ்க் குழுக்கள் தீர்வுத்திட்டத்தை ஆதரித்துள்ளதுடன் சில முன்வைப்பு யோசனைகளையும் வெளியிட்டுள்ளனர். அவற்றினை நாம் பரிசீலித்து வருகிறோம். இவர்களின் ஆதரவு இருப்பதால் புலிகளின் பங்கு குறித்து நாம் கவலைப்படவில்லை எனவும் அவர் அப் பேட்டியில் தெரிவித்துள்ளார்.

# பிறந்தநாள் வாழ்த்து



## செல்வன் அஜித் அருள்குமார்

சங்கானையை சேர்ந்த அருள்குமார் - ரஞ்சி தம்பதிகளின் செல்வப் புதல்வன் அஜித் தனது முதலாவது பிறந்த நாளை ஜேர்மனியில் உள்ள தனது இல்லத்தில் (Neuwd) 29.01.97) அன்று வெகு விமரிசையாக கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, கொழும்பில் இருக்கும் அப்பம்மா, பெரியத்தை, மச்சான்மார், (சவுதி) பெரியமாமா, பாரிசில் இருக்கும் மாமா, அத்தை, மச்சான், மச்சாள், ஜீவா சித்தப்பா, கொழும்பில் இருக்கும் அம்மப்பா, அம்மம்மா பெரியம்மா, ஜேர்மனியிலிருக்கும் பெரியமாமா, அத்தை, மச்சான்மார், மச்சான், ஜேர்மனியிருக்கும் பெரியப்பா, பெரியம்மா. அண்ணாமார், கொழும்பில் இருக்கும் சின்னமாமா, அத்தை, மச்சான்மார், மச்சாள், கனடாவிலிருக்கும் ஆசை மாமா அத்தை, மச்சாள், கனடாவிலிருக்கும் குஞ்சு மாமா, அத்தை, மச்சான், செல்வி அக்கா, கொழும்பிலிருக்கும் அன்ராப்பா, அன்ரி, அண்ணாமார், அக்கா, ஜேர்மனியிலிருக்கும் சித்தப்பா, சித்தி, அண்ணாமார் மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் முருகன் அருளால் பலகலையும் கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: இ. அருள்குமார் (அப்பா) (02631) 352250

# 1-வது பிறந்தநாள் வாழ்த்து



27.01.1997

## செல்வப் புதல்வன் சுலோஜெனன்

தமிழீழம் வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகக் கொண்ட சுமந்திரன் லோஜினி தம்பதிகளின் அன்புச்செல்வன் சுலோஜெனன் (27-01-1997) அன்றைய தனது பிறந்தநாளை 02-02-1997 அன்று பிரான்சில் Hotel de Concres, 208, Rue Anatale France, 93700 Drancy முகவரியிலுள்ள மண்டபத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மையா, அம்மம்மா, நோர்வே பெரியப்பா, பெரியம்மா, மயூரன் அண்ணா, ஜெயன் அண்ணா, சுபா தம்பி, இந்தியா சின்னப் பெரியப்பா, வவுனியா பாட்டா, பாட்டி மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று சீரும் சிறப்புமாக வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.


லாச் சப்பலில் குறைந்த செலவில் நிறைந்த பிரயாண சேவை

**Errances Travels**

Tél 01 42 09 70 00

*à partir de*

| | | | |
|---|---|---|---|
| Bombay | 3,900 Frs. | Londres | 790 Frs. |
| Delhi | 3,900 Frs. | New york | 2,400 Frs. |
| Bangkok | 3,700 Frs. | Montreal | 2,260 Frs. |
| Colombo | 3,950 Frs. | Oslo | 2,010 Frs. |
| Singapour | 3,700 Frs. | Toronto | 2,260 Frs. |
| Kualalumpur | 3,400 Frs. | Nepal | 4,820 Frs. |
| Madras | 3,800 Frs. | | |

Fax: 01 42 09 53 39 - Li: 075 95 01 37
55, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc
தொடர்புகளுக்கு: நாதன் (தமிழில்)

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

(ADV)

ஈழமுரசு

Eelamurasu Weekly

# பஞ்சம் பிழைக்க வந்தவர்கள்

1996-ம் ஆண்டு டிசம்பர் 25-ம் திகதி கிரேக்கக் கடலில் கப்பல் ஒன்று விபத்துக்குள்ளாகி 283 பேர் இறந்து 107 பேர் உயிர் தப்பி கிரேக்கப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட சம்பவம் நடந்து ஒரு மாதம் கடந்துவிட்ட போதிலும் அது பற்றிய சர்ச்சைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

283 பேர் கடலில் மூழ்கி இறந்ததாகச் சொன்னவர்கள், டிசம்பர் 30-ம் திகதி கிரேக்கக் கரையோரத்தில் வைத்து கிரேக்கப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட 107 பேராகும். இவர்கள் கடலில் மூழ்கி இறந்தவர்களோடு உடன் பயணம் செய்தவர்கள். இந்த விபத்தில் கொல்லப்பட்டவர்களில் 92 பேரும், உயிர் தப்பியவர்களில் 51 பேரும் இலங்கையர்கள்; குறிப்பாக பெரும்பாலும் ஈழத் தமிழர்கள். உயிர் தப்பி கிரேக்கப் பொலிசாரிடம் பிடிபட்டவர்களில் 29 பேர் கடந்த வாரம் கொழும்பிற்கு நாடு கடத்தப் பட்டுவிட்டனர். மிகுதி 22 பேர் பற்றிய விசாரணைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

இந்த நிலையில் பிடிபட்ட 107 பேர் கொடுத்த வாக்கு மூலங்களின் அடிப்படையில் கப்பல் மாலுமி, மற்றும் பிரயாண முகவர்கள் சிலர் மீதும் வழக்கும் தொடுக்கப்பட்டது. ஆனால் கிரேக்கமும் சரி, இத்தாலியும் சரி தொடர்ந்தும் பிடிபட்டவர்கள் சொல்லுகின்றபடி விபத்துக்கான தடயங்கள் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை; கப்பல் மூழ்கியதற்கான அறிகுறிகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றே கூறிவருகின்றன.

இன்ரர்போல் எனப்படும் சர்வதேசப் பொலிசார் விபத்துக்கு உள்ளானதாகச் சொல்லப்படும் கப்பலில் சென்றவர்களின் பெயர் விபரங்களை அறிவித்துள்ளதே தவிர இறந்தவர்கள் பற்றி மௌனம் சாதித்துள்ளது.

தற்போது இக் கப்பல் விபத்தில் இறந்ததாகச் சொல்லப்படும் 283 பேரும் எங்கே? என்ற கேள்வி எழுந்துள்ளது. அவர்களுடன் பயணம் செய்து உயிர் தப்பியவர்கள் பரிதாபகரமாக அவர்கள் தங்கள் கண்முன்னால் மூழ்கி இறந்ததைக் கண்டதாகச் சொல்கிறார்கள். இறந்தவர்களாகக் கருதப்படுபவர்களின் உறவினர்களும், பெற்றோரும் பதறித் துடித்துக் கொண்டு சர்வதேச தொண்டர் அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டு கேட்ட வண்ணம் உள்ளனர்.

சில தொண்டர் அமைப்புக்கள் அப்படி ஒன்றும் நடக்கவில்லை என்று அலட்சியம் காட்டி இருக்கின்றன. சில அமைப்புக்கள் அப்படி நடந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அதை உறுதிப்படுத்த முடியவில்லை என்ற கிரேக்க இத்தாலி அரசுகளின் பதில்களையே அவர்களுக்கு சொல்லி வருகின்றன.

வேல்ஸ் இளவரசி டயானா நீச்சல் குளத்திற்கு செல்வதையும், கடை வீதிக்குச் செல்வதையும் துப்புத் துலக்கி ஆராய்ந்து செய்தி வெளியிடும் மேற்குலக செய்தி நிறுவனங்கள், எஸ்தோனியாக் கப்பல் பால்டிக் கடலில் மூழ்கிய போது துருவித் துருவி ஆராய்ந்து செய்தி வெளியிட்ட மேற்குலகச் செய்தித் தொடர்பு சாதனங்கள், அமெரிக்க போயிங் விமானம் அத்லாந்திக் கடலில் வீழ்ந்த போது வாரக் கணக்கில் அதைப்பற்றி அலசி ஆராய்ந்து செய்தி வெளியிட்ட மேற்குலக தகவல் தொடர்பு வலைப் பின்னல் அமைப்புக்கள் இந்தக் கடல் விபத்துப்பற்றிய செய்தியை ஒரு நாள் ஒலி, ஒளி பரப்புச் செய்திகளுடன் முடித்துவிட்டன. அது மட்டுமல்லாமல் கள்ளக் குடியேற்றக் காரர்கள், சட்டவிரோதமான நபர்கள், பரதேசிகள், பஞ்சம் பிழைக்க வந்தவர்கள் என்ற கணக்கில் செய்தி வாசகங்களைத் தொகுத்து வெளியிட்டு தங்கள் மேதாவித் தனங்களைக் காட்டிக் கொண்டன.

ஆனால் இவர்கள் சொல்லும் இந்த அடைமொழிக்கு அப்பால் கடலில் மூழ்கி இறந்ததாகச் சொல்லப்படும் 283 பேரும் மனித உயிர்கள் என்பது ஏனோ இந்த மேற்குலக செய்தித்துறை மேதாவிகளுக்கு தெரியவில்லை?

தற்போது கடலில் மூழ்கி இறந்ததாகக் கூறும் 283 பேரையும் அவர்களது பிரயாண முகவர்கள் எங்காவது மறைத்து வைத்திருக்கக் கூடும் என்ற புதிய சந்தேகம் ஒன்றை சில மேற்குலக தொண்டர் அமைப்புக்கள் கிளப்பி உள்ளன?

இந்தக் கப்பல் மூழ்கியதையும் அதில் 283 பேர் பலியானதையும் நேரில் கண்டதாகச் சொல்பவர்கள் கிரேக்கப் பொலிசாரின் பொறுப்பில் இருக்கின்றனர். உயிரிழந்தவர்களை ஏற்றிச் சென்ற கப்பல் பற்றிய விபரம் கிரேக்கப் பொலிசாருக்கும், இன்ரப்போல் அமைப்புக்கும் தெரியும்.

அப்படியானால் அந்த 283 பேரும் எங்கே என்ற கேள்வியை அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு ஏன் அவர்களைக் கண்டு பிடிக்க முயலவில்லை? எதற்காக அந்த 283 பேரும் காணாமல் போனார்கள் என்ற மர்மத்தை தொடர்ந்து நீடிக்க விடவேண்டும்? ஒருவேளை அவர்கள் பரதேசிகள், பஞ்சம் பிழைக்க வந்தவர்கள், கள்ளக் குடியேற்றக்காரர்கள் என்ற நினைப்பு இருப்பதால்தானோ என்ற சந்தேகம் காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கும் அவர்களது நலன் விரும்பிகளுக்கும் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிறது.

# சிறீலங்காவில் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படுகிறது

சிறீலங்கா நீர்ப்பாசன சக்தி வள அமைச்சு தற்போது நடைமுறையிலுள்ள மின்சாரக் கட்டணங்களை மேலும் முப்பது வீதத்தினால் அதிகரிக்க முடிவு செய்துள்ளது. பெப்ரவரி மாத பிற்பகுதியிலிருந்து இந்த கட்டண அதிகரிப்பு நடைமுறைக்கு வருமென தெரிவித்த அமைச்சின் மேலதிக செயலாளர், இந்த கட்டண அதிகரிப்புக்கு அமைச்சின் எரிபொருள் பாவனைச்செலவு அதிகரிப்பே காரணம் எனத் தெரிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டண அதிகரிப்புச் செய்தியானது மத்திய தரக் குடும்பங்களை மிகவும் அதிர்ச்சியடையச் செய்ததுடன் ஏற்கனவே வாழ்க்கைச் செலவுகளுடன் போராடிக் கொண்டிருக்கும் இக்குடும்பங்களுக்கு அரசின் மீது மிகுந்த வெறுப்பினைத் தோற்றுவித்துள்ளது.

தற்போது சிறீலங்காவின் மின்சாரசபை அனல் மின்சார உற்பத்தியினை அதிகளவு செய்ய வேண்டியிருப்பதால் பெருமளவு எரிபொருட் செலவினை எதிர் நோக்குகிறது. சக்திவள அமைச்சரிடம் போதியளவு நிதி இல்லாத காரணத்தால் பொது மக்களிடமிருந்தே கட்டண அதிகரிப்பின் மூலமாக இந்த நிதியினை பெற முடிவு செய்துள்ளது.

# புலிகளை அழிக்க உதவினால் உள்ள உரிமையும் பறிக்கப்படும் - சேகு இஸ்தீன்

வடக்கு – கிழக்கில் நிரந்தர அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்கும், இனப் பிரச்சினைக்கு உண்மையான தீர்வைக் காண்பதற்கும் முஸ்லீம் மக்கள் அரசாங்கத்துக்கு உதவி செய்து அவர்களது நலனைப் பாதுகாப்பதற்கு துணை போவதைவிட விடுதலைப் புலிகளுடன் பேசுவதே சிறந்தவழியாகும் என்று சிறீலங்கா முஸ்லீம் கட்சித் தலைவர் சட்டத்தரணி எம்.ஏச். சேகு இஸ்தீன் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் அக்கரைப்பற்றில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய அவர், தேசிய இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கு முஸ்லீம்களே முட்டுக் கட்டையாக இருக்கிறார்கள் என்று கூறிக் கொண்டு சிங்கள அரசாங்கங்கள் இலாபமடைந்து வருகின்றன. கடந்த காலத்தில் ஐ.தே. கட்சி, தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப் போவதாக சொல்லிக் கொண்டு உருப்படியாக எதுவும் செய்யாமல் காலத்தை இழுத்தடித்து வந்தது. தற்போது பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டம் என்று சொல்லிக்கொண்டு தமிழ் முஸ்லீம் பாராளுமன்றக் கட்சிகளுடன் பேசிக் காலத்தை இழுத்தடித்துவரும் அதேநேரம், பேசப்பட வேண்டிய விடுதலைப் புலிகளுடன் பேசாமல் இராணுவ நடவடிக்கை மூலம் அவர்களை அழித்துவிடவோ, ஒதுக்கிவிடவோ மனப்பால் குடித்துக் கொண்டு செயற்பட்டு வருகிறது.

சிறீலங்கா இராணுவம் விடுதலைப் புலிகளை முற்றாக அழித்து விடுவதில் அல்லது பலவீனப்படுத்துவதில் வெற்றி காணுமாக இருந்தால் சிறுபான்மைச் சமூகங்களுக்கு தற்போது இருக்கக் கூடிய ஓரிரண்டு உரிமைகள் கூட சிங்கள இனவாதிகளால் பறிக்கப்பட்டு விடும். இந்த முயற்சிக்கு முஸ்லீம்கள் ஒத்துழைத்தால் அவர்களது நிலை சட்டிக்குள் இருந்து அடுப்புக்குள் விழுந்த கதையாகிவிடும்.

வடக்கு – கிழக்கு முஸ்லீம்கள் தமிழ் மொழிச் சமூகம் என்ற அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் மனந்திறந்து பேச்சு வார்த்தையில் ஈடுபட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

# முஸ்லீம் மீனவர்களின் வலைகள் சிங்களவர்களால் அபகரிப்பு

அம்பாறை, கல்முனை முஸ்லீம் மீனவர்களுக்கு சொந்தமான [illegible] பெறுமதியுள்ள மீன்பிடி வலைகள் கடந்த 21.01.97 அன்று இரவு தென்பகுதி சிங்கள மீனவர்களால் நடுக்கடலில் வைத்து அபகரித்துச் செல்லப் பட்டுள்ளன. இதனைத் தடுக்க முற்பட்ட மீனவர்கள் தாக்குதலுக்கு இலக்காகினர்.

மாத்தறைப் பகுதியிலிருந்து அதிவேக டிங்கி மீன்பிடிப் படகுகளில் வந்த சிங்கள மீனவர்கள் நள்ளிரவு வேளையில் பலாத்கார முறையில் வலைகளை அபகரித்துச் சென்றுள்ளனர் என கல்முனைப் பிரதேச மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

கல்முனைக் கடற்கரையிலிருந்து பிற்பகலில் புறப்படும் மீனவர்கள் சுமார் 7 மைல் தொலைவிற்குச் சென்று நள்ளிரவு வேளை ஆழ்கடலில் வலைகளைக் கட்டுவது வழக்கம். இந்நேரத்திலேயே இவர்களது வலைகள் சிங்கள மீனவர்களால் அபகரிக்கப் பட்டுள்ளன. சிங்கள மீனவர்கள் கத்தி போன்ற கூரிய ஆயுதங்கள் வைத்திருந்ததாகவும் தெரிவித்துள்ளனர். இவ்வாறான சம்பவங்கள் பல முறை நடந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# வை 12 புலிகளால் சுடப்பட்டது?

கடந்த 20.01.97 அன்று வட பகுதிக் கடலில் காணாமல் போனதாக கூறப்பட்ட இலங்கை விமானப் படைக்கு சொந்தமான வை.12 சீனத்தயாரிப்பு விமானத்தை விடுதலைப் புலிகளே சுட்டு வீழ்த்தினார்கள் என பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரம் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இச் சம்பவம் பற்றி அப்பத்திரிகை மேலும் குறிப்பிடுகையில்,

குறிப்பிட்ட தினத்தன்று அதிகாலையில் பலாலி இராணுவத் தலைமைச் செயலகத்திற்கு வட கடலில் புலிகளின் ஆயுதக் கப்பலொன்று சென்று கொண்டிருக்கின்றது என தமக்கு செய்தி ஒன்று கிடைத்ததாகவும், அச் செய்தி தமக்கு நம்பகமான ஓரிடத்திலிருந்தே கிடைக்கப்பெற்றதாகவும் உடனடியாக 4 விமானப்படையினர் Y 12 கண்காணிப்பு விமானத்தில் வடக்கு கடற் பகுதிக்குச் சென்று ஆயுதக் கப்பலை தேடும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையிலேயே அந்த விமானத்துடனான தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்டதென தெரிவிக்கப்படுகின்றது.

புலிகளுக்கு தமது கண்காணிப்பு விமானம் குறிப்பிட்ட கடற்பிராந்தியத்திற்கு வரப்போகின்ற செய்தி ஏற்கனவே தெரிந்திருந்தது எனவும், ஆகவே அவர்கள் காத்திருந்து தமது விமானத்தை தாக்கி அழித்துள்ளார்கள் என பாதுகாப்பு வட்டாரம் உறுதியாக நம்புவதாக மேற்படி பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதே வேளை விமானம் சுடப்பட்ட தினத்தன்று பம்பாயில் இருந்து கொழும்புத் துறை முகத்தை நோக்கி சென்று கொண்டிருந்த கப்பல் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்ட போது அதில் இருந்தவர்கள் இச்சம்பவங்கள் பற்றி தமக்கு எதுவும் தெரியாது எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

# குடாநாட்டில் 2 தாக்குதல்கள்
## சிப்பாய்கள் 3 பேர் பலி - படையினரின் வாகனங்கள் எரிப்பு

யாழ்குடா நாட்டில் சிறீலங்காப் படையினர் மீது இரு பெரும் தாக்குதல்களை விடுதலைப்புலிகள் 21.01.97 அன்று நடாத்தியுள்ளனர். மொத்தமாக 3 சிப்பாய்கள் இத் தாக்குதல்களில் கொல்லப்பட்டுள்ளனர்.

முதலாவது அதிரடித்தாக்குதல் அதிகாலை 3.45 மணி அளவில் வரணி சந்தைக்கருகாமையில் அமைந்திருந்த இராணுவ காவல் நிலை மீது மேற்கொள்ளப்பட்டது. இதில் இராணுவ சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டு மேலும் பலர் படுகாயப்படுத்தப்பட்டனர். காவல் அரணிற்குள் புகுந்த விடுதலைப்புலிகள் அங்கிருந்த ஆயுத தளபாடங்களை கைப்பற்றிக் கொண்டு இழப்பு ஏதுமின்றி தளம் திரும்பினர்.

இரண்டாவது தாக்குதல் கொக்குவில் சந்தியில் நடாத்தப்பட்டது. காலை 11.10 மணியளவில் மோட்டார் சைக்கிள் இராணுவப் பிரிவினர் ரோந்து வந்து கொண்டிருந்தபோது அவர்களைச் சுற்றிவளைத்துத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத் தாக்குதலில் இரு சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். அவர்கள் வந்த மோட்டார் சைக்கிள்களும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டு எரித்து நாசம் செய்யப்பட்டன.

தாக்குதல் ஆரம்பித்தவுடனேயே ஏனைய சிப்பாய்கள் தலைதெறிக்க ஓடித்தப்பினர். ஆயுதங்களைக் கைப்பற்றிக் கொண்டு விடுதலைப்புலிகள் அவ்விடத்தை விட்டுச் சென்ற பின்னர் அவ்விடத்திற்கு வந்த ஏனைய இராணுவத்தினர் சடலங்களையும் எரியுண்ட மோட்டார் சைக்கிள்களையும் எடுத்துச் சென்றனர்

# மட்டக்களப்பு பேய்த்தாளையில்
## இராணுவ ரோந்து நிர்மூலம்-7 படையினர் பலி

பேய்த்தாளை இராணுவ முகாமிலிருந்து மாலை 21.01.97 அன்று ரோந்து சென்ற இராணுவ அணியொன்று விடுதலைப்புலிகளின் அதிரடிப் பிரிவினரின் தாக்குதலுக்கு உள்ளானது. ரோந்து அணி முற்றாக சிதறடிக்கப்பட்டதுடன் 7 சிப்பாய்களும் இத் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற இத் தாக்குதலில் ஒரு A.K.L.M.G உட்பட பல ஆயுத தளபாடங்களும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன. இத் தாக்குதலில் புலிகளின் தரப்பில் இழப்பு ஏதும் இல்லை.

# மத்தியவங்கி குண்டு வெடிப்பு
## நினைவுகூரலுக்கு அனுமதி மறுப்பு

கடந்த வருடம் ஜனவரி 31ம் திகதி இடம் பெற்ற கொழும்பு மத்திய வங்கிக் குண்டு வெடிப்பில் உயிரிழந்தோரை நினைவு கூருவதற்கு மத்திய வங்கியின் அதிகாரபீடம் அனுமதி மறுத்திருப்பதாகத் தெரியவருகின்றது.

ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு இறந்த தமது சகாக்களுக்கு மத்திய வங்கியின் சக ஊழியர்கள் சமய பூசை ஒன்றினையும் நினைவு நிகழ்ச்சி ஒன்றினையும் நடத்துவதற்காக ஒழுங்குகள் செய்தபோது அதற்கான அனுமதியை வழங்க வங்கி நிர்வாக உயர் பீடம் மறுத்திருக்கின்றது. இவ் அனுமதி மறுப்பிற்கு பாதுகாப்பு காரணங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேற்படி அனுமதி மறுப்பினால் ஆத்திரமடைந்திருக்கும் வங்கி ஊழியர்கள், இது விடயமாக ஜனாதிபதி சந்திரிகாவிடம் முறையிட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

# குடாநாட்டுக்குள் ஊடுருவியுள்ள புலிகளின் விசேட படையணிகள்

யாழ்குடா நாட்டுக்குள் தற்போது ஏராளமான புலிகளின் விசேட படையணிகள் ஊடுருவியிருப்பதாக கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. அச் செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

ஏற்கனவே யாழ்க்குடா நாட்டின் பல பகுதிகளிலும் விடுதலைப்புலிகள் நிலை கொண்டிருப்பதாகவும், பல பகுதிகளை தமது கட்டுப்பாட்டிலேயே வைத்திருப்பதாகவும் தற்போது மேலும் பல விசேட படையணிகள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. யாழ்க்குடாவுக்குள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளேயே மிகவும் சர்வ சாதாரணமாக உலாவிவரும் புலிகள் தொடர்ந்து வரும் காலங்களில் இராணுவத்தினர் மீது பெரும் தாக்குதல்களை மேற்கொள்ளலாம் எனவும் கூறப்பட்டுள்ளது.

தற்போது அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் படையணிகளுக்கு புலிகளின் விசேட தளபதிகள் பலர் வழிநடாத்தலுக்காக அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ள மேற்படி பத்திரிகை, அண்மையில் சாவகச்சேரிப் பகுதியில் நடைபெற்ற மினி முகாம்கள் மீதான தாக்குதலை புலிகளால் சாவகச்சேரிப் பொறுப்பாளராக இருந்த பாப்பா என்பவரே வழிநடத்தினர் எனவும் குறிப்பிட்டுள்ளது.

விரைவில் யாழ்க்குடாவுக்குள் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தின் மீது பாரிய தாக்குதல்கள் மேற்கொள்ளப்படலாம் எனவும் அப்பத்திரிகை தனது செய்தியில் தெரிவித்துள்ளது.

வெகுவிரைவில்

புரவம்

# எங்களால் உங்களுக்கு ஆபத்து வரும் - ஈ.பி.டி.பியினருக்கு படை அதிகாரி தெரிவிப்பு

தற்போது யாழ் குடா நாட்டுக்குள் அரசியல் நடத்தச் சென்றிருக்கும் ஈ.பி.டி.பியினருக்கு புலிகளால் ஆபத்து வருகிறதோ இல்லையோ எமது படையினரால் ஆபத்து வரும் என யாழ்ப்பாணத்தில் படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பி அரசியல் பிரமுகர்கள் யாழ்ப்பாணத்தில் உலாவுவதற்கு அவர்களுடைய சுய பாதுகாப்பிற்கு சிறு ஆயுதங்கள் அனுமதிக்கப் பட்டிருந்ததாம். ஆனால் ஈ.பி.டி.பி அரசியல் பிரமுகர்களின் மெய்ப் பாதுகாவலர்கள் ஜீ-3 ரைபிள்களுடன் உலா வந்ததைத் தொடர்ந்தே மேற்படி படை அதிகாரிகள் தமது எச்சரிக்கையை விடுத்துள்ளனர். விடுதலைப் புலிகளுக்கும், உங்களுக்கும் வித்தியாசம் தெரியாத நிலையில் அவர்கள் உங்களைச் சுடுகிறார்களோ இல்லையோ எமது படையினர் உங்களைச் சுடவேண்டி ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

படை அதிகாரிகளின் எச்சரிக்கையைத் தொடர்ந்து பெரிய ஆயுதங்களை சுருட்டி வைத்து விட்டு கைத் துப்பாக்கிகளுடன் உலாவருகிறார்கள் ஈ.பி.டி.பியினர்.

இன்று முதல் (14.01.1997)
உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களுக்காக
INTERNET சேவை
TamilWeb International
http://www.tamilweb.com
உங்களுக்குத் தேவையான அனைத்துத் தேவைகளும் ஒரே இடத்தில்
★ தேனி தேடல் இயந்திரம் (Theni Search Engine)
★ உலகில் முதன் முதலாக தமிழில் Chat
★ International Tamil Directories
★ Webdesk (Discussion) ★ Tamil web-magazine
வர்த்தகர்களே!
Internetல் உங்கள் நிறுவனத்தை விளம்பரம் செய்திட எம்மை நாடுங்கள்
தொடர்புகளிற்கு: Tel / Fax: (+47) 56 18 02 15

வாகன சேவை
உங்கள் பொருட்கள், வீட்டுத் தளபாடங்கள் போன்றவற்றை
ஏற்றி இறக்கவும்
வெளியூர் பிரயாணம் போன்ற தேவைகளுக்கும்

ரவி: 01 48 76 51 90
06 07 62 26 89 / 01 42 23 23 10

லாச்சப்பலில்... உங்களின் தேவைக்காக எங்களின் சேவையினை ஆரம்பித்துள்ளோம்
நியூ சப்பல் ஸ்ரோர்ஸ்
"மளிகைப் பொருட்களின் மாளிகை"
உங்களுக்குத் தேவையான மளிகைப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள இன்றே விரையுங்கள்.
NEW CHAPELLE STORES
214, RUE DU Fbg. St. DENIS, 75010 PARIS - TEL: 01 40 36 20 35 / FAX: 01 40 36 20 36

# விமானி இல்லாத விமானத்தை விடுதலைப் புலிகள் கைப்பற்றினார்களா?

கடந்த 16.01.97 அன்று வட பகுதியில் காணாமல் போன, இஸ்ரேலில் தயாரிக்கப்பட்ட விமானி இல்லாத விமானம பற்றி பல சந்தேகங்கள் பாதுகாப்பு வட்டாரங்களில் எழுப்பப்பட்டுள்ளன.

கணணிக் கட்டுப்பாட்டில் (Remote Control) இயங்கும் இந்த வேவு விமானத்தை விடுதலைப் புலிகள் கைப்பற்றிச் சென்றிருக்கலாம் என்ற சந்தேகத்தையும் கொழும்பு பத்திரிகைகள் எழுப்பியுள்ளன.

உயரப் பறந்தவாறே தரையில் நடக்கும் நிகழ்வுகளை துல்லியமாக உடனுக்குடன் வீடியோ மூலம் பதிவு செய்து தரையில் உள்ள கட்டுப்பாட்டு நிலையத்திற்கு அதனை அனுப்பி வைக்கும் சக்தியை இந்த வேவு விமானம் கொண்டிருந்ததாகவும், வடக்கில் மேற்கொள்ளப்பட்ட பல குண்டுத் தாக்குதல்கான தகவல்கள் இந்த ஆளில்லாத வேவு விமானத்தின் மூலமே பெறப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இவ் விமானத்தை நம்பியே அண்மையில் இலக்குத் தவறாமல் தாக்கக் கூடிய வல்லமையுடைய 25 லட்ச ரூபா பெறுமதியான 'ஸ்மாட்' குண்டுகள் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை திடீரென காணாமல் போனதாகக் கூறப்படும் மேற்படி விமானத்தை அநாமதேய தகவல் மூலம் தமது கட்டுப் பாட்டுப் பகுதிக்குள் வரவழைத்த விடுதலைப் புலிகள், தமது சக்திவாய்ந்த கணணிக் கருவிகள் மூலம் அதனைத் தரையிறக்கி கைப்பற்றிக் கொண்டுள்ளதாகவும் கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

# சந்திரிகா மீது தாக்குதல் நடத்த பத்திரிகை நிருபர் முயன்றாரா?

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா பலாங்கொரம நகரில் பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிவிட்டு மேடையை விட்டு இறங்கி வரும்போது முதிய நபர் ஒருவர் வழியின் குறுக்காக நின்று சந்திரிகாவின் வருகையினை எதிர்பார்த்துக் காத்திருந்துள்ளார்.

இவரது நடமாட்டத்தினை அவதானித்த பாதுகாப்பு அதிகாரிகள் உடனடியாக அவ்விடத்திற்கு வந்து அவரைப் பலவந்தமாக அகற்ற முயன்ற வேளையில் அவர் உரத்துச் சத்தமிட்டு நான் ஒரு நிருபர். எச் காரணம் கொண்டும் இந்த இடத்தை விட்டு அகலமாட்டேன் எனக் கூறியுள்ளார். பாதுகாப்பு அதிகாரிகள் இவர் சந்திரிகா மீது தாக்குதல் நடத்த முயலப் போவதாக பீதியடைந்து அவரை அப்புறப்படுத்த பலவந்தத்தை பிரயோகித்துள்ளனர்.

இவ் இழுபறிச் சம்பவத்தை சிறிது நேரம் அவதானித்த சந்திரிகா ஏனைய பாதுகாப்பு அதிகாரிகள் மூலம் விபரத்தை கேள்விப்பட்டு பத்திரிகை நிருபர் என்பதை உறுதிப்படுத்தி பின் அவரை அருகே வர விடுமாறு பணித்துள்ளார்.

பலத்த பாதுகாப்புடன் சந்திரிகா அருகே போக அனுமதிக்கப்பட்ட நிருபர் நிலைமையை விளங்கப். படுத்தியதுடன் வயதான தனக்கு நேர்ந்த நிலைமையையும் எடுத்துரைத்துள்ளார்.

அவரை சமாதானப்படுத்திய சந்திரிகா, ஏதாவது தேவையானால் கேட்கலாம் எனக் கூறியுள்ளார். ஆனால் அந்த நிருபரோ தனக்கு எதுவும் தேவையில்லை எனக் கூறிவிட்டு பாதுகாப்பு அதிகாரிகளை ஏற இறங்கப் பார்த்துவிட்டு சென்றுவிட்டார்.

# புலிகளுடன் பேச்சு நடத்தினால் ஏராளமாக கேட்பார்கள் - *சிவசிதம்பரம்*

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டுமானால் விடுதலைப் புலிகளுடன் பேசியே ஆகவேண்டும் என எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்த கருத்தை முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் அஸ்ரப் மறுத்துரைத்திருக்கிறார். அஸ்ரப்பின் கருத்தினை ஆமோதித்து கருத்து வெளியிட்டிருக்கும் கூட்டணி தலைவர் சிவசிதம்பரம், விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தினால் அது வெற்றிபெற வாய்ப்பில்லை எனவும் தமிழ்க் குழுக்கள் அரசிடம் கேட்பதைவிட புலிகள் ஏராளமாக கேட்பார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் இனப் பிரச்சினை கொழும்பில் தொடர்பாக நடைபெற்ற கட்சிகளிடையே நடைபெற்ற ஒரு கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

# சுவர் இடித்த தந்தையும் மகனும் பரிதாப மரணம்

சிறீலங்கா இராணுவத்தினர் தங்கியிருந்துவிட்டுக் கைவிட்டுச் சென்ற கட்டிடம் ஒன்றின் சுவரை இடித்து கற்களை எடுத்துச் செல்ல முயன்று தந்தையும் மகனும் சுவர் இடிந்து விழுந்து நசுங்கி இறந்துள்ளனர்.

மட்டக்களப்பு வெல்லாவெளிப் பகுதியிலுள்ள நெற் களஞ்சியக் கட்டிடத்தின் சுவரை மேற்படி தந்தையும் மகனும் இடிக்க முயன்றபோது, சுவர் திடீரென்று பெரிய சத்தத்துடன் இடிந்து விழுந்ததாகக் கூறப்படுகின்றது.

இந்தக் கட்டிடச் சுவரில் இராணுவத்தினர் பதித்து வைத்துவிட்டுச் சென்ற பொறி வெடி வெடித்ததாலேயே சுவர் இடிந்து விழுந்ததாக மட்டக்களப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

# கொழும்புத் துறைமுகத்தில் மீண்டும் ஆயுதக் கப்பல்

கடந்த பல நாட்களாக கொழும்புத் துறைமுகத்தில் ஆயுதங்களுடன் நிறுத்தி வைக்கப் பட்டுள்ள ஒரு கப்பலில் இருந்து இதனை இறக்குவதில் இரு பகுதியினருக்கிடையே பெரும் சர்ச்சை ஏற்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

பாதுகாப்புப் படையினருக்காக அவற்றை கொள்வனவு செய்த நிறுவனம் அவ் ஆயுதங்கள் தரமற்றவை எனவும் அவற்றை இறக்க வேண்டாம் எனவும் குறிப்பிட்டிருக்கும் அதேவேளையில், பாதுகாப்பு வட்டாரத்துக்குள் வேறொரு குழுவினர் அவற்றை இறக்க வேண்டும் என அடம்பிடிக்கிறார்கள் எனக் கூறப்படுகிறது.

இதேவேளை கப்பல் துறைமுகத்தில் தரித்து நிற்கும் ஒவ்வொரு நாளும் ஏராளமான பணம் கட்டவேண்டி ஏற்படும் எனவும் அதனை ஆயுதத்தை இறக்குவதில் இழுபறிப் படும் இரு பகுதியினரும் கருத்தில் கொள்ளாதுள்ளனர் எனவும் கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

# பிரியங்காவை மனைவி என்றவர் கைது

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் மகள் பிரியங்காவை தனது மனைவி என்று கூறி டெல்லி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்த நபர் இந்தியப் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஆந்திரப் பிரதேசத்திலுள்ள இந்திரா காங்கிரஸ் மகளிர் அமைப்பைச் சேர்ந்த இரு பெண்களை அவமரியாதை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இந்த நபரைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

வி. இராமகிருஷ்ணன் கௌத் என்ற இந்த நபர் 1991ம் ஆண்டு நவம்பர் மாதம் 30ம் திகதி பிரியங்காவை திருமணம் செய்ததாகவும் அவரைத் தன்னுடன் வாழ அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் கோரி கடந்த 13ம் திகதி புதுடெல்லி நீதிமன்றத்திலே வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

ஆந்திர இந்திரா காங்கிரஸ் மகளிர் அமைப்பைச் சேர்ந்த இராஜலக்சுமி என்பவர் இது பற்றி தானும் தன்னுடைய தோழியும் அவரிடம் விசாரிக்கச் சென்றபோது, அவர் தம்மைத் தகாத வார்த்தைகளால் ஏசி அவமதித்துவிட்டார் என்றும் தமக்கு கொலைப் பயமுறுத்தல் விடுத்தார் என்றும் பொலிசில் முறைப்பாடு செய்ததை அடுத்தே அவரைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.


வாணன் வாகன சேவை

உங்களின் பிரயாணத்
தேவைகளுக்கும்
தளபாடங்கள் பொருட்கள்
ஆகியவற்றை ஏற்றி
இறக்கவும் எந்த
வேளையிலும்
தயாரான சேவை



வாணன் வாகன சேவை
தொடர்புகளுக்கு:
Tel: 42 55 29 35 / 48 33 47 54 / 06 09 26 88 35

வாகன சேவை

உங்கள் பொருட்கள்,
வீட்டுத் தளபாடங்கள்
போன்றவற்றை ஏற்றி
இறக்கவும்
வெளியூர் பிரயாணம்
போன்ற தேவைகளுக்கும்



ரவி (தனபால்):
01 42 43 70 63

சாந்தினி உணவகம்



அறுசுவை உணவுவகைகளை உடனுக்குடன் தயாரித்து வழங்குபவர்கள்!! திருமணம், பிறந்தநாள் கொண்டாட்டங்களுக்கு தேவையான சாப்பாட்டு வகைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்!

* மரக்கறிச் சாப்பாடு (5 மரக்கறி, பப்படம், மிளகாய், பாயாசம்) (50 சாப்பாடுகளுக்கு மேல்) 16F
* பிரியாணி (ஆடு, மாடு, கோழி) 19F
* பிறைட் றைஸ் 20F

விரைவில், வாடிக்கையாளர்கள் வசதி கருதி மிகக் குறைந்த விலையில் உணவு வகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்

RESTAURANT SHANTHINI
10, Rue Labat, 75018 PARIS.
M°: Marcadet Poissonniers - Tel: 01 42 58 71 19

# மன்னாரில் கடமையாற்றிய பொலீஸ்காரர் மத்திய கிழக்கிற்கு வந்தது எப்படி?

மன்னார் சிறீலங்கா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலீஸ்காரர் ஒருவர், தனது ஆயுதங்களை முஸ்லிம் இளைஞர் குழுவினரிடம் ஒப்படைத்துவிட்டு மத்திய கிழக்கு நாடொன்றுக்கு தப்பிச் சென்றுவிட்டதாக மன்னார் பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பொலீஸ்காரர் தனது ஆயுதங்களை ஒப்படைத்ததாக கூறப்படும் குழுவினர்மீது தற்போது பொலீசார் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப் போவதாகவும் அறிவித்துள்ளனர். இவர்களிடமிருந்த ஆயுதங்கள் யாவும் உப்புக்குளம் பள்ளி வாசலில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் பொலீசார் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை மன்னார் பொலீஸ் நிலையத்தில் கடமையாற்றிய பரமேஸ்வரம் என்ற பொலீஸ் கான்ஸ்டபிளின் தற்கொலைக்கும் இவர்களது ஆயுத திருட்டே காரணமென பொலீசார் கதையை கட்டவிழ்த்து விட்டுள்ளனர். ஆனால் சிங்களப் பொலீஸ்காரர் ஒருவர் தமிழரான பரமேஸ்வரத்தை சுட்டுக்கொன்று விட்டு அதை தற்கொலையாக காட்டியிருப்பதாகவே கூறப்படுகிறது.

# தமிழ் மீனவர் வெட்டிக்கொலை

முல்லைத்தீவு கடற் பகுதியில் சிறீலங்கா கடற்படையினர், தமிழ் மீனவர் ஒருவரின் தலையினைவெட்டிக் கொடூரமாகக் கொலைசெய்துள்ளனர். இவருடன் கூடச்சென்ற இருவருக்கு என்ன நடந்ததென்பது தெரியவில்லை. முண்டமான இவரது உடல் முல்லைக்கரையில் ஒதுங்கியுள்ளது.

இதேவேளை திருமலையில் 19 மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு வருவதாக தெரிய வந்துள்ளது.

# ஆயுதக் கப்பலின் வருகையை அவதானிக்கப் போன விமானமே வீழ்ந்தது - *சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு*

பூநகரி கடற் பிரதேசத்தில் காணாமல் போன சிறீலங்கா வான்படைக்குச் சொந்தமான இஸ்ரேலியத் தயாரிப்பான இட்ரோன் விமானம் புலிகளுக்கு ஆயுதங்கள் ஏற்றிக்கொண்டு வந்ததாக கூறப்படும் கப்பல் ஒன்று பற்றிய விபரங்களைத் திரட்டுவதற்காகவே உளவுப் பணிக்கு அனுப்பப்பட்டதாக விமானப் படையினர் தெரிவித்துள்ளனர்.

ஆயுதக் கப்பல் பற்றிய விபரங்கள் திரட்டுவதற்காக கடந்த 16-ம் திகதி மாலை 5.30 மணியளவில் இந்த விமானம் அனுப்பப்பட்ட போதிலும், சுமார் ஒரு மணித்தியாலத்தில் சகல தொடர்புகளும் துண்டிக்கப்பட்டதுடன் அது கடலில் வீழ்ந்ததாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விமானத்தினை தேடும் பணியில் பூநகரி கடற்பகுதியில் பல கடற்படைக் கலங்கள் ஈடுபட்டபோதும் அந்த விமானத்தினை கண்டுபிடிக்க முடியாமையால் அவை தமது தேடுதல் பணியினை கைவிட்டுள்ளன. இந்த விமானத்திற்காக பல மில்லியன் அமெரிக்க டொலர்களை சிறீலங்கா அரசு செலவிட்டுள்ளது.

# விழுந்து நொருங்கிய கிபீர் 700 தாக்குதல்களை நடத்தியது

அண்மையில் நீர் கொழும்புப் பகுதியில் விழுந்து நொருங்கிய கிபீர் விமானம் 700 தாக்குதல்களை தமிழீழப் பகுதியில் நடத்தியுள்ளதாகத் தெரியவருகிறது.

மூன்றாம் ஈழப்போர் ஆரம்பித்த பின் பல விமானங்கள் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதையடுத்து நவீன வசதிகள் கொண்ட 6 கிபீர் விமானங்கள் சிறீலங்கா அரசு இஸ்ரேலிடமிருந்து கொள்வனவு செய்திருந்தது.

நவீன கணனி தொழில் நுட்ப வசதிகளுடன் இணைக்கப்பட்ட இந்த விமானம் சமீப காலமாக தமிழீழப் பகுதிகளில் அதிகளவு சேதத்தை உண்டு பண்ணி வந்தது. சத்ஜய நடவடிக்கையின் போது இந்த ரக விமானங்கள் முக்கிய வான் வழித் தாக்குதல் கருவிகளாக செயற்பட்டு வந்தன என்பது குறிப்பிடத் தக்கது.

# இஸ்ரேலியர்களால் ஓட்டப்பட்ட கிபீர் குண்டு வீச்சு விமானங்கள்


சிறீலங்கா அரசு இஸ்ரேலிடமிருந்து கிபீர் விமானங்களை கொள்வனவு செய்த நாள் தொடக்கம் இஸ்ரேலிய விமானிகளே அவற்றை செலுத்தி வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த எட்டு மாத காலமாக இந்த விமாங்களை ஓட்டி வந்த அவர்கள் இம் மாதத் தொடக்கத்திலேயே சிறீலங்கா விமானப் படை விமானிகளிடம் கையளித்துள்ளனர்.

கணனித் தொழில்நுட்பத்துடன் இணைக்கப் பட்டிருந்த இந்த விமானத்தை இஸ்ரேலிய விமானிகள் செலுத்தும் போது சிறீலங்கா விமானிகள் அருகிலிருந்து பயிற்சி பெற்றதாகச் சொல்லப் படுகின்றது.

சிறீலங்கா விமானப்படை விமானிகள் அதை செலுத்த ஆரம்பித்த பின்னரேயே அவ் விமானம் விழுந்து நொருங்கியுள்ளது எனவும், சிறீலங்கா அரசு தனது வழக்கமான பாணியில் இயந்திரக் கோளாறு காரணமாகவே இந்த விமானம் விழுந்ததாகக் கூறியது இஸ்ரேலிய கிபீர் விமானத் தயாரிப்பாளர்களை அதிர்ச்சி அடைய வைத்திருப்பதாகவும் கிபீர் விமானத்தின் தொழில்நுட்ப வியலாளர்கள் சிறீலங்கா அரசின் இக் கூற்றுக்கு கடும் ஆட்சேபங்களை தெரிவித்திருப்பதாகவும் கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஓராண்டு நினைவாஞ்சலி



## அமரர் இராமநாதர் மாரிமுத்து

தோற்றம்: 04.08.1926 மறைவு: 06.02.1996

அன்பின் சிகரமாய் பண்பின் இருப்பிடமாய் பாசத்தின்
உறைவிடமாய் பாரினில் உதித்து ஏழு செல்வங்களைப்
பெற்றெடுத்து அன்பும் பாசமும் அள்ளி வழங்கி இன்முகத்துடன்
சீராட்டி வளர்த்த எம் அன்புத் தெய்வமே

அன்புடனும் பாசமுடனும் எம்மை வழிநடத்திவைத்து
எம்மைவிட்டுப் பிரிந்தாலும், என்றென்றும் எம்
நெஞ்சைவிட்டகலாத எம் அருமைத் தந்தையே உங்கள் குரல்
கேட்டு மலர்ந்திருந்த எம்மிதயம் உங்கள் சுவடும் இன்றி
ஏங்குதையா. எந்நாளும் பாதியிலே எம்மை விட்டுப்
போய்விட்டீர்கள். பாசத்தைக் காட்ட நாம் யாருமில்லை!
இறையடியே நிஜமென்று எண்ணினீர்களோ? ஆண்டவனடியில்
சேர்ந்து இன்றுடன் ஓராண்டு கடந்துவிட்டது. இம்மண்ணில்
எம்முடல் வாழும் மட்டும் உங்கள் அன்புத்திருமுகம் மறையாது.
உங்கள் ஆத்மா சாந்திக்காக அன்னானயும் மருமகன், மகள், பேத்தி,
உற்றார் உறவினருடன் மனோன்மணியிடம் பிரார்த்திக்கிறோம்.

தகவல்: ச. தேவராஜன் மஞ்சுளா
swiss

உங்கள் பிரிவால் துயரும்
மகள், மருமகன், பேத்தி

# 8 மாதங்களில் 11 விமானங்கள்-அதில் 9 நாட்களில் 4 விமானங்கள் வீழ்ந்தன

**கொழும்பிலிருந்து தமிழரசன்**

தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல்களை முறியடிக்க இருபது உலங்குவானூர்திகளையும், 800 படை வீரர்களையும் கொண்ட விசேட தாக்குதல் முறியடிப்பு படையணி ஒன்றை அமைப்பதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை இராணுவத் தலைமையகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் பதினைந்தாம் திகதி முதல் இருபத்தி நான்காம் திகதி வரையிலான ஒன்பது தினங்களில் சிறீலங்கா விமானப் படையினர் நான்கு விமானங்களை இழந்து விட்டார்கள். 16-ம் திகதி வியாழக் கிழமை உளவறியும் விமானம், 20-ம் திகதி திங்கட் கிழமை சீனத் தயாரிப்பான வை 12 ரக விமானம், 21-ம் திகதி கிபீர் ஜெட் குண்டுவீச்சு விமானம், 24-ம் திகதி பெல் 212 ரக குண்டு வீச்சு உலங்கு வானூர்தி, ஆகிய இந்த நான்கு விமானங்களின் இழப்பு பதினான்கு ஆண்டு காலத்தில் பெரும் திருப்பு முனையாக அமைந்து விட்டது என்றே கூறவேண்டும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்த பின்னர் பதினான்கு வாரகால போர் தவிர்ப்பு ஒப்பந்தம் அமுலில் இருந்தது. இந்தப்போர் தவிர்ப்பு ஒப்பந்தம் 1995-ம் ஆண்டு ஏப்ரல் 19-ம் திகதியுடன் முறிவடைந்தது. அன்றுமுதல் பதின்



னான்கு விமானங்களை சிறீலங்கா விமானப்படை இழந்துள்ளது. இவ் விமானங்களில் உளவறியும் விமானத்தினதும், கிபீர் குண்டு வீச்சு ஜெட் விமானத்தினதும் இழப்பே பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. கிபீர் இஸ்ரேலில் தயாரிக்கப்பட்ட நவீன குண்டு வீச்சு விமானமாகும். கடந்த வருடம் ஐநூறு கோடி ரூபா செலவில் இவ்வகை விமானங்கள் நான்கு வாங்கப்பட்டன. மணிக்கு 420 கிலோ மீட்டர் வேகத்தில் பறக்கும் இந்த ரக விமானங்கள் வடக்கிலும், கிழக்கிலும் குண்டு வீசி பல அழிவுகளை பொது மக்களுக்கு ஏற்படுத்தி வந்தன. தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் படையினரின் நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்ந்தது இவ் விமானங்களே!



சிறீலங்காவுக்கு விமானப்படை மாத்திரம் இல்லாதிருந்தால் வடக்கில் ஒரு அங்குல நிலத்தைக்கூட கைப்பற்றி இருக்க முடியாது. அந்த அளவிற்கு இந்த யுத்தத்தில் விமானப்படையினர் பங்குவகிக்கின்றனர்.

• • •

கடந்த வெள்ளிக்கிழமை 24.01.96 அன்று வெலிகந்தைக்கும், மதுறு ஓயாவிற்கும் இடையில் பறந்து கொண்டிருந்த பெல் 212 ரக ராட்சத குண்டு வீச்சு உலங்குவானூர்தி ஒன்று விடுதலைப் புலிகளின் மோட்டார்த் தாக்குதலால் சேதமடைந்தது. இரண்டு இயந்திரங்களைக் கொண்ட இவ் உலங்கு வானூர்தியில் ஒரு இயந்திரம் முற்றாகச் சேதமடைந்ததால் மிகவும் சிரமத்திற்கு மத்தியில் விமானி அவ் உலங்குவானூர்தியை ஹிங்கிராங்கொடை விமானத்தளத்தில் இறக்கியுள்ளார். இவ் உலங்குவானூர்தியைத் திருத்தினாலும் பாவிக்க முடியாது என விமானப்படையின் தொழில் நுட்பப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

காணாமல் போன உளவு விமானத்தைப் பற்றியும், கிபீர் குண்டு வீச்சு ஜெட் விமான விபத்து பற்றியும் விசாரணை செய்ய இஸ்ரேலில் இருந்து விமானப்படைத்துறை சம்பந்தப்பட்ட நிபுணர் குழு ஒன்று கொழும்பு வர இருக்கின்றது. கிபீர் குண்டு வீச்சு ஜெட் விமான விபத்து குறித்து விசாரணை நடத்த முன்னாள் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் ஹரிகுணத்திலகாவின் மகன் தலைமையிலான விசாரணைக்குழு ஒன்றை விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் ஒலிவர் குணசிங்கா நியமித்துள்ளார்.

விமானங்களின் இழப்புக்கள் இப்படி இருக்க, இவ் வருடம் ஜனவரி மாதம் முதல் 24 நாட்களில் பரந்தன், ஆனையிறவு இராணுவ முகாம்கள், கெப்பிற்றிக் கொல்லாவ பொலிஸ் காவல் நிலையம் உட்பட சுமார் பதின்மூன்று தாக்குதல்களை விடுதலைப் புலிகள் நடத்தியுள்ளனர். இத் தாக்குதல்களில் [illegible]படைகளையும், பொலிசா[illegible] 500-ற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். பல கோடி ரூபா பெறுமதியான ஆயுத தளபாடங்களை படையினர் இழந்துள்ளனர். யுத்த வரலாற்றில் மறக்க முடியாத மாதமாக ஜனவரி மாதமும் அமைந்துவிட்டது.

• • •

யுத்த நிலமை இப்படி இருக்க கடந்தவாரம் சீனாவில் இருந்து ஆயுதம் ஏற்றிய கப்பல் ஒன்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்து. இக் கப்பலில் கனரக ஆயுதங்கள் வந்தன. கடந்த டிசம்பர் மாதமும் சீனாவில் இருந்து ஆயுதக்கப்பல் வந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சிறீலங்கா கடற்படையின் புதிய தளபதியாக 49 வயதுடைய வைஸ் அட்மிரல் சிசில் திசேரா கடந்த திங்கட்கிழமை பதவிப்பிரமாணம் செய்துள்ளார். வத்தளையைப் பிறப்பிடமாகக் கொண்ட கிறிஸ்தவரான இவர், கடற்படையை மறு சீரமைப்பதே தமது முதற் பணி எனத் தெரிவித்துள்ளார்.

# அரசின் தீர்வுத்திட்டம் நாட்டை கூறுபோடும் குண்டு - ஜே.வி.பி

இனப்பிரச்சினைக்கு அரசு தற்போது முன்வைத்துள்ள அரசியல் தீர்வுத் திட்டம் நாட்டைக் கூறுபோடும் குண்டு என அண்மையில் கொழும்பில் நடைபெற்ற ஜே.வி.பி பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் அக் கட்சியின் செயலாளர் ரில்வின் த சில்வா குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நாட்டில் இன மோதல் இருப்பதாகவும் அதனை தீர்த்துவைக்க தாம் முயற்சி எடுப்பதாகவும் அமைச்சர் பீரிஸ் குறிப்பிடுகிறார். உண்மையில் நாட்டைச் சீரழிக்கும் பொருளாதார நிலையை மூடி மறைப்பதற்காகவே அரசு தீர்வுத் திட்ட நாடகம் ஆடுகிறது எனக் குறிப்பிட்ட அவர், நாங்கள் அனைவரும் இதனை எதிர்க்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

ஒரு இறாத்தல் பாணின் விலையைக் குறைக்க முடியாத அரசாங்கம் எப்படி இனப் பிரச்சினையைத் தீர்க்கப் போகிறது எனவும் கேள்வி எழுப்பிய அவர் இந்தப் பிரச்சினையை நாங்கள் தீர்த்து வைக்கிறோம். அவர்கள் களனிப் பாலத்தில் இருந்துகொண்டு அதனைப் பார்க்கட்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஈழம் வாதிகளுடைய விருப்பத்தை நிறைவேற்றிவைக்க சிங்கள மக்களிடம் அரசு அனுமதி கேட்கிறது எனவும் இதனை எப்போதும் நாம் அனுமதிக்க முடியாதது என்றும் அவர் குறிப்பிட்டார். இன்றைய அரசினை தோற்கடிக்க தாம் தயாராகி விட்டதாகவும் அவர் அங்கிருந்து சூளுரைத்துள்ளார்.

# மீண்டும் கூட்டுப்படை தலைமையகம் ?

கூட்டுப்படை தலைமையகத்தை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமென பாதுகாப்பு வட்டாரம் அரசினைக் கோரியிருப்பதாக தெரியவருகிறது.

கடந்த ஆட்சிக் காலத்தில் இயங்கிவந்த கூட்டுப்படை தலைமையகம் சந்திரிகா ஆட்சியின் கீழ் கலைக்கப்பட்டு பின்னர் நடவடிக்கைச் செயலகமாக அது மாற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அண்மைக்காலமாக விடுதலைப் புலிகளின் தாக்குதல்களால் படையினருக்கு பாரிய இழப்புக்கள் ஏற்பட்டு வருவதாகவும் அதற்குச் சரியான தாக்குதல் நடவடிக்கை செயலகம் இல்லாமையே காரணமெனவும் பாதுகாப்பு வட்டாரத்தினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மீண்டும் கூட்டுப்படைத் தலைமையகத்தை உருவாக்கி அதன் மூலம் எதிர்காலத்துத் தாக்குதல் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது. கூட்டுப்படைத் தலைமையகத்திலிருந்து அதிகாரம் வாய்ந்த கட்டளைகள் பிறப்பிக்கப்படும்போது படையினர் தமது தாக்குதல்களை விரைந்து துரிதமாக நடத்த அது வழி சமைக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது.

# இராணுவத்திற்கு ஆட்சேர்க்க புதிய வீடியோ முயற்சி

இராணுவத்துக்கு ஆட்சேர்க்கும் பாதுகாப்பு அமைச்சின் தொடர்ந்த முயற்சிகள் தோல்வியையே தழுவிச் செல்கின்ற வேளையில் ஆட்சேர்ப்புக்காக புதிய முயற்சி ஒன்று மேற்கொள்ளப்படுவதாக தெரியவருகிறது. சிறீலங்கா இராணுவத்தின் வாசகங்கள் அடங்கிய, 15 பாகங்களைக் கொண்ட வீடியோ நாடா ஒன்றினை தயாரிக்கும் முயற்சியில் பாதுகாப்பு வட்டாரங்கள் இறங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை காலமும் அரசு தனது வெகுசனத் தொடர்பு சாதனங்கள் அனைத்தையும் படையினரை திரட்டுவதற்காக பிரச்சார சாதனமாக பயன்படுத்தி வந்த போதிலும் எதிர் பார்த்த பலன் கிடைக்கவில்லை எனத் தெரியவருகின்றது.

தற்போது தமது புதிய முயற்சியாக சுமார் 52 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் வீடியோ விவரணப்படம் ஒன்றினை தயாரிப்பதில் பாதுகாப்பு வட்டாரங்கள் தீவிரமாக இறங்கியுள்ளதாக கூறப்படுகின்றது.

பாரிஸ் லாசப்பலில்

## தர்ஷனா உணவகம்



நீங்கள் விரும்பிய சுத்தமான, சுவையான இலங்கை, இந்திய அறுசுவை உணவு வகைகளை சுவைத்து மகிழ்ந்திடவும் அனைத்துவிதமான உணவு வகைகளையும் ஓடருக்குப் பெற்றுக்கொள்ளவும் இன்றே நாடுங்கள்

23, Rue Perdonnet, 75010 Paris. - Tel: 01 40 05 08 36 / 06 80 02 93 41

# வான்பரப்பில் ஆதிக்கத்தை இழக்கும் விமானப்படை


சிறீலங்கா விமானப் படை தனது சரித்திரத்திலேயே மிகக் குறுகிய காலத்திற்குள் அதாவது ஐந்து நாட்களுக்குள் தனது மிகவும் பெறுமதி மிக்கதும், சக்தி கொண்டதுமான மூன்று கலங்களை இழந்திருக்கிறது. முதலாவதாக கடந்த பதினாறாம் திகதி அண்மையில் இஸ்ரேலில் இருந்து வாங்கப்பட்ட 600.000 அமெரிக்க டொலர் பெறுமதியான "DRONE" வகையைச் சேர்ந்த தன்னியக்க வேவு விமானம் காணாமல் போனது. கடந்த வருடம் பல விமானப் படை ஆய்வாளர்களது எதிர்ப்பையும் மீறி விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தை கவனிக்கவென வாங்கப்பட்டது தான் இந்த "DRONE" எனும் தன்னியக்க விமானம். 1990 ஆண்டு வளைகுடா யுத்தத்தின்போது ஈராக் படைகளின் நடமாட்டங்களை அவதானிக்க இது போன்ற நூற்றுக்கணக்கான தன்னியக்க விமானங்கள் பயன்படுத்தப்பட்டன. இவைகளில் 58 விமானங்கள் ஈராக்கிய படைகளால் சுட்டு வீழ்த்தப்பட்டன. இந்த விமானம் தரைக் கட்டுப்பாட்டு நிலையத்தில் உள்ள தொலைக்காட்சித் திரைகளின் மூலமாகவும் சென்சார் கருவிகளாலுமே கட்டுப்படுத்தப்படுகின்றது. கடந்த 16 ஆம் திகதி வவுனியா கட்டுப்பாட்டு நிலையப் பகுதியில் இருந்து விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பலின் வருகையைக் கவனிக்க அனுப்பப்பட்ட இவ் விமானம் ஊர்காவற்துறைப் பகுதியில் பறந்துகொண்டிருந்த போதே இறுதியான தொடர்பு கிடைத்துள்ளது.

அதன் பின் அதற்கு என்ன நடந்தது என்பது அறிய முடியவில்லை. பாதுகாப்பு அமைச்சு, தொழில்நுட்பக் கோளாறு காரணமாக பூநகரிப் பகுதியில் கடலில் அது வீழ்ந்துள்ளது என்று கூறினாலும் கொழும்புப் பத்திரிகை ஒன்று பாலைத்தீவுப் பகுதியில் விடுதலைப் புலிகள் அதனை சுட்டு வீழ்த்தியுள்ளதாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக கூறியுள்ளது. அதே வேளை வேறொரு பத்திரிகை வன்னிப் பகுதியில் விடுதலைப் புலிகள் அதனைக் கைப்பற்றியுள்ளதாக அவர்களது தொலைத் தொடர்புத் தகவல்கள் கூறியுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் நடந்து நான்கு நாட்களின் பின் அதாவது 20-ம் திகதி விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் ஏற்றிக் கொண்டு ஒரு கப்பல் வடகிழக்குக் கடலில் வந்துகொண்டிருப்பதாக ஒரு தகவல் பாதுகாப்பு அமைச்சுக்கு கிடைத்தது. இதனைத் தொடர்ந்து அநுராதபுரத்திலுள்ள வட பிராந்திய விமானப் படைத் தலைமையகம் உசார்ப்படுத்தப்பட்டது. அங்கிருந்து பலாலிக்கு கிடைத்த அறிவித்தலைத் தொடர்ந்து மூன்று விமானப் படைவிமானிகளும் ஒரு கடற்படை அதிகாரியும் கொண்ட குழு Y-12 விமானமொன்றில் அன்றைய தினம் அதிகாலை 3.30 மணியளவில் கண்காணிப்பு மேற்கொள்ளப் புறப்பட்டார்கள். பௌர்ணமிக்கு மூன்று நாட்களே இருந்த படியால் வானம் மிகத் தெளிவாக இருந்தது. அதிகாலை சுமார் 5.00 மணியளவில் தாம் ஒரு கப்பலை அவதானித்துள்ளதாயும் அதனைக் கண்காணிப்பதாயின் மேலும் கீழே இறங்க வேண்டியுள்ளதாயும் அவர்கள் கூறியுள்ளார்கள். அதன்பின் மறுநாள் காலைவரை எவ்வளவு முயன்றும் Y-12 இன் தொடர்பு கிடைக்கவில்லை. வேறு விமானப்படை விமானங்கள் குறிப்பிட்ட இடத்திற்கு சென்று தேடுதல் நடத்திய போதும் அப்பகுதியில் எந்தவொரு கப்பலையும் காணமுடியவில்லை. இந்தியக் கரையோர ரோந்துப் படகுகள்; விமானங்களும், சிறீலங்காவின் விமானங்கள்; கப்பல்களும் தேடிய போதும் அப்பிராந்தியத்தில் எந்தவித விமானச் சிதைவுகளும் காணப்படவில்லை. இதற்கும் இயந்திரக் கோளாறு காரணம் என்று கூறப்பட்டது. ஆனாலும் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளை மேற்கோள்காட்டி ஒரு பத்திரிகை தனது கட்டுரையில் சந்தேகத்துக்கு இடமான முறையில் காணப்பட்ட கப்பலை அவதானிக்க 500 அல்லது 700 அடிகள் உயரத்தில் Y-12 பறந்த போது விடுதலைப்புலிகளின் படகுகளால் சுடப்பட்டிருக்கலாம் என எழுதியுள்ளது. காணாமல் போன Y-12 விமானமானது சீனாவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டதாகும். இவ் விமானம் 18 இருக்கைகளைக் கொண்டதாயும் ஏவுகணை எதிர்ப்பு சாதனங்கள் பொருத்தப்பட்டுமுள்ளது. உண்மையில் இவ் விமானங்கள் கரையோரப் பாதுகாப்பிற்கு பாவிக்கப்படுவதில்லை என்ற போதிலும், ஏன் இவ்விமானம் கண்காணிப்புக்கு அனுப்பப்பட்டது? என்பதில் விமானப் படை அதிகாரிகள் குழம்பிப் போயுள்ளனர்.

## வரலாற்றில் இல்லாத பேரிழப்பு

### ஈழப்போர் III இன் விமான இழப்புக்கள்




நடந்து முடிந்த இரண்டு விமானச் சம்பவங்களையிட்டு கவலைப்பட்டுக்கொண்டிருந்த அரச அதிகாரிகளுக்கு, அடுத்த 35 ஆவது மணிநேரம் இன்னுமொரு அதிர்ச்சிச் செய்தி கிடைத்தது. கொழும்பு கட்டுநாயக்காவில் இருந்து புறப்பட்ட கிபீர் குண்டு வீச்சு விமானம் மேலெழுந்து ஐந்து நிமிடங்களுக்குள்ளாகவே நீர்கொழும்புக் கடலேரியில் விழுந்து நொருங்கியது.

சிறீலங்காவின் விமானப் படை வரலாற்றிலேயே சந்தித்த மிகப் பெரிய இழப்பென்று இது கருதப்படுகிறது. சிறீலங்காவின் விமானப் படைக்காக அரசு கடந்த வருட ஆரம்பத

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

The best in quality
the very best in price
M.R. MODE collection

எம்.ஆர். மொட் கொலெக்ஷன்

3-வது ஆண்டு நிறைவை முன்னிட்டு
15.02.97 விசேட மலிவு விற்பனை

நேரம்: காலை 9.00 - பிற்பகல் 16.00 மணி

பட்டு, பாவாடை, புது விதமான பஞ்சாபி சூட், குழந்தைகளுக்கான நீட்டுப்பாவாடை, பாட்டி சூட் கொலெக்ஷன் ஆட்பனாரன், கொட்டன் சில்க், சொந்தத் தயாரிப்பில் உருவாக்கிய புதுவிதமான பனாரஸ், முத்து பனாரஸ், கூறை ஆகியவற்றை நீங்கள் விரும்பிய வண்ணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

Taunus Str.52-60
60328, Frankfurt/M
Tel:/Fax: 069/251308



(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் இஸ்ரேலிய விமான நிறுவனத்திடமிருந்து ஆறு கிபீர் குண்டு வீச்சு விமானங்களை வாங்கியது. இவைகள் ஒவ்வொன்றும் ஏறக்குறைய 5.000 கிலோ குண்டுகளுடன் வன்னிப் பிராந்தியத்தில் குண்டு வீசுவதற்காக கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டன. சுமார் ஐந்து நிமிடங்களில் இந்த விமானம் 700 அடி உயரத்தில் நீர்கொழும்புப் கடலோரப்பகுதியில் பறந்து கொண்டிருந்த வேளை அதில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டதாம். எதுவும் செய்யமுடியாத நிலையில் விமானி "பாரசூட்" கருவியின் உதவியுடன் கீழே குதித்து உயிர் தப்பியுள்ளார். அத்துடன் பக்கத்தில் பறந்துகொண்டிருந்த மற்றைய KFIR தனது பயணத்தைத் திருப்பி தளம் திரும்பியது. அப் பகுதியில் இருந்து இவ் விமானத்தின் உடைந்த பாகங்களை கடற்படையினர் மீட்டுள்ளனர். இவ்விமானம் கடலில் வீழ்ந்ததால் அதிலிருந்த குண்டுகள் எதுவும் வெடிக்கவில்லை. இதுவே அருகிலுள்ள மக்கள் குடியேற்றத்தின் மேல் விழுந்திருந்தால் பாரிய உயிர்ச்சேதம் எறபட்டிருக்கும் எனச் சொல்லப்படுகிறது.

இந்தக் கிபீர் விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்ட காலம் முதல் கடந்த ஜனவரி முதலாம் திகதிவரை சிறீலங்கா விமானிகள் இஸ்ரேலிய விமானிகளால் பயிற்றப்பட்டு வந்துள்ளனர். அதனால் அக்காலப் பகுதியில் KFIR விமானங்கள் இஸ்ரேலிய விமானிகளாலேயே செலுத்தப்பட்டு வந்துள்ளன. இவ் விமானம் உள்ளூர் விமானிகளால் பொறுப்பேற்கப்பட்டு மூன்று வாரங்களுக்குள்ளாகவே விபத்து ஏற்பட்டுள்ளது. இதற்கும் இயந்திரக் கோளாறே காரணமாக்கப்பட்டுள்ளது.

ஐந்து நாட்களுக்குள் நடந்த மூன்று விமானச் சம்பவங்களும் விமானிகளையும் விடுத்து, அது சுடப் பட்டிருக்கலாம் என்ற சந்தேகங்களையும் விடுத்து; விமானப்படை பொறியியலாளர்களை குற்றம் சாட்டியுள்ளது தலைமைப்பீடம். இக் குற்றச் சாட்டிற்கு பதிலளித்த ஒரு விமானப்படை பொறியியலாளர், ஒவ்வொரு விமானமும் கடலுக்குள் விழும்போதோ, சுட்டு வீழ்த்தப்படும்போதோ அதன் பொறுப்பு பொறியியலாளர்கள் மேல் சுமத்தப்படுகின்றது. ஆகவே பொதுமக்கள், விமானப் படையின் பொறியியல் துறையினர் பொறுப்பற்ற முறையில் நடப்பதால்தான் இவ் வகையான விபத்துக்கள் ஏற்படுகின்றன என நினைக்கிறார்கள். ஆனால் நாம் விமானிகள் எவ்வளவு பொறுப்புடன் செயலாற்றியிருக்கிறார்களோ அதைவிட பொறுப்பு அதிகம் மிக்கவர்கள். அரசின் சுயநலத்தினாலும், தேவையற்ற நடவடிக்கையாலுமே இவ்வாறான பொருள் இழப்புக்கள் ஏற்படுகின்றன என்றார்.

ஈழப் போரின் இரண்டாவது கட்டத்தில்தான் விமானப் படை தனது முதலாவது விமானத்தை இழந்தது. இயக்கச்சிப் பகுதியில் வைத்து 1992 ஆம் ஆண்டு ஜூலை 5-ம் திகதி "பலவேகய" இராணுவ நடவடிக்கையின்போது தமிழ் மக்களால் "சகடை" என அழைக்கப்பட்ட சீன Y8 விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. ஆனாலும் ஈழப் போர் மூன்றின் போதே மிக அதிக எண்ணிக்கையான விமானங்களை சிறீலங்கா விமானப் படை இழந்தது. 95-ம் ஆண்டு ஏப்ரல் 28 ஆம் திகதி அவ்ரோ இராணுவ போக்குவரத்து விமானம் பலாலிப் பகுதியில் சுட்டு வீழ்த்தப்பட்டது. மறுநாள் மற்றுமொரு அவ்ரோ விமானம் அதே பகுதியில் வைத்து சுட்டு வீழ்த்தப்பட்டது. அதே ஆண்டு ஜூலை மாதம் 9-ம் திகதி "புக்காரா" குண்டு வீச்சு விமானம் சண்டிலிப்பாய் பகுதியில் வைத்து சுட்டு வீழ்த்தப்பட்டது. செப்டம்பர் 13 ஆம் திகதி உக்ரேன் தயாரிப்பு AN32 மர்மமான முறையில் நீர் கொழும்புக் கடலில் விழுந்தது. நவம்பர் மாதம் 18 ஆம் திகதி மேலும் ஒரு Y-8 விமானம் பலாலிக்கு அருகில் கடலில் வைத்து சுடப்பட்டது. தொடர்ந்து 23 ஆம் திகதி காரைநகர் பகுதியில் AN32 விமானம் சுடப்பட்டது.

1996-ம் ஆண்டு ஜனவரி 22-ம் திகதி MI17 ரக துருப்புக் காவும் உலங்குவானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்டது. அதன் பின்னர் நீண்டகாலமாக எதுவும் நடைபெறாத நிலையில் முல்லைத்தாக்குதலில் ஆறு உலங்கு வானூர்திகள் சேதமடைந்தன. பின்னர் கடந்த டிசம்பர் 7 ஆம் திகதி ரத்வத்தையுடன் சென்ற உலங்கு வானூர்தி BEL 212 வவுனியாவில் கைவிடப்பட்ட போது விடுதலைப்புலிகள் அதனைத் தகர்த்தனர். இப்போது இழந்த விமானங்களுடன் சேர்த்து விமானப்படை ஈழப்போர் மூன்றில் பதினோரு விமானங்களை இழந்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அத்துடன் அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட MI24 உலங்கு வானூர்திகள் 6 இல், மூன்று தாக்குதல்களினால் இயங்க முடியாத நிலையில் உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மூன்று விமானங்களையும் சிறீலங்கா இழந்ததால் அதற்கு ஏற்பட்டுள்ள இழப்பு 296.4 மில்லியன் ரூபாய்களாகும். அதைவிட இம் மாதம் ஆரம்பத்தில் பரந்தனில் அரசு இழந்தது 40 மில்லியன் ரூபாய்களாகும். ஆக இவ்வருடம் ஆரம்பத்தில் இருந்து மூன்று வாரங்களுக்குள் அரசு 336.4 மில்லியன் ரூபா பெறுமதியான தளபாடங்களை இழந்துள்ளது. தற்போது விடுதலைப்புலிகள் சிறீலங்கா அரசுக்கு ஆகக்கூடிய இழப்புக்களை இராணுவ ரீதியாகவும், அரசியல், பொருளாதார ரீதியாகவும் கொடுப்பதை இலக்காகக் கொண்டுள்ளனர். இதே காலப்பகுதியில் இறந்த படையினரின் எண்ணிக்கையும் கொஞ்சமல்ல. கடந்த வருடமும் இவ் வருடத்தின் மூன்று வாரங்களிலும் நடந்தேறிய சம்பவங்களாலும் அரசாங்கம் இன்னமும் விடுதலைப் புலிகளுக்கு சரியான பதிலை அளிக்கவில்லை என்றும் இதே முறை தொடர்ந்தால் நாடு அதனை பாதாளத்தில் மூழ்கிவிடும் என்றும் கூறுகிறார் கொழும்பின் விசேட கட்டுரையாளர் ஒருவர்.

- பண்ணையார் -

# பிரச்சனையில் தலையிட மாட்டோம்

- குஜ்ரால் -

# ஒப்பந்தத்தை அமுல்ப்படுத்த உதவுங்கள்

- தமிழ் குழுக்கள் -

இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்திரகுமார் குஜ்ரால் கொழும்பு தமிழ்க்குழுவினரை இந்திய தூதரின் வாசல் ஸ்தலத்தில் வைத்து சந்தித்தபோது சிறீலங்காவின் இனப் பிரச்சினையில் இந்தியா தலையீடு செய்வதற்கான காரணங்கள் ஏதும் தற்போதைக்கு கிடையாது என திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர்.

ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.பி.டி.பி, ஈரோஸ், புளொட் ஆகிய தமிழ் குழுவினர் ஒட்டு மொத்தமாக இந்தியத் தலையீடு வேண்டுமென கோரிக்கை விடுத்த போதே மேற்படி தனது முடிவினை குஜ்ரால் தெரிவித்துள்ளார்.

சுமார் 40 நிமிடங்கள் நடந்த இச் சந்திப்பினால் தமிழ்க் குழுக்கள் யாவும் திருப்தியற்ற நிலையிலேயே காணப்பட்டுள்ளன. இந்திய அரசினை நம்பியே தாம் ஜனநாயக(?) நீரோட்டத்தில் இணைந்ததாகவும். ஆனால், தற்போதை/ இந்தியாவின் போக்கு தமக்கு மிகுந்த கவலையைத் தருவதாகவும் தெரிவித்த தமிழ் குழுக்கள் எப்படியாவது இந்திய_சிறீலங்கா ஒப்பந்தத்தின் அடிப்படையிலாவது தமக்கு இந்தியா உதவி வழக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை அமைச்சர் குஜ்ரால், கண்டி தலதா மாளிகைக்கு "சாரநாத்" புத்தர் சிலையொன்றினை அன்பளிப்புச் செய்வதற்காக அங்கு நேரடியாகச் சென்றார். இவருடன் கூடவே வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் சென்றிருந்தார்.

# பீற்றர் கெனமன் காலமானர்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் ஆரம்பகால உறுப்பினரும், இடதுசாரி இயக்கத்தின் முன்னோடி எனக் கருதப்பட்டவருமான திரு. பீற்றர் கெனமன் கடந்த வியாழக்கிழமை (23.01.97) கொழும்பில் சுகவீனம் காரணமாக தமது 80-வது வயதில் காலமானார்.

பரங்கி இனத்தவரான கெனமன் மும்மொழிகளிலும் புலமையுள்ளவர். அத்துடன், சிறந்த மேடைப் பேச்சாளருமாவார். தனது ஆரம்பக் கல்வியை றோயல் கல்லூரியிலும், பின்னர் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலும் கலைத் துறையில் பயின்றவர்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டபோது அதன் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டதுடன் கெனமனின் முழுநேர அரசியல் வாழ்வு ஆரம்பமானது.

1947-ம் ஆண்டு முதல் 1977-ம் ஆண்டு வரையில் கொழும்பு மத்திய தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர். 70ம் ஆண்டு காலப் பகுதியில் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையிலான அரச அமைச்சரவையில் அங்கம் வகித்தவர். கூட்டப் பொருட்கள் கூட்டுத்தாபனம் இவராலேயே ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தொழிற்சங்கப் போராட்டங்கள் பலவற்றில் கலந்து கொண்ட கெனமன் சில வருடங்களுக்கு முன்னர் அரசியலிருந்து ஓய்வு பெற்றார்.

ஆரம்ப காலத்தில் இவர் பத்திரிகைத் துறையில் ஈடுபாடு கொண்டு கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# மகர சிறைச்சாலையில் போதை மருந்துகள் தாராளம்

மகர சிறைச்சாலையிலுள்ள கைதிகளுக்கு போதை மருந்துகள் தாராளமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. சிறைக்காவலர்களின் அனுமதியுடன் கொழும்பு பாதாள உலகின் குற்றவாளிகளே இந்த போதை மருந்து விற்பனையை செய்து வருகின்றனர்.

"சரத்" என்று அழைக்கப்படும் இந்த போதைமருந்து மிகவும் கொடிய நச்சுத்தன்மை வாய்ந்தது. ஹெரோயினுடன் அபினை கலந்தே இது செய்யப்படுகிறது.

கைதிகளைப் பார்வையிடும் நேரத்தில் உள்ளே வரும் இந்த போதை விற்பனை குழுக்கள், அவர்களுக்கு இவற்றை கொடுத்துவிட்டுச் சென்று விடுகின்றன. சிறைக்காவலர்களும் இக் குழுவினருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுக்கின்றனர். இந்த போதை மருந்து விற்பனை மூலம் மாதாந்தம் சுமார் ஒரு இலட்சம் ரூபா வரை கைதிகளிடமிருந்து அவர்கள் பெற்று வருகின்றனர்.

இவ்வாறு போதை மருந்து விற்பனை செய்த ஒரு குற்றவாளியை தாம் கைது செய்திருப்பதாக தெரிவித்த ராகமை பொலிசார் சிறை அதிகாரிகள் மீதும் விசாரணைகள் நடைபெறுவதாக குறிப்பிட்டுள்ளனர்.


## பரத நாட்டிய அரங்கேற்றம்



வானதி வாணி நர்த்தனாலய
அதிபர் 'நாட்டியத் தாரகை'
திருமதி வானதி தேசிங்குராஜா
அவர்களின் மாணவியும்
திருச்செல்வம் தம்பதிகளின்
புதல்வியுமான
செல்வி துஷாந்தி திருச்செல்வம்
அவர்களின் பரதநாட்டிய
அரங்கேற்றம் 02.02.1997
ஞாயிற்றுக்கிழமை மாலை 16.00
மணிக்கு Adelbert Stifter
Gymnasium, Leonhartstr.8 (Neben
Burgerhaus), 44575 Castrop-
Rauxel எனும் இடத்தில்
நடைபெறவுள்ளது.

## BAIL A CEDER

Boutique Vitrine
13m²
Bail 3/6/9 50m²
Loyer: 6703Frs (Ht)
Tous commerces sauf rest.
Prix: 250,000Frs
55, Bld Barbes,
75018 Paris.
Tel: 01 42 23 02 27

# கனவுலகிலிருந்து மீளாத அரசும் யதார்த்தத்தை உணரும் சிங்கள மக்களும்

ஸ்ரீலங்காவில் இனப் பிரச்சினைக்கு தீர்வொன்று காணப்படுவதானால் அது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பங்களிப்பின் மூலம் மட்டுமே சாத்தியமாகும். அதனை விடுத்து மற்றைய கொழும்புத் தமிழ்க் குழுக்களின் உதவியுடன் சிறீலங்கா அரசு ஏதாவது தீர்வினைக்காண முற்படுமானால் அது எந்தவிதத்திலும் சாத்தியமாகாது என்பதை தென் இலங்கையில் பெரும்பான்மைக் கட்சிகள் பலவும் இறுதியாக கூறியுள்ளன. இதே போன்ற கருத்துக்களையே சர்வதேசமும் கூறி வருகிறது. இப் பிரச்சினையில் தீர்வு காண்பதற்கு மூன்றாவது தரப்பொன்றின் மத்தியஸ்தம் அவசியம் என காணும் பட்சத்தில் பல நாடுகள் மத்தியஸ்தம் வகிக்கவும் தயாராகியுள்ளன.

ஆனால் சிறீலங்கா அரசாங்கமோ விடுதலைப் புலிகள் பங்குபற்றாத, அவர்கள் புறக்கணிக்கப்பட்ட நிலையில் ஒரு விந தீர்வொன்றை கொழும்பு "ஜனநாயக" தமிழ்க் குழுக்களின் உதவியுடன் வெளியிடவே கங்கணம் கட்டிக் கனவு கண்டு வருகிறது.

அதன் திட்டப்படி விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாக முற்றாக தோற்கடிக்கப்பட்டதன்பின் "ஜனநாயக தமிழ்க் கட்சிகள்!" துணையுடன் அதிகாரப் பகிர்வு நடைபெறும். ஆனால் அரசு, தான் காணும் நிறைவேறாத கனவுகளுக்கு உண்மை வடிவம் கொடுக்க இந்த தமிழ்க் குழுக்களுக்கு சில சலுகைகளை அளித்துள்ளது. அதற்கு நன்றிக்கடனாக அவர்கள் வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் விடுதலைப்புலிகள் எதிர்ப்புப் பிரச்சாரத்தை திறம்பட நடாத்திக் கொண்டும் வருகின்றனர். அடுத்ததாக அவர்கள் யாழ்குடாவில் அலுவலகம் அமைக்கவும் அரசு அனுமதியளித்துள்ளது. யாழ்குடாவில் சிங்கள இராணுவத்தின் பாதுகாப்பில் தமிழ் மக்களுக்கு இக் குழுக்கள் சேவையாற்றப் போவதாகக் கூறுவது வேடிக்கையான கூத்தாகத்தான் இருக்கப் போகிறது.

அரசு, விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாக பலவீனப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். அநேகமாக அவர்கள் முதுகெலும்பு உடைக்கப்பட்டவர்களாகவே இப்போது இருக்கிறார்கள். இவ்வருட இறுதிக்குள் முற்றாக ஒழிக்கப்பட்டு விடுவார்கள் என்பது போன்ற பசப்பு மொழிகளை தென்னிலங்கை சிங்கள மக்களுக்கு தொடர்ந்து கூறிக் கொண்டு வந்தாலும் இன்று வடக்கு _கிழக்கின் உண்மையான நிலை அவர்களுக்கு புலனாகிக் கொண்டு வருகின்றது.

முல்லைத்தீவில் சிறீலங்கா இராணுவத்துக்கு ஏற்பட்ட வரலாற்றுத் தோல்வியே சிங்கள மக்களை அனேகமாக விழிப்படையச் செய்தது எனலாம். அங்கு இறந்த படையினரின் உண்மையான எண்ணிக்கையை அரசு இன்றுவரை மறைத்து வந்தாலும் தென்னிலங்கை மக்களுக்கு அதன் முழு விபரங்களும் தெரிந்து பல காலமாகி விட்டது.

இன்றுள்ள இனப் பிரச்சினைக்கான தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகளின் பங்கு அவசியம் இல்லை என சிறீலங்கா கூறிவந்த செய்தியில் அர்த்தமில்லை என்பதை அண்மையில் நடந்த பரந்தன், ஆனையிறவு தாக்குதல்கள் நிரூபித்து விட்டன. அங்கு அரசிற்கு ஏற்பட்ட பேரிழப்புக்கள் விடுதலைப் புலிகளே தீர்விற்கான ஒரு சக்தி என்பதை உறுதிப்படுத்திய அதேவேளை அரசு கூறுவது போல் அவர்பலவீனப்படவில்லை; அவர்களது பலம் அதிகரித்திருக்கிறது என்பதையும் வெளிப்படுத்தியிருக்கிறது. அரசாங்கமோ தொடர்ந்து யுத்தம் என்பதிலேயே நம்பிக்கை வைத்து அதன் மூலம் அமைதியை ஏற்படுத்தப் போவதாக கூறிவருகிறது. இந்த அரசின் கனவுகளுக்காக அப்பாவி சிங்கள மக்களின் முதுகில் பொருளாதார சுமை, சுமக்க முடியாத அளவிற்கு ஏறியுள்ளது. ஆனால் அரசோ மக்களைப் பற்றி கவலைப்படாமல் தனது சுய கௌரவத்தைக் காப்பாற்றுவதிலேயே முனைந்து பாரிய இராணுவ நடவடிக்கைகளை தமிழர் பிரதேசங்களில் நடத்துகின்றது.

அரசின் இந்த தாக்குதல்களால் ஆரம்ப காலத்தில் புலிகள் சிறிய பின்னடைவுகளை அடைந்திருந்தனர் என்பது உண்மைதான் ஆனால் மிகக் குறுகிய காலத்தில் அந்த தாக்குதல்களை மிகவும் உறுதியுடன் எதிர்கொள்ளத்தொடங்கினர். பெருந் தாக்குதல்கள் மூலம் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பல பகுதிகளை படைகள் கைப்பற்றின என்பது உண்மை. ஆனால் அவர்களது ஆயுதங்களையோ அல்லது ஆட் பலத்தையோ இராணுவத்தால் அழிக்க முடியவில்லை. பெரும் கனரக ஆயுதங்களுடன் பெருமளவில் இராணுவம் முன்னேறியபோது புலிகள் சிறிய தாக்குதல்களை மட்டுமே தொடுத்து தமது தளபாடங்களுடனும், ஆட்களுடனும் பின்னோக்கி நகர்ந்து கொண்டனர். இது கெரில்லா யுத்த தந்திரத்தின் பிரதான விடயமாகும். தங்களை விட பலம் அதிகமுள்ள எதிரியுடன் மோதி இழப்புக்களை அடைவதைவிட, அவர்களை நிலப் பகுதிகளைக் கைப்பற்ற அனுமதித்து பின் தகுந்த சந்தர்ப்பத்தில் அவர்களை மேல் பாய்ந்து பாரிய சேதங்களை ஏற்படுத்துவது கெரில்லா யுத்தத்தின் ஒரு மூலோபாயமாகும். யுத்தங்களின்போது ஒரு பாரம்பரிய இராணுவம் அடைந்த வெற்றியைத் தீர்மானிப்பது அவ் இராணுவம் கைப்பற்றிய நிலப் பகுதி அல்ல. அந்த நிலத்தைக் கைப்பற்றிய போது எதிரிக்கு ஏற்படுத்திய உயிர் உடமை இழப்புக்களே ஆகும்.

சிறீலங்கா இராணுவத்தைப் பொறுத்தவரை யாழ்குடாவில் பெரும் பகுதி நிலத்தை அது கைப்பற்றினாலும், அவ் இராணுவத்தால் போராளிகளையோ அன்றி அவர்களது உடமைகளையோ அழிக்க முடியவில்லை. ஆனாலும், தென்னிலங்கையைப் பொறுத்தவரை அன்று இராணுவம் பெற்ற வெற்றியை மிகப் பெரியதொரு வெற்றியாக, மிகைப்படுத்திக் காட்டப்பட்டது. ஒரு பாரம்பரிய இராணுவத்திற்கு கெரில்லா இராணுவத்தை விட நிலப் பகுதிகளை கைப்பற்றுவது இலகுவானது தான். ஆனாலும், கைப்பற்றிய நிலத்தைக் காப்பாற்றுவதுதான் மிகவும் கஷ்டமானது. ஆனால் கெரில்லா இராணுவத்தைப் பொறுத்தவரை நிலப் பகுதியை இழந்தாலும், எதிரி இராணுவத்தின் மீது எச் சந்தர்ப்பத்திலும் தாக்குவது மிக இலகுவானது.

ஒரு பிரதேசத்தைக் கைப்பற்ற பயன்படுத்தப்பட்ட இராணுவப் பிரிவே அப் பிரதேசத்தைப் பாதுகாப்பதற்காக பரவலாகிச் செயற்படும். அப்படி பரவலாக்கப்படும் போது, முன்னர் பின்னோக்கி நகர்ந்திருந்த கெரில்லா அணிகள் அந்த இராணுவ அணிகள் மீது மீளத் தாக்குதல்களை நடத்தும். ஆரம்பத்தில் சிறு, சிறு தாக்குதல்களாக ஆரம்பித்து இறுதியில் பாரிய தாக்குதல்கள் தொடரும். இன்று வடக்கில் நடந்து கொண்டிருப்பதும் இதுதான்.

ஒரு பிரதேசத்தில் யுத்தம் நடந்து கொண்டிருக்கையில் அங்கு சிவில் நிர்வாகத்தை அரசு ஏற்படுத்த முயலுமானால் அது தோல்வியிலேயே முடியும். யாழ் குடாவில் இன்றுள்ள நிலையில் ஒரு சிறு தேர்தல் அல்லது ஒரு வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் தமிழ் மக்களைத் திசை திருப்ப அரசாங்கம் முனையலாம். ஆனால் தமிழ் மக்கள் எந்தளவுக்கு அரசின் இந்த கைய கபட நாடகத்திற்கு எடுபடுவார்கள் என்பதும், விடுதலைப் புலிகளின் விருப்பத்திற்கு மாறாக அந்த மக்கள் வாக்களிக்க முன்வருவார்கள் என்பதும் சிந்திக்கக்கூட முடியாத ஒன்றாகும். அப்படியானால் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட வேண்டும் என்கிறது சிறீலங்கா அரசாங்கம். ஆனால் அது சாத்தியமாகுமா? விடுதலைப் புலிகள் இறுதியான ஒரு தோல்வியைச் சந்திப்பது என்பதும் ஒரு நீண்ட அழகான கற்பனையாகவே முடியும். சரி, நீண்ட கால நோக்கில் அது சாத்தியப்படலாம் என அரசு வாதிட்டாலும், அப்பாவிச் சிங்கள மக்களை நீண்ட காலத்திற்கு இந்த அரசு கஷ்டத்திற்கு உள்ளாக்கப் போகின்றது என்பதுதான் உண்மையாகும்.

அடுத்ததாக, விடுதலைப் புலிகளை ஒதுக்கி இனப் பிரச்சினைக்கான பேச்சுவார்த்தையை மற்றைய தமிழ் கட்சிகளின் உதவியுடன் மேற்கொள்ளப் போவதாக அரசு கூறுகிறது. ஆனால், மற்றைய கட்சிகளை பேச்சுவார்த்தைகளில் இருந்து ஒதுங்க வைப்பதற்கு விடுதலைப் புலிகளால் முடியும். ஈ.பி.டி.பியைத் தவிர ஏனைய தமிழ் கட்சிகள், தொழிலாளர் காங்கிரஸ் முதற்கொண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி வரை இன்று விடுதலைப் புலிகள் கோரினால் விலகி இருக்கக் கூடிய நிலையிலேயே இருக்கின்றன. ஆக விடுதலைப் புலிகள் இன்றைய இனப் பிரச்சினைத் தீர்வின் பிரதான பங்குதாரர்கள் என்பது மறைக்க முடியாத உண்மையாகும். அரசாங்கம் தேவையற்ற பிடிவாதங்களையும் சுய கௌரவங்களையும் விடுத்து பிரயோசனமான நடவடிக்கைகளை எடுத்தால் மாத்திரமே இந் நாடு பெரும் இறப்புக்களில், இழப்புக்களில் இருந்து மீளக்கூடும்.

ராவயாவைத் தழுவி
**மாந்தன்**






# Siva Thaya Tamil Printers

தொடர்புகளுக்கு:
Mr. K. SIVA
*INDUSTRIE STR-02*
*6345 NEUHEIM.*
*(ZUG, SWITZERLAND)*
T.P: 0041/ 41/755 31 92
Fax: 0041/ 41/ 755 31 92

உங்கள் திருமணம், பிறந்தநாள், பூப்புனிதநீராட்டுவிழா, மற்றும் சகலவித அழைப்பிதழ்களும் இலங்கை, இந்தியா, இலண்டன் மற்றும் சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்ட மிக அழகான, நவீன, தரமான அழைப்பிதழ்களில் குறித்த நேரத்தில் மிக விரைவாக செய்து தரப்படும். இத்துடன் வாழ்த்து மடல்கள், சகல பிரசுரங்கள், விளம்பரங்கள், விலைப்பட்டியல்கள், புத்தகங்கள் போன்றனவும் எம்மிடம் பதிப்பிக்கலாம்.

உங்கள் திருமணம், பிறந்தநாள், பூப்புனிதநீராட்டுவிழா, மற்றும் சகலவித அழைப்பிதழ்களுக்கும் எம்மிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டால் நாம் இலவசமாக Model Cards உங்களுக்கு அனுப்பி, Fax or T.P மூலமாக விபரங்களை பெற்றுக் குறிப்பிட்ட தவணையில் உங்களுக்கு அழைப்பிதழ்களை பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைப்போம்.

அவசர திருமண அழைப்பிதழ்கள்
மேலதிக கட்டணமின்றி 24
மணித்தியாலத்தில் செய்து தரப்படும்.

**அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு!**
மேற்குறிப்பிட்ட நாடுகளில் இருந்து தருவிக்கப்பட்ட தரமான அதிநவீன அழைப்பிதழ்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

# பாதயாத்திரை சென்ற சுதாகரன் திடீர் கைது

## லஞ்ச ஒழிப்பு போலீசார் நடவடிக்கை

லஞ்ச ஒழிப்பு போலீசார் நேற்று மாலை சுதாகரனை திடீரென கைது செய்தனர். அவரை சென்னைக்கு கொண்டு வருகிறார்கள்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவால் வளர்ப்புமகன் என்று அறிமுகப்படுத்தப்பட்டவர் சுதாகரன். இவர் ஜெயலலிதாவின் தோழி சசிகலாவின் அக்காள் மகன் ஆவார்.



### ஆடம்பரத் திருமணம்

இவருக்கும் சிவாஜி பேத்தி சத்யலட்சுமிக்கும் கடந்த 1995 ஆண்டு செப்டம்பர் 7ந் தேதி சென்னையில் திருமணம் நடந்தது. மிக ஆடம்பரமான முறையில் நடந்த இந்த திருமணத்தை அப்போதைய முதல்வரான ஜெயலலிதா முன்நின்று நடத்தினார்.

இந்த திருமணத்துக்கு ரூ.100 கோடிக்குமேல் செலவானது என்று கூறப்பட்டது. இந்த நூற்றாண்டில் இது போன்ற திருமணம் நடக்கவில்லை என்றும் கூறப்பட்டது.

இந்நிலையில் தேர்தலில் அ.தி.மு.க. தோல்வி அடைந்து, ஜெயலலிதா ஆட்சி போனபின் அவர் மீது ஏராளமான ஊழல் புகார்கள் கூறப்பட்டன. சசிகலாவின் குடும்பத்ினர் ஜெயலலிதாவின் பினாமிகள் என்று குற்றம் சாட்டப்பட்டனர்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்துள்ளதாக கூறப்பட்டும் புகார் குறித்து லஞ்ச ஒழிப்பு போலீசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். இது தொடர்பாக சென்னை முதன்மை செஷன்ஸ் கோர்ட்டிலும் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

### சுதாகரனிடம் விசாரணை

இந்த வழக்குத் தொடர்பாக ஜெயலலிதா முதல்வர் பதவியில் இருந்தபோது அவருடன் நெருக்கமாக இருந்த சசிகலாவின் உறவினர்களிடம் லஞ்ச ஒழிப்புப் போலீசார் விசாரணை நடத்தினார்கள்.

ஜெயலலிதாவின் வளர்ப்பு மகனாக இருந்த சுதாகரனுக்கும் லஞ்ச ஒழிப்புப் போலீசார் சம்மன் அனுப்பி தங்களது அலுவலகத்திற்கு வரவழைத்து விசாரணை நடத்தினார்கள்.

### சிவாஜியிடம் விசாரணை

இதற்கிடையே ஜெயலலிதாவின் வளர்ப்பு மகனாக இருந்த சுதாகரனுக்கு அவர் நடத்திய ஆடம்பரத் திருமணம் குறித்து லஞ்ச ஒழிப்பு போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த [illegible] தொடர்பாக சுதாகரனின் மனைவி சத்தியலட்சமி, சத்தியலட்சுமியின் தாத்தாவான நடிகர் சிவாஜிகணேசன் மற்றும் பிரபு, ராம்குமார், சிவாஜியின் மருமகன் ஆகியோரிடம் கடந்த மூன்று தினங்களுக்கு முன்பு லஞ்ச ஒழிப்பு போலீசார் விசாரணை நடாத்தினார்கள்.

பழனிக்கு யாத்திரை செய்து கொண்டிருக்கும் சுதாகரனை சந்தித்து விசாரணைக்கு வரும்படி லஞ்ச ஒழிப்பு போலீசார் சம்மன் கொடுத்தனர். ஆனால் சம்மனை வாங்க சுதாகரன் மறுத்து விட்டதாகக் கூறப்படுகிறது.

இதைத் தொடர்ந்து வரும் 25-ம் தேதியன்று கண்டிப்பாக நேரில் வந்து ஆஜராகும்படி சுதாகரனுக்கு லஞ்ச ஒழிப்பு போலீசார் சம்மன் அனுப்பி உள்ளதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

### கைது

இந்நிலையில் லஞ்ச ஒழிப்பு போலீசார் திடீரென்று நேற்று மாலை பழனியில் சுதாகரனை கைது செய்தனர். பழனிக்கு யாத்திரை சென்ற சுதாகரன் தைப்பூசத்தையொட்டி நேற்று காலை பழனி முருகன் கோயிலுக்குச் சென்று வழிபட்டார்.

பின்னர் அவர் அங்குள்ள திருப்பூர் லாட்ஜில் தங்கி ஓய்வு எடுத்தார். நேற்றுமாலை திண்டுக்கல் லஞ்ச ஒழிப்பு போலீஸ் டி.எஸ்.பி. நடராஜன் தலைமையில் 3 பேர் கொண்ட குழு பழனி சென்றது. அங்கு 12 போலீசாரை அழைத்துக்கொண்டு 15 பேரும் ஒருவேனில் சுதாகரன் தங்கி இருக்கும் திருப்பூர் லாட்ஜுக்கு சென்றனர். அங்கு அவரை கைது செய்து வேனில் அழைத்து வந்தனர்.

ஜெயலலிதா வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்தது குறித்து அவரிடம் விசாரணை நடத்துவதற்காக அவரை சென்னைக்கு அழைத்து வருவதாக லஞ்சம் ஒழிப்பு போலீஸ் வட்டார தகவல்கள் கூறுகின்றன.

### கோர்ட்டில் ஆஜர்

சுதாகரன் பெயரில் ஏராளமான நிலங்கள், பங்களாக்கள் உள்ளன. அவர் ஜெயலலிதாவின் பினாமியாக இருக்கலாம் என்று லஞ்ச ஒழிப்பு போலீசார் சந்தேகிக்கிறார்கள்.

இது தொடர்பாக அவரிடம் விசாரணை நடத்திய பிறகு கோர்ட்டில் அவர் ஆஜர் படுத்தப்படுவார் என்று கூறப்படுகிறது. சுதாகரன் திருமண செலவு குறித்தும் அவரிடம் விசாரணை நடத்தப்படும் என்று தெரிகிறது.

### அமலாக்கப் பிரிவு அழைப்பாணை

இதற்கிடையில் அன்னிய செலாவணி மோசடி தொடர்பாக சுதாகரனுக்கு அமலாக்கப் பிரிவு அதிகாரிகள் அழைப்பாணை அனுப்பினார்கள். இருமுறை அனுப்பிய சம்மனுக்கும், சுதாகரன் ஆஜராகவில்லை. இதைத் தொடர்ந்து மேல் நடவடிக்கை எடுக்கப் போவதாக அமலாக்கப் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன.

# பொறுமைக்கும் எல்லை உண்டு

## மீனவர் மீது தாக்குதல் பற்றி கருணாநிதி

(சென்னை)

தமிழ் மீனவர்களைச் சிங்களக் கடற்படையினர் சுட்டு வீழ்த்துவதும், அவர்களுடைய படகுகளைப் பறிமுதல் செய்வதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. எத்தனையோ முறை இது பற்றி எடுத்துக் கூறிய பின்னரும் அது நின்றபாடில்லை. மத்திய அரசு மூலமாக இந்த விஷயம் இலங்கைக்கு எடுத்துச் சொல்லப்பட்டு வருகிறது. பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு என்று தமிழக முதல்வர் கருணாநிதி எச்சரித்தார். சென்னையில் வியாழக்கிழமை நிருபர்களிடம் இது தொடர்பாக அவர் கூறியவிவரம் வருமாறு:

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதையும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் இந்தியாவிற்குள் குறிப்பாக தமிழகத்திற்குள் அகதிகளாக வருவதையும் இந்தியா அலட்சியப் படுத்தி விட முடியாது. அலட்சியப்படுத்தவும் கூடாது.

இந்தக் கருத்தைத்தான் நான் மத்திய அரசிடம் வலியுறுத்தி வருகிறேன். மத்திய அரசும் இக்கதையை கவலையோடு எண்ணிப் பார்க்கத் தவறவில்லை. இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசின் கருத்து எதுவோ அதுதான் மாநில அரசின் கருத்தும், இலங்கை அமைச்சர் கதிர்காமர் என்னைச் சந்திப்பது பற்றிய தேதி இன்னும் உறுதியாகவில்லை.

தமிழ்நாட்டின் சார்பில் எட்டு மத்திய அமைச்சர்கள் இருந்த போதிலும் பெரிய திட்டங்கள் எதுவும் வரவில்லை என்ற கருத்து நிலவுவது பற்றி எட்டு அமைச்சர்களும் கவனத்தில் கொள்வார்கள். மத்திய அரசும் கவனத்தில் கொள்ள வேண்டும். குறை சொல்வதை நான் வரவேற்கிறேன். அந்த அமைச்சர்கள் ஊக்கத்தோடு செயல்பட அது உதவியாக இருக்கும்.

தூத்துக்குடி துறைமுகத்தின் விரிவாக்கம்பற்றி மத்திய நிதியமைச்சர் ஏற்கனவே அறிவித்திருக்கிறார். ஆளுநர் உரை என்பது அரசாங்கத்தின் கொள்கைக் குறிப்பு. தொடர்ந்து நிதிநிலை அறிக்கை வரும். அதில் தான் விரிவான முறையில் திட்டங்கள், புதிய அறிவிப்புக்கள் எல்லாம் வரும். சென்னையில் புதன்கிழமை ம.தி.மு.க பிரமுகர் சிவா கொலை விஷயத்தில் காவல்துறை பாரபட்சம் இன்றி நடவடிக்கை எடுக்கும்.

# குடியரசு தினவிழா: டெல்லி போலீசாருக்கு ஒரு பெரும் சவால்

வரும் ஜனவரி 26-ம் தேதியன்று நடைபெறவிருக்கும் குடியரசு தினவிழா, டெல்லி போலீசாருக்கு ஒரு பெரும் சவாலாக அமைந்துள்ளது. ஏனெனில், காஷ்மீர் பயங்கரவாதிகள் டெல்லிக்குள் ஊடுருவி குடியரசு தினவிழாவை சீர்குலைக்கும் நோக்குடன் அன்று குண்டு வெடிப்புக்களை நடத்தி ரத்தக் களரி ஏற்படுத்தும் சதிநோக்குடன்செயல்பட்டுக் கொண்டிருந்தனர். அவர்களின் சதியை முறியடித்து மிக மிக முக்கியப் பிரமுகர்களின் உயிரையும், விழாவில் கலந்து கொள்ளும் ஏனையோரின் உயிரையும் காக்கும் பொறுப்பு டெல்லி போலிசாருக்குத்தான் உள்ளது.

எனவே டெல்லி போலீசின் அதிரடிப்படையினர், ஏற்கனவே காஷ்மீர் பயங்கரவாதிகளின் 2 குண்டுவெடிப்பு சதியை முறியடித்ததுடன் ஏராளமானவர்களை கைது செய்துள்ளனர். அவர்களிடமிருந்து ஏராளமான வெடிமருந்துகளையும் ஆர்.டி.எக்ஸ். போன்ற வெடிமருந்துக் கருவிகளையும் கைப்பற்றியுள்ளனர்.

இந்த சவால் குறித்து டெல்லி துணை போலீஸ் கமிஷனர் அதித்தியா ஆரியா கூறுகையில், "குடியரசு தினம் போன்ற பெரும் தேசிய நாட்கள் மீது பயங்கரவாதிகள், தீவிரவாதிகள், சீர்குலைவாளர்கள் தங்களுடைய கவனத்தை செலுத்தி செயல்படுகின்றனர். அத்தகைய நாட்களில் அவர்கள் வெற்றிகரமாக ஏதேனும் சீர்குலைவு தாக்குதலை நடத்தினால் அது அவர்களுக்கு செலவில்லாத விளம்பரத்தை அளிக்கிறது. ஏனெனில் அத்தகைய நிகழ்ச்சிகள் தேசிய அளவில் மட்டுமின்றி சர்வதேச அளவிலும் முக்கியத்துவம் பெற்று விடுகிறது" என்று கூறினார்.

குடியரசு தின அணிவகுப்பு அமைதியாக நடந்து முடிவதையும், தீயசக்திகளின் சதித்திட்டம் எதுவும் வெற்றி பெறவிடாது தடுப்பதையும் உறுதிப்படுத்த வேண்டியது எங்களுடைய (போலீசாரின்) தேசிய கடமையாகும்.

குடியரசு தினவிழா பாதுகாப்புக்கு நியமிக்கப்பட்டுள்ள போலீசாரின் எண்ணிக்கையை தெரிவிக்க மறுத்த உதவிக்கமிஷனர் ஆரியா "போதிய அளவிற்கு போலீசார் நியமிக்கப்பட்டுள்ளனர்" என்று மட்டும் தெரிவித்தார்.

இந்தப் போலிஸ் படைகள், புலனாய்வுப் பிரிவுகளுடன் முழு ஒத்துழைப்பு அளித்து செயல்படுகின்றன. புலனாய்வுப் பிரிவுகளும், வேறுசில வழிகளில் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளன" என்றும் அவர் கூறினார்.

# நகைகளைக் கொடுத்தது யார்? ஜெயலலிதா விளக்கம்

லஞ்ச ஒழிப்பு போலிசார் கைப்பற்றிய நகைகளை கொடுத்தவர்கள் யார் என்பதை ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

## தொண்டர்களுக்குக் கடிதம்

இது தொடர்பாக அ.தி.மு.க. தொண்டர்களுக்கு ஜெயலலிதா எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

கடந்த பல தினங்களுக்கு மேலாக நான் உங்களோடு மடல்கள் மூலம் என் கருத்துக்களை பகிர்ந்து கொள்ள முடியவில்லை.

காரணம் நீங்கள் அறிந்தது தான். ஆட்சியாளர்கள் என் மீது குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி என்னைச் சிறையில் அடைத்தார்கள். அடுத்த கணமே என் வீடு சோதனையிடப்பட்டது.

## என் பொது வாழ்க்கையைக் கேவலப் படுத்தினர்

என் வீடு சோதனை என்ற பெயரில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்க அதிகாரிகள் சோதனை நடக்கும் போதே 'அது கிடைத்தது. இது கிடைத்தது' என்று மக்களிடம் பரபரப்பு உருவாகும் வகையில் பத்திரிகைகளில் செய்தி வெளியிடச் செய்தார்கள்.

ஆட்சியாளர்கள் விருப்பத்திற்கேற்ப அதிகாரிகள் நடந்து கொண்டு என்னை சிறையில் வைத்துவிட்டு வெளியில் என் வீட்டில் கிடைத்த பொருள்கள் பற்றி மிகைப்படுத்திய செய்திகளை வெளியிட்டு என்னைக் களங்கப்படுத்தினார்கள்; என் பொது வாழ்க்கையைக் கேவலப்படுத்தும் முயற்சிகள் தொடர்ந்து நடந்தன.

என்னைத் தனிப்பட்ட முறையில் அழித்து விடுவதன் மூலம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். உருவாக்கிய அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகத்தை ஒழித்துவிடலாம் என்ற ஆட்சியாளர்கள் எண்ணத்தை நிறைவேற்றும் வகையில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்க அதிகாரிகள் நடந்துகொண்டார்கள்.

வீட்டில் சோதனை நடக்கும் போது கைப்பற்றப்பட்டதாகக் கூறப்பட்ட பொருள்கள் குறித்து சிறையில் நான் தெரிவித்த தகவல்களை துண்டு துண்டாக வெளியிடச் செய்தார்கள்.

குறிப்பாக என் வீட்டிலிருந்த நகைகள் முழுவதும் மைசூர் மகாராஜா கொடுத்தது என்று நான் கூறியதாகச் செய்தி வெளியிட செய்தார்கள்.

அடுத்த நாளே என் வீட்டு நகைகள் முழுவதும் புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். எனக்களித்தது



என்று கூறியதாகச் செய்தி வரும்படி ஆட்சியாளர்கள் பார்த்து கொண்டார்கள்.

## முழுத் தகவலையும் வெளியிடவில்லை.

மைசூர் மகாராஜா கொடுத்ததா? புரட்சித் தலைவர் கொடுத்ததா? அல்லது "உழைத்துச் சம்பாதித்ததா" எது உண்மை என்று, சில பத்திரிகைகளே கூட தலையங்கங்கள் தீட்டின.

நான் கூறிய பல்வேறு தகவல்களில் குறிப்பிட்ட சிலவற்றை மட்டுமே வேண்டுமென்றே வெளியிட்டார்கள்.

நான் தெரிவித்த முழுத் தகவல்களையும் வெளியிடுவதில்லை. காரணம் என் வீட்டில் கிடைத்த நகைகள் குறித்து நான் முன்னுக்குப் பின் முரணாக பேசுகிறேன் என்பது போன்ற தவறான எண்ணத்தை மக்களிடம் உருவாக்குவதே ஆட்சியாளர்களின் விருப்பமாக இருந்தது.

சிறையில் என்னிடம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்க அதிகாரிகள் விசாரணை நடத்திய போது என் வீட்டு நகைகளில் எது? எப்படி? எப்போது கிடைத்தது என்பதைப் பற்றி விளக்கமாகத் தெரிவித்துள்ளேன்.

உடன் பிறப்புக்களே! நாட்டு மக்களுக்கும் நகைகள் குறித்த விவரத்தை மீண்டும் உங்கள் மூலம் தெரிவிக்க விரும்புகிறேன்.

என் வீட்டு நகைகளில் ஒரு பகுதி, என் பாட்டனாருக்கு மைசூர் அரசர் கொடுத்தது. ஒரு பகுதி என் தாயார் அணிந்து கொள்ள வாங்கியவை. ஒரு பகுதி திரைப்படங்களில் நடிக்கும் காலங்களிலேயே நானே உழைத்துச் சம்பாதித்தது. ஒரு பகுதி கலைத்துறையிலும், அரசியல் துறையிலும் என்னை ஆளாக்கிய என் ஆசான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் எனக்குக் கொடுத்தது. ஒரு பகுதி கழக உடன் பிறப்புக்கள் எனக்களித்த அன்பளிப்புகள்.

இவற்றுக்கு வருமான வரியும் முறையாகச் செலுத்தப்பட்டுள்ளன.

இப்படி நான் தெரிவித்த முழுவிபரங்களையும் ஒரு சேர வெளியிடாமல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்க அதிகாரிகள் திரித்து வெளியிடச் செய்தார்கள். பகுதி பகுதியாக வெளியிடச் செய்தார்கள். இவற்றில் தினம் ஒரு தகவலைத் தந்து நான் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக பேசுவதாக ஒரு பொய்யான தோற்றத்தை உருவாக்க முயற்சித்தார்கள்.

அடுத்து என் வீடு பற்றியது;

என் வீடு இருக்கும் இடம் 1968-ல் வாங்கப்பட்டது.

1972-ல் நான் அந்த இடத்தில் வீடுகட்டி குடிபுகுந்தேன்.

சில பத்திரிகைகளும் சில தனியார் தொலைகாட்சிகளும் என் வீட்டு வரவேற்பறையைப் பெரிதுபடுத்திக் காட்டுகிறார்கள்.

உடன் பிறப்புக்களே! நான் அரசியலுக்கு வந்தநாள் முதல் தலைவர்களையும் கழக உடன் பிறப்புக்களையும் நான் அங்கு சந்தித்து வருகிறேன்.

நமது உடன் பிறப்புக்கள் பலருக்கும் பழக்கமான இடம் தான் என் வீட்டு வரவேற்பறை. அதை பெரிதுபடுத்தி அரசியல் உள் நோக்கத்தோடு தொடர்ந்து காட்டிவருகிறார்கள்.

இப்படி என்னை களங்கப்படுத்துவதால் நமது இயக்கம் கலகலத்துப் போய்விடும் என்று கருதியவர்கள் தான் இன்று மனங்கலங்கி நிற்கிறார்கள்.

நான் தெரிவித்த விபரங்களை நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லி அவர்களது நம்பிக்கையையும், அன்பையும் பெறுவதில் நீங்கள் அனைவரும் இன்னும் வேகமாக ஈடுபட வேண்டும். தெருமுனைக் கூட்டங்கள் நடத்தி மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்பதே என் விருப்பமாகும்.

இவ்வளவு தொல்லைகளிலும், சோதனைகளிலும் நமது இயக்கத்தைக் கட்டிக்காக்கும் உங்கள் ஒவ்வொருவரையும் நினைக்கும் போது எதிரிகள் என் மனத்தில் தோற்றுவிக்கும் துன்ப பாலைவனமெல்லாம் இன்பப் பூங்காவனமாக மாறி விடுகிறது.

விரைவில் மீண்டும் மடல் வழியாக உங்களைச் சந்திக்க உள்ளேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# லஞ்ச ஒழிப்பு பொலிசார் சிவாஜி மகன் ராம்குமாரிடம் 3-வது நாள் விசாரணை

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

நடிகர் சிவாஜியின் மகன் ராம்குமாரிடம் லஞ்ச ஒழிப்பு போலீசார் நேற்று 3வது நாளாக விசாரணை நடத்தினார்கள்.

## ஆடம்பரத் திருமணம்

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் என ஏற்றுக் கொள்ளப்பட்ட சசிகலாவின் அக்கா மகன் சுதாகரனுக்கும், நடிகர் சிவாஜி கணேசனின் பேத்தி சத்தியலட்சுமிக்கும் கடந்த 1995-ம் ஆண்டு செப்டம்பர் 7-ம் தேதி திருமணம் நடந்தது.

இந்தத் திருமணத்தை அப்போது முதலவராக இருந்த ஜெயலலிதா ஆடம்பரமாக நடத்தினார். தற்போது ஜெயலலிதா வருவாய்க்கு மேல் சொத்து சேர்த்தது குறித்து லஞ்ச ஒழிப்பு கண்காணிப்புத் துறை போலீசார் விசாரித்து வருகின்றனர்.

## விசாரணை

இந்த விசாரணையின்போது சுதாகரன் திருமணம் குறித்தும் லஞ்ச ஒழிப்பு போலீசார் விசாரித்தனர்.

கடந்த 21-ம் தேதி சென்னையிலுள்ள நடிகர் சிவாஜிகணேசனின் வீட்டிற்கு சென்ற லஞ்ச ஒழிப்பு போலீசார் சிவாஜி கணேசன், அவரது மகன் ராம்குமார், சிவாஜியின் பேத்தி சத்தியலட்சுமி ஆகியோரிடம் விசாரித்தனர்.

இரண்டாவது நாளான நேற்று முன்தினம் சிவாஜியின் அலுவலகத்திற்கு சென்ற லஞ்ச ஒழிப்புப் போலீசார், சிவாஜியின் மருமகனும், சத்தியலட்சுமியின் தந்தையுமான நாராயணசாமி மற்றும் ராம்குமாரிடம் விசாரணை நடத்தினார்கள்.

3-வது நாளாக நேற்று நடிகர் சிவாஜியின் மகன் ராம்குமாரை, சென்னை மவுண்ட் ரோடு பெரியார் மாளிகையிலுள்ள லஞ்ச ஒழிப்புக் கண்காணிப்புத்துறை அலுவலகத்திற்கு வரவழைத்து போலீசார் விசாரித்தனர். அவரிடம் லஞ்ச ஒழிப்பு போலீஸ் கூடுதல் சூப்பிரண்ட் நல்லம்ம நாயுடு விசாரித்தார்.

விசாரணை முடிந்து வெளியே வந்த ராம்குமாரிடம் நிருபர்கள் கேட்டபோது, தன்னிடம் போலீசார் 10 நிமிடம் விசாரித்ததாக அவர் கூறினார்.



விசாரணை முடிந்து வெளியே வந்த போது...

Le Paradis Culinaire
இந்திய - இலங்கை உணவகம்
பிறந்தநாள் வரவேற்பு போன்ற வைபவங்கள் கொண்டாட இடவசதியுடன்...
நீங்கள் விரும்பிய உணவு வகைகளும் ஓடருக்கு பெற்றுக் கொள்ளலாம்.
M°: Nation ou Avron
தொடர்புகளுக்கு: ஈசன்
Tel: 0143708384

# பிரித்தாளும் தந்திரமும் - ஒற்றையாட்சி முறையும்

## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

### பகுதி II

1

1833-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18-ம் திகதி கோல்புறூக் கமரன் திட்டப்படி கொழும்பை மையமாகக் கொண்ட ஒற்றையாட்சி முறையை பிரித்தானிய அரசு அமுல்படுத்தியது சட்டவிரோதமான ஒரு நடவடிக்கையாகும்.

பிரித்தானிய அரசுக்கு இலங்கை மக்களின் தலைவிதியை தீர்மானிக்கும் உரிமை, நாடு பிடிக்கும் யுத்தத்தில் ஒல்லாந்தரை வெற்றி கொண்டதன் மூலமும் கண்டிய மன்னன் சிறீவிக்கிரமராஜ சிங்கனை வெற்றி கொண்டதன் மூலமும் வன்னி மன்னன் பண்டாரவன்னியனை வெற்றி கொண்டதன் மூலமும் கிடைத்தது என்பதைத் தவிர இலங்கை மக்களால் வழங்கப்பட்ட ஒன்றல்ல.

பரந்துபட்ட மக்களுக்கு வாக்குரிமையோ கருத்துக்கூறும் உரிமையோ வழங்கப்படாத நிலையில் லண்டனிலிருந்து சென்ற கோல்புறூக், கமரன் ஆணைக்குழுவினர் இலங்கை மக்களின் கருத்தைக் கேட்டறிந்து அவர்கள் விருப்பப்படியே அரசியல் சீர் திருத்தத்தை மேற்கொள்ள ஒற்றையாட்சி முறையை சிபார்சு செய்தனர் என்பது அப்பட்டமான பொய்யாகும்.

கோல்புறூக் ஆணைக்குழு இலங்கை மக்களுக்கு எத்தகைய ஆட்சி முறையை பரிந்துரை செய்யலாம் என்பதற்காக அங்கு அனுப்பப்பட்டது என்பதை விட பிரித்தானிய காலனிய அரசின் நலன்களுக்கு அங்கு எத்தகைய ஆட்சிமுறையை அமுல்படுத்தினால் பொருத்தமாக இருக்கும் என்பதைக் கண்டறிய அங்கு அனுப்பப்பட்டது என்பதே உண்மையாகும்.

இலங்கையில் மூன்று அரசுகள் இருந்த போதிலும், 1833-ம் ஆண்டு புதிதாக அமைக்கப்படவுள்ள சட்ட நிருபண சபையில் அரசுகளுக்கான பிரதிநிதித்துவம் என்றில்லாமல் இனங்களுக்குரிய பிரதிநிதித்துவம் என்ற அடிப்படையில் தமிழருக்கு ஒரு பிரதிநிதித்துவமும், சிங்களவர்களுக்கு ஒரு பிரதிநிதித்துவமும், வழங்கும்படி கோல்புறூக் ஆணைக்குழு பரிந்துரை செய்திருந்தது. இதனை சிங்களவர்களுக்கு சமமாக தமிழர்களை அங்கீகரித்த நடவடிக்கை என்று சொல்லமுடியாது.

கண்டிய சிங்களவர்களுக்கும், கரையோரச் சிங்களவர்களுக்கும் இடையிலான முரண்பாட்டை வளர்த்து வருவதற்காக அதாவது கரையோரச் சிங்களவர்களையும், தமிழர்களையும் சமப்படுத்துவதன் மூலம் கண்டியச் சிங்களவர்களை ஓரங்கட்டுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி என்றே இது கருதப்படுகின்றது. கரையோரச் சிங்களவர்களுக்கு வழங்கப்பட்ட பிரதிநிதித்துவம் கூட கிறிஸ்தவராக மதம் மாறிய சிங்களவருக்குத்தான் வழங்கப்பட்டதே தவிர, பௌத்த சிங்களவர் ஒருவருக்கும் அது வழங்கப்படவில்லை என்பது முக்கியமான ஒரு விடயமாகும். அது போல், முதல் முதலாக பிரித்தானியர்களால் சேர் (Sir) பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட இலங்கையர் ஒரு தமிழர் என்பதும் (சேர். முத்துக்குமாரசாமி) கவனத்துக்குரிய ஒன்றாகும்.

கண்டியச் சிங்களவர்கள் பௌத்த தர்மத்தினதும், 'சங்க'வினதும் காவலர்களாக தங்களைக் கருதிக்கொண்ட போதிலும், தொடக்க காலத்தில் அவர்கள் வன்னி, யாழ்ப்பாணம், மற்றும் தமிழகத்திலுள்ள தமிழர்களுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தனர். குறிப்பாக ஒல்லாந்தர் காலத்திலிருந்து தஞ்சைநாயக்க மன்னர்களுடனும் மற்றைய தமிழகக் குறு நில மன்னர்களுடனும் அவர்களுக்கிருந்த தொடர்பு ஆங்கிலேயருக்கு ஆபத்தான ஒன்றாகவே இருந்தது.

அதாவது இலங்கையிலிருந்த யாழ்ப்பாணம், கண்டி, கோட்டை இராச்சியங்களை ஒன்றாக இணைத்து CEYLON என்ற ஒற்றையாட்சி அரசை உருவாக்கியது போல், இந்தியப் பெருநிலப்பரப்பிலிருந்த பல நூறு சிற்றரசுகள் சமஸ்தானங்கள், எல்லாவற்றையும் வென்றடக்கி பல்வேறு தேசிய இனங்கள், மற்றும் இனக்குழுக்கள் எல்லாம் அவற்றின் விருப்பத்திற்குமாறாக ஒன்றாக இணைத்து இந்தியா என்ற சிறைக் கூடத்துக்குள் அடைத்து 'இந்திய அரசு' என்ற ஒன்றையும் ஆங்கிலேயர்கள் உருவாக்கியிருந்தனர்.

அவர்கள் நினைத்திருந்தால் இந்திய நிலப்பரப்பின் கீழ் தொங்கிக் கொண்டிருக்கும் சின்னஞ் சிறு தீவான இலங்கையையும் இந்தியா என்ற அலகுக்குள் ஒன்றாக இணைத்திருக்க முடியும். கண்டி இராச்சியம் கைப்பற்றப்படுவதற்கு முன்பு பிரித்தானிய நிர்வாகத்தின் கீழிருந்த யாழ்ப்பாணமும், கரையோரச் சிங்களப் பகுதிகளும் சென்னையைத் தலைநகராகக் கொண்ட கிழக்கிந்தியக் கம்பனி நிர்வாகத்தின் கீழேயே இருந்தது. அவர்கள் நினைத்திருந்தால் அதே நிர்வாக அலகை தொடர்ந்து அமுல்படுத்தி வந்திருக்கமுடியும்.

ஆனால் 1815-ல் கண்டி இராச்சியம் கைப்பற்றப்பட்டு இலங்கை முழுவதும் தங்கள் ஆட்சியின் கீழ் வந்ததும், ஆங்கிலேயர்கள் அதைச் செய்ய விரும்பவில்லை. அதற்குக் காரணம், இலங்கை மக்கள் மீது கொண்ட நல்லெண்ணமல்ல. அவர்களது வரலாற்றுப் பாரம்பரியத்தை மதிக்கும் பெரும் தன்மையுமல்ல.

இந்திய பெருநிலப்பரப்பை காவல் காக்கும் இராணுவக் கேந்திர நிலையமாக இலங்கையை வைத்திருக்க அவர்கள் விரும்பினார்கள். விமானப் படை அறியப்பட்டிராத அக்காலத்தில் 'கடலை ஆள்பவனே, தரையை ஆள்வான்' என்ற கொள்கை முக்கியத்துவம் பெற்றிருந்த அக் காலத்தில் திருகோணமலைத்துறைமுகம் ஆங்கிலேயருக்கு மிக மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருந்தது. எனவே, இலங்கையை இந்தியாவுடன் ஒன்றாக இணைப்பதால் ஏற்படக்கூடிய நிர்வாகச் சிக்கலைத்தால் வரக்கூடிய இலாபத்தை விட இலங்கைக்கும் இந்தியாவுக்கும் நிரந்தரப் பிரிவை உண்டாக்கி இலங்கையில் பிரித்தானிய நிர்வாகத்தைப் பலப்படுத்தி அதன் கீழ் இந்தியாவைக் கட்டுப்படுத்தவென தனியான கடற்படை பலத்தை வைத்திருப்பது அதிமுக்கியமானது என்றே அவர்கள் நினைத்தார்கள்.

யாழ்ப்பாணத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் தமிழகத் தொடர்பை பெற்றுத் தங்களுக்கு எதிராக கிளர்ந்தெழமாட்டார்கள் என்ற நம்பிக்கை ஆங்கிலேயருக்கு இருந்தது. சேர் பட்டங்களை வழங்குவதன் மூலமும் அரச பதவிகளை வழங்குவதன் மூலமும் அவர்களை விலைக்கு வாங்கி விடலாம் என்று அவர்கள் நம்பினார்கள். ஆனால் பண்டார வன்னியனின் வாரிசுகளுடனும், தமிழகத்து குறு நில மன்னர்களுடனும் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த கண்டியச் சிங்களவர்களே அவர்களுக்கு பிரச்சினைக்குரியவர்களாக இருந்தார்கள். கரையோரச் சிங்களவர்களது நிலையும், ஏறக்குறைய யாழ்ப்பாணத்தவர்களது நிலைதான் என்பதால் அவர்களையிட்டும் ஆங்கிலேயர்கள் அவ்வளவு பெரிதாக கவலைப்படவில்லை.

எனவே பிரித்தாளும் தந்திரத்தைக்கையாண்டு கண்டியச் சிங்களவர்களையும், கரையோரச் சிங்களவர்களையும் ஒன்று சேர விடாதபடி தடுக்கும் அதே நேரத்தில் கண்டியச் சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் இருந்த தொடர்பை முற்றாகத் துண்டித்து அவர்கள் ஒரு போதும் ஒன்றிணையாது பார்த்துக் கொள்ளும் நடவடிக்கையையும் மேற்கொள்ள அவர்கள் தீர்மானித்தனர்.

அதற்கு அப்போதிருந்த கண்டிய நிலபிரபுத்துவ முறை சட்டங்கள் அவர்களுக்கு வசதியாக இருந்தன. ஒல்லாந்தர் கட்சிக்குக் கீழிருந்த யாழ்ப்பாணத்திலும் மற்றும் கரையோரச் சிங்களப் பகுதிகளிலும் நிலம் தொடர்பான சட்ட அமைப்பு ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டிருந்தது. நில உரிமையைப் பெற்றிருந்த மக்களுக்கு அதை உறுதிப்படுத்த உறுதிகள் வழங்கப்பட்டிருந்தன. ஆனால் கண்டியில் நிலம் மன்னனுக்கும் அவனது பிரதானிகளுக்கும் மட்டுமே சொந்தமாக இருந்தது. (யாழ்ப்பாணத்திலும் இதே நிலை முன்பு இருந்த போதிலும் போர்த்துக்கேயர் ஆட்சியின் பிற்காலத்திலும் ஒல்லாந்தர் காலத்திலும் அவை படிப்படியாக மக்களுக்கு விற்கப்பட்டு விட்டன.)

மன்னன் தனது நிலத்தை தனது பிரதானிகள் மூலம் விவசாயிகளுக்கு குத்தகைக்கு விட்டிருந்தான். இவ்வாறு குத்தகைக்கு விடப்பட்டதற்கான எழுத்து மூலப் பத்திரம் எதுவும் கிடையாது. பரம்பரை பரம்பரையான நம்பிக்கையின் அடிப்படையிலேயே இந்தக் குத்தகை முறை தொடர்ந்தது.

கண்டிய ஆட்சி பிரித்தானியர் கைக்கு வந்தபோது கண்டிய மன்னனுக்குரிய நிலமும் பிரித்தானியர் வசமாகியது. அவர்கள் பழைய குத்தகை முறையைத் தொடர்வதற்குப் பதிலாக 1840-ல் 'தரிக நிலச் சட்டம்' ஒன்றை அறிவித்ததன் மூலம் உரிமை நிரூபிக்கப்படாத அனைத்து நிலத்தையும் தங்கள் வசமாக்கிக் கொண்டனர். இந்த நடவடிக்கையில் யாராலும் பயன்படுத்தப்படாமல் இருந்த காடுகள் மட்டுமல்லாமல் கண்டியும் அதைச் சூழ உள்ள பகுதியிலுமிருந்த விவசாய நிலங்கள் கூட ஆங்கிலேயர் வசமாகின. அந்த நிலங்களில் பரம்பரை பரம்பரையாக விவசாயம் செய்துவந்த சிங்கள விவசாயிகளுக்கு தங்களது குத்தகை உரிமையை நிரூபிக்க எந்த ஆவணமும் இருக்கவில்லை. வசதி படைத்த கண்டிய நிலப்பிரபுக்கள் மட்டும் தங்கள் மன்னனிடமிருந்து பெற்ற ஆவணங்களை சமர்ப்பித்து தங்களது நில உரிமையை நிரூபிக்க முடிந்தது.

> **கண்டியச் சிங்களவர்கள் பௌத்த தர்மத்தினதும், 'சங்க' வினதும் காவலர்களாக தங்களைக் கருதிக்கொண்ட போதிலும், தொடக்க காலத்தில் அவர்கள் வன்னி, யாழ்ப்பாணம், மற்றும் தமிழகத்திலுள்ள தமிழர்களுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தனர். குறிப்பாக ஒல்லாந்தர் காலத்திலிருந்து தஞ்சைநாயக்க மன்னர்களுடனும் மற்றைய தமிழகக் குறு நில மன்னர்களுடனும் அவர்களுக்கிருந்த தொடர்பு ஆங்கிலேயருக்கு ஆபத்தான ஒன்றாகவே இருந்தது.**

- நக்கீரன்

## சிறுகதை

# காணி நிலம்

**அ. பாலமனோகரன்**

"பெரியவர்கள்!... நீங்கள் எங்கை இறங்கிறது?"

"தனியூத்து!.. ஆலடியிலை!"

"ஆலடியிலையோ?... அப்பிடி இஞ்சை ஒரு இடமும் இல்லையே!.. இதுதான் தனியூத்து!"

மினிவானிலிருந்து, கையில் ஒரு சிறிய பயணப்பையுடன் இறங்கிய சுந்தரத்துக்கு, எந்தப் பக்கம் பார்த்த போதும், அறிமுகமான இடம் ஒன்றுமே தெரியவில்லை.

இருபது வருடங்களுக்கு முன்னர் தந்தையுடன், அவர் உருவாக்கிக் கொண்டிருந்த தென்னந் தோட்டத்தைப் பார்ப்பதற்கு வந்திருந்த காலத்தில், சுந்தரம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் இறுதியாண்டு மாணவராக இருந்தார்.

அந்த நாட்களில், இந்த முல்லைத்தீவு மாங்குளம் வீதியில், இருக்கின்ற இந்த டானா வடிவான முடக்கில், பாதையின் இருபுறமும் இரண்டு ஆலமரங்கள் நின்ற ஞாபகம். முடக்கில் இருந்த பாலத்தினூடாக, ஒரு பக்கம் இருந்த பெரிய வயல் வெளியிலிருந்து பாய்ந்த தெளிந்த நீர் பாலத்தினூடகச் சலசலத்து மறுபக்கம் இருந்த காவடிப்பூச்செடிப் பற்றைகளுக்கூடாகப் பாய்ந்து கொண்டிருந்ததும் சுந்தரத்துக்கு ஞாபகம் இருந்தது.

இப்போது அங்கு ஆலமரங்களையும் காணவில்லை. காவடிப்பூப் பற்றைகளையும் காணவில்லை. மாலை வேளையாததால் தெருவில் அதிக சன நடமாட்டமும் இருக்கவில்லை. அந்தச் சில மனிதர்களின் முகங்கள் எதுவுமே இவருக்குத் தெரிந்த முகங்களாக இல்லை.

'நான் ஒரு மடையன்!.. இந்த ஊரில் எனக்கு யாரைத் தெரியும்!"

வடக்கே, முல்லைத்தீவுக்குச் செல்லும் வீதியில் சற்றுத் தூரத்தில், பஸ்தரிப்பு நிலையம் ஒன்றும், அங்கிருந்து ஒரு வீதி பிரிந்து செல்லும் சந்தியும் தெரிந்தன.

அதுதான் குமுளமுனைக்குச் செல்லும் சந்தியாக இருக்க வேண்டும் என மனதுக்குள் கணித்துக் கொண்டு அந்த இடத்தை நோக்கி நடந்தார் சுந்தரம்.

அந்த முச்சந்தியில் இருந்த சிறிய வேதக் கோவிலை மட்டும் அவரால் அடையாளம் காண முடிந்தது. கோவிலுக்கு எதிரே, குமுளமுனை வீதிக்கும் பிரதான வீதிக்குமிடையே முக்கோண வடிவில் இருந்த காணிக்குள் ஒரு மாடிக்கடையும், அதையொட்டிய வீடும், குண்டு வீழ்ந்து இடிந்து கவனிப்பாரற்றுக் கிடந்தன. கட்டிடங்களின் சீமெந்துத் தளங்கள் உடைந்து சிதிலமாகி, அவற்றினுள் இருந்த கம்பிகளில் தொங்கிக் கொண்டிருந்தன.

அந்தக் கடைக்குப் பின்புறம், குமுளமுனை வீதியின் மறுபக்கத்தில், ஒரு சிறிய அழகிய கல்வீடு இருந்தது ஞாபகம் வந்தது. இப்போ அங்கே பார்த்த போது அந்த வீடும் குண்டு வீச்சுக்குத் தப்பியிருக்கவில்லை என்பது தெரிந்தது. அதன் முக்கால் பங்கு இடிந்து தரைமட்டமாக இருக்க, பின்புறத்தில் மட்டும் ஒரு சிறிய பகுதி எஞ்சி இருந்தது.

கையில் தோலினாலான ஒரு சிறிய பயணப்பையுடன் அந்த முச்சந்தியில் தனியே நின்ற சுந்தரத்துக்கு, தான் இந்தப் பயணத்தை மேற்கொண்டு வந்தது, தனது மனைவி கூறியதுபோலவே, சிறுபிள்ளைத்தனமான காரியமோ என்ற சந்தேகம் இலேசாகத் தலைதூக்கியது.

இந்தச் சந்தியிலிருந்து இன்னமும் மூன்று மைல்கள் குமுளமுனை வீதியில் சென்றால்தான் அவர் தங்களுடைய தென்னந்தோட்டம் இருக்கும் கொத்தியாம்பத்தை அடைய முடியும்.

'அவ்வளவு தூரத்தையும் நடப்பதற்குள் இருட்டிவிடுமே!... வீதியில் இருந்து மேலும் ஒரு மைல் வரை உள்ளே செல்ல வேண்டுமே!... அத்துடன் தென்னந் தோட்டத்தில் இப்போது இருப்பது யார் என்றுகூடத் தெரியாதே!... காலையில் என்றால் எல்லாவற்றுக்கும் வசதியாக இருக்கும்!...ஆனால் இன்றிரவை எங்கே கழிப்பது?' என்ற சிந்தனையுடன் அந்த உடைந்த கல்வீட்டின் முன்னே நின்றுகொண்டிருந்தார் சுந்தரம்.

அந்த வீட்டு வளவுக்குள், ஒரு மூலையில் சமண்டலை இலைச் சருகுகளைக் கூட்டிக் குவித்துக் கொண்டிருந்த ஒரு கிழவர், சந்தியில் வந்து நின்று அங்குமிங்கும் பார்த்து, பின் இப்போது தனது வளவுக்கு முன்னால் நின்று கொண்டிருந்த மனிதரைக் கவனிக்கத் தவறவில்லை. அவருடைய கையிலிருந்த தோற்பையும், உடையும், தோற்ற தோரணையும், அவர் வெளிநாட்டில் பல காலம் வாழ்ந்த ஒருவர் என்பதை, அனுபவம் மிக்க அந்தக் கிழவருக்குத் தெரிவித்தன.

'யாராக இருக்கலாம்?... இடம் தெரியாமல் அவதிப் படுபவர் போலத் தெரிகின்றதே!' என்ற எண்ணங்களுடன் கிழவர் உடைந்த மதிற்கவரில் தொங்கிக் கொண்டிருந்த சிறிய கேற்றைத் திறந்து கொண்டு அந்த மனிதரிடம் சென்றார்.

"என்ன இதிலை நிக்கிறியள்?... நீங்கள் எங்கை போகவேணும்!" எனக் கேட்டார் கிழவர்.

"நான் கொத்தியாம் பத்துக்குப் போகவேணும்!... அங்கைதான் எங்கடை தென்னந்தோட்டம் இருக்குது!" சுந்தரம் சொன்னார்.

கொத்தியாம்பத்துத் தென்னந்தோட்டம் என்றதுமே கிழவர் ஒரு விசேடக் கவனத்துடன், "உங்கடை தென்னந்தோட்டமோ?... நீங்கள் ஆர்?... உங்கடை பேர் என்ன?" என ஆர்வத்துடன் வினவினார்.

"நான் எஞ்சினியர் வேலுப்பிள்ளையின்ரை மகன்... சுந்தரலிங்கம்... எங்கடை அப்பாவுக்கு இதுதான் சொந்த ஊர்!"

"எஞ்சினியர் வேலுப்பிள்ளையர் எழுபத்தேழுக் கலவரத்தோடை வெளிநாட்டிலை இருக்கிற தன்ரை பிள்ளையிளிட்டைப் போட்டார் என்டு தெரியும்!.. அதற்குப் பிறகு அவர் இந்தப் பக்கம் வந்த சிலமன் இல்லையே!"

"ஓம் பெரியவர்!... அப்பா எழுபத்தேழிலையே லண்டனுக்கு வந்திட்டார்... நாங்கள் ... பிள்ளையள் எல்லாரும் அதுக்கு முதலே லண்டனுக்குப் போட்டம்!... எழுபத்தேழிலைதான் அம்மா செத்தவ!"

"மெய்தானே!... வேலுப்பிள்ளையரும் நானும் கிட்டத்தட்ட ஒரு வயதுதான்... அவர் அஞ்சாம் வகுப்புக்குப் பிறகு படிக்க யாழ்ப்பாணம் போட்டார்!... இப்ப எப்படி இருக்கிறார்?... சுகபலமாய் இருக்கிறாரே?..."

"இல்லைப் பெரியவர்!... அவர் காலமாகி இப்ப கிட்டத்தட்ட இரண்டு வருஷமாகுது!... என்னோடைதான் லண்டனிலை இருந்தவர்!"

"ம்ம்... அப்பிடியே!... அவரவற்றை காலம் வர அவரவர் போகத்தானே வேணும்!" எனத் தனக்குத்தானே பேசிக் கொள்வது போலக்கூறிய கிழவர், "ஏன் தெருவிலை நிண்டு கதைச்சுக்கொண்டு நிக்கவேணும்!.. பொழுதும் படுகுது!.. இந்த இருட்டிலை கொத்தியாம்பத்துக்குக் போகேலாது!.. வாருங்கோ!.. என்னரை வீட்டிலை இராத் தங்கிப்போட்டு விடியப் போகலாம்!" என அழைத்தார்.

தன்னுடைய தந்தையைக் கிழவருக்குத் தெரியும் என்பதும், அவருடனேயே இரவைக் கழிக்கலாம் என்பதும் சுந்தரத்திற்குப் பெரும் ஆறுதலை அளித்தது.

அந்த வீட்டின் பெரும்பகுதி இடிந்து கிடக்க, பின்புறம் இருந்த ஒரு சிறிய அறையும், சமயலறையும் மட்டுமே நின்றுகொண்டிருந்தன. அந்த இடிபாடுகள் மத்தியிலும் கிழவர் ஒரு வழியை ஒதுக்கி, தான் உபயோகிக்கும் இடங்களைத் துப்பரவாகவும், ஒழுங்காகவும் வைத்திருப்பதை, மாலை கருகிக்கொண்டிருந்த அந்த நேரத்திலும் சுந்தரத்தினால் அவதானிக்க முடிந்தது.

'... இவருக்கும் அப்பாவின் வயதென்றால்... இப்போ எண்பது வயதிருக்குமே!.. இந்த வயதில், கஷ்டங்கள், துன்பங்கள் நிறைந்த இக் காலத்திலும் ஆரோக்கியமாகத்தானே இருக்கிறார்!.. அதுவும் தனியாகத்தான் இந்த வீட்டில் இருக்கிறார் போலிருக்கிறதே!... என்ற சிந்தனையுடன், அறையையொட்டிப் பத்திஇறக்கி, கிடுகினால் வேயப்பட்டிருந்த சிறிய விறாந்தையில் கிடந்த மர வாங்கில் அமர்ந்து கொண்டார் சுந்தரம்.

கிழவர் சுந்தரத்தை வாங்கில் உட்காரும்படி சொல்லிவிட்டு சமையலறையுள் போய்விட்டார். அவருடைய வயதும், பேச்சும், தோற்றமும் சுந்தரத்துக்கு மறுபடியும் தன் தந்தையினதும், அவர் இறப்பதற்கு முன்னர் தன்னிடம் விடுத்த வேண்டுகோளும் நினைவுக்கு வந்தன.


• • • • •

சுந்தரத்தின் தந்தை வேலுப்பிள்ளை எஞ்சினியரின் சொந்த ஊர் தண்ணீரூற்றுத்தான். ஆனால், இளவயதிலிருந்தே யாழ்ப்பாணத்தில் படித்துக் கொண்டிருந்தாலும், பின்னர் பட்டமும் பதவியும் பெற்று, கோண்டாவிலில் ஒரு செல்வந்தக் குடும்பத்தில் மணஞ்செய்து கொண்டதனாலும், அவருக்குப் பிறந்த ஊரின் தொடர்பு குறைந்து போயிற்று. அவர் படிக்கும் காலத்திலேயே அவருடைய பெற்றோர் இறந்துபோக, அவருடைய இரண்டு அண்ணன்மார்களே அவரைப் படிக்க வைத்தனர். ஆனால், அவர்கள் இருவருமே அதிகம் படிக்காத கிராமத்து விவசாயிகளாக இருந்தனர். அவர்களுடைய குடும்பங்களுக்கும், வேலுப்பிள்ளை எஞ்சினியர் மணமுடித்த குடும்பத்துக்கும் இடையில் அந்தஸ்து, செல்வம், கல்வி என்ற வகையில் ஏறத்தாழ்வு அதிகமாகவே இருந்தது. அத்துடன் வேலுப்பிள்ளையர் இலங்கையின் பல பாகங்களிலும் பணிபுரிய நேர்ந்தமையாலும், தனது சொந்த ஊருக்கு வருவது மிகவும் அருகிவிட்டது. முதலில் அடுக்கடுக்காகப் பிறந்த ஐந்து பெண்களையும், கடைசி மகனான சுந்தரலிங்கத்தையும், சிறந்த கல்லூரிகளில் படித்துப் பட்டம்பெற வைத்து, அவர்களை ஆளாக்குவதிலேயே அவருடைய கவனம் இருந்த படியினால், அவருக்குத் தன் ஊருடனும், உறவுடனும் இருந்த தொடர்புகள் சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டுபோய், அவருடைய சகோதரர்கள் இறந்த பின் அடியோடு அற்றுப்போய் விட்டிருந்தது.

வேலுப்பிள்ளை எஞ்சினியர் ஓய்வுபெறும் காலத்துக்குள் தனது பெண்களுக்கெல்லாம் வசதிமிக்க குடும்பங்களில் திருமணம் செய்து வைத்து, கடைசிப் பிள்ளையான சுந்தரலிங்கத்தையும் ஒரு பொறியியலாளராக ஆக்கியிருந்தார். அந்தக் கால கட்டத்திலே அவர் வட மாகாணம் முழுவதுக்குமே தலைமை நீர்ப்பாசனப் பொறியியலாளராக இருந்தார். அப்போதுதான் அவர் தனது சொந்த ஊருக்கு அருகே இருந்த கொத்தியாம்பத்தில், தென்னைச் செய்கைக்கென காடுகள் வழங்கப்பட்ட போது, இருபத்தைந்து ஏக்கர் காணியைப் பெற்று தென்னை பயிரிட்டு இருந்தார்.

காட்டை அழித்து, எரித்து, வெளியாக்கி, வாழைபோட்டு, தென்னம் பிள்ளைகள் நட்டு அந்தத் தோட்டத்தை உருவாக்குவதில் தனது தந்தை காட்டிய ஆர்வமும், சிரத்தையும், தீவிர ஈடுபாடும், பல்கலைக்கழகத்தில் இறுதியாண்டு படித்துக் கொண்டிருந்த சுந்தரத்துக்கு வியப்பையும், தந்தைமீது ஒரு மதிப்பையும் ஏற்படுத்தியதுண்டு. அந்தத் தோட்டத்தின் தென்னம் பிள்ளைகள் முதல் மூன்று நான்கு ஓலைகள் விட்ட பருவத்தில், சுந்தரலிங்கமும் இலண்டனுக்கு வந்துவிட்டிருந்தார். அங்கு, தனது சகோதரிகள் ஏற்கனவே இவருக்கெனப் பார்த்து வைத்திருந்த ஒரு பெண்ணையும் மணந்து கொண்டார்.

எழுபத்தியேழில் இலண்டனுக்குப் பிள்ளைகளிடம் சென்றிருந்த வேலுப்பிள்ளை எஞ்சினியரின் மனைவி திடீரென அங்கு மாரடைப்பால் காலமாகவே, அங்கு சென்ற வேலுப்பிள்ளையர், பிள்ளைகள் பேரப்பிள்ளைகளின் வேண்டுகோளுக்கும், வற்புறுத்தலுக்கும் இணங்கி, மகன் சுந்தரலிங்கத்துடனேயே



(தொடர்ச்சி 20-ம் பக்கம்)

# புகலிட நிகழ்வுகள்

## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கான "ஏற்றமிகு எழுச்சி மாலைப் பொழுது"

சுவிஸின் லவுசான் மாநகரில் சென்ற 18.01.97 சனிக்கிழமையன்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக நிதிக்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளையின் மகளிர் அணியினர் "ஏற்றமிகு எழுச்சி மாலைப் பொழுது" என்ற நிகழ்ச்சியை நடாத்தினர்.

மாலை நான்கு மணிக்கு தேசியக் கொடியேற்றல், அமைதி வணக்கம் ஆகியவற்றுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. மங்கல விளக்கை மாவீரர் குடும்பத்தினர் ஏற்றிவைக்க அங்கு வருகை தந்திருந்த மக்களை திருமதி பொன்மலர் சோதிநாதன் வரவேற்று உரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து நடன ஆசிரியர்களான செல்வி அபிராமி புவனேந்திரன், திருமதி பிரணவி மோகன்ராஜ், திருமதி தேவகி குமார் ஆகியோரின் மாணவிகள் எழுச்சி நடனங்கள் வழங்கினர். பின்னர் "பொங்கலும் போராட்டமும்" என்ற தலைப்பில் கவிதைகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக சுவிஸ் கிளை பொறுப்பாளர் திரு சோதிநாதன் உரை நிகழ்த்தினார். சிறிலங்கா அரசு தமிழ் மக்கள் மீது பொருளாதாரத் தடைகளை விதித்து எமது மக்களை பெரும் துன்பத்தில் ஆழ்த்தி வருகிறது. இதற்கு எதிராக மாற்றுத் திட்டங்களை வகுத்து எமது தமிழீழ தேசத்தில் கிடைக்கும் வளங்களைப் பெற்று, அதன் மூலம் உற்பத்திகளைப் பெருக்கி எமது மக்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்வதையே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் உடனடி நடவடிக்கையாக மேற்கொண்டு வருகின்றது. மேலும் பல துறைகளிலும் ஆய்வுகளை நடாத்திக் கொண்டிருக்கின்றது. மேற்கத்தேய நாடுகளில் வாழும் நாம் இங்குள்ள தொழில் நுட்ப அறிவுகளைப் பெற்று அதை தமிழ் தேசத்திற்கு சென்றடைய செய்ய வேண்டும் என்றும் அவர் தமதுரையில் குறிப்பிட்டிருந்தார்.

அடுத்ததாக ஜெனீவா மாநில மகளிர் அணியினரின் "மூன்றாம் கட்ட ஈழப்போரும் மக்களும்" என்ற தலைப்பில் வில்லுப்பாட்டு இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ்கிளைப் பிரதிநிதி திரு நடராஜா முரளிதரன் சிறப்புரை வழங்கினார். தமிழீப் பொருளாமிய மேம்பாட்டுக் கழகத்தின் தேவை பற்றியும் அதன் சேவை பற்றியும், தமிழீழப் போராட்டத்தின் இன்றைய நிலை குறித்தும் அவர் தமதுரையில் குறிப்பிட்டிருந்தார். அவரின் உரையைத் தொடர்ந்து அந்த மேடையில் தமிழீழ தேசிய பாதுகாப்பு நிதி சேகரிப்பு இடம்பெற்றது.

பின்னர் திருமதி நீறா சதானந்தன் அவர்கள் நன்றி உரை வழங்கினார். இறுதி நிகழ்வுகளாக திரு ஸ்ரீஸ்கந்தராஜாவின் நெறியாள்கையில் உருவான லவுசான் மாநில மகளிர் அணியினரின் "உறுதி கொள்வோம்" என்னும் நாடகம் இடம்பெற்றது. தொடர்ந்து மகளிர் அணியினர் "நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்" என்ற பாடலை சேர்ந்து பாட நிகழ்ச்சிகள் இனிதே நிறைவு பெற்றன.

(மலரவன்)

## தமிழர்கள் தமது மொழி, கலாச்சாரத்தினை பேணவேண்டும் ஜியான் பொங்கல் விழாவில் நகரபிதா

கடந்த சனிக்கிழமை (18.01.97) அன்று ஜியான் தமிழக்கல்வி நிலையத்தினரால் பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப் பட்டது. ஜியான் மேயர் திரு HURTIGER JEAN-PIERRE அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். திருமகன் தெய்வேந்திரராஜா அவர்கள் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து கல்விநிலையத் தலைவர் திரு.தா. வரதராஜா தலைமையில் ஈழப் போராட்டத்தில் மரணித்த மாவீரர்களுக்குமான பொதுமக்களுக்கும் 2 நிமிட மௌனாஞ்சலியுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.





திரு வரதராஜா அவர்களால் ஜியான் நகரபிதா பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்[illegible] நகரபிதா தமது [illegible]ரையில் "தமிழர்கள் தமது மொழி கலை கலாச்சாரத்தினை இங்கும் பேணுவது சிறப்பானது. அதனால் தங்கள் நாட்டிற்கு சுதந்திரமாக திரும்பிச் செல்லும் போது அவர்கள் தமது பாரம்பரியங்களுடன் செல்வதற்கான சந்தர்ப்பங்கள் உண்டு" என்றார். தொடர்ந்து ஜியான் தமிழ்ச் சிறுவர்களின் பேச்சு, கவிதாஞ்சலி, பாட்டு, கும்மிநடனம், காவடிஆட்டம் என்பவற்றுடன் ஔவையார், வீரபாண்டிய கட்டப்பொம்மன் ஆகிய குறுநாடகங்கள் ஆகியவற்றுடன், சிறப்பு நிகழ்ச்சியாக பாரிசிலிருந்து திருநாவுக்கரசு ஜீவாவின் மாணவியாகிய செல்வி சர்மிலா சர்வேஸ்வரனின் பரதநாட்டிய நிகழ்ச்சியும் நடைபெற்றது. இது விழாவில் கலந்து கொண்ட பிரெஞ்சு மக்களாலும் ஆரவாரத்துடன் ரசிக்கப்பட்டது.



சிறார்களின் பேச்சுக்களின் இறுதியில் "தமிழர்தாகம் தமிழீழத்தாயகம்" என்று நிறைவு செய்தது பார்வையாளர்களின் வரவேற்பைப் பெற்றது.

சார்சல் தமிழ் பெண்கள் அமைப்பின் செயலாளர் திருமதி ஜெயவாணி விஜயகுமார் அவர்கள் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில், தமிழ் சிறுவர்களுக்கு தமிழ்க் கல்வியின் அவசியத்தையும் இந்தச் சூழ்நிலையில் வாழும் எம் சிறார்களுக்கு எமது கலை, கலாசசாரம் என்பவற்றுடன் ஈழப்போராட்டம் பற்றிய மாவீரர்களின் தியாகங்களையும், வீரவரலாறுகளையும் எடுத்துக் கூறவேண்டியது ஒவ்வொரு தமிழ் பெற்றோரின் கடமையென்றும் எல்லோரும் ஒன்றுபட்டு ஈழப்போராட்டத்திற்கு வலுச்சேர்க்க வேண்டும் என்றும் கூறினார். பின்பு திருமதி விஜயகுமாரால் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட சிறார்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. தமிழ்க்கல்வி நிலைய ஆசிரியை திருமதி கோகிலா தர்மகுலராஜாவும் கௌரவிக்கப்பட்டார். இறுதியில் திரு பாலராஜாவும், வணபிதா Michel Flatet உம் நன்றியுரைகள் கூறினர். நிகழ்ச்சிகளை திரு ஜெயக்குமார் அவர்கள் தொகுத்து வழங்கினார்.

ஜியான் நகரில் வசிக்கும் தமிழ்க்குடும்பச் சிறார்களுக்காக கடந்த வருடம் நகர பிதாவின் உதவியுடன் ஒரு கல்வி நிலையம் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

## மியன்மார் நாட்டில் நடந்த தமிழர் பாதுகாப்பு பெருவிழா

மியன்மார் (பர்மா) நாட்டில் வசிக்கும் தமிழ் மக்களின் "குழந்தைகள் பெருவிழா" யாங்கோனில் கடந்த 4ம் திகதி தமிழர் அறநெறிக் கழகத்தினரால் சிறப்பாக நடாத்தப்பட்டது.

தமிழ்க் குழந்தைகளே எதிர் காலத்தில் தமிழ்ச சமுதாயத்தின் பாதுகாவலர்களாக இருக்கவேண்டும் என்பதால் இந்த நிகழ்ச்சிக்கு தமிழர் பாதுகாப்பு பெருவிழா என சிறப்பாக பெயரிடப்பட்டது. மியன்மார் இந்து மத்திய சபையின் விழாவுக்கு செயலாளர் திரு. எஸ். முருகன் தலைமை வகித்தார்.

கழகத்தின் "கலைஞர் விருது" சமரச சுத்த சன்மார்க்க சங்கத் தலைவர் ஏ.பி.எஸ். சிவராமன் அவர்களுக்கு வழங்கப்பட்டது தொடர்ந்து பல கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றதுடன் கழகத்தால் நடாத்தப்பட்ட போட்டிகளில் பரிசு பெற்றோருக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. குறிப்பாக திருக்குறள் மனனப் போட்டிகளும் நடாத்தப்பட்டு வெற்றி பெற்றோருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டமை சிறப்பான அம்சமாகும். மியன்மார் நாட்டில் பத்து இலட்சத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் வசிப்பது குறிப்பிடத்தக்கது.

வருகிறது Ramy இசைத்தட்டுக்களில் பாடல்கள்
கதிரவன் பிக்சர்ஸ்
வழங்கம்
ஜீவன்
S.V. சுதன்ராஜா

சிந்தனைச் சிற்பிகளே தயாராகுங்கள்
ஜீவன் திரைப்படக் குழுவினர் நடாத்தும்
சிறுகதை - கவிதை கட்டுரைப் போட்டிகள்
ஆக்கங்கள் சமகாலப் பார்வை கொண்டதாக இருக்க வேண்டுகிறோம்.
ஆக்கங்கள் வந்துசேர வேண்டிய கடைதித் திகதி: 30.02.97
ஆக்கங்கள் ஜீவன் திரைப்படத்தின் சிறப்பிதழில் பிரசுரிக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும்
19, Rue Mathieu,
93400 Saint Ouen
S.Sutharsan
Tel: 01 40 12 75 44

## ஏகலிட நிகழ்வுகள்

# தமிழீழ நிர்மாணத்தை கட்டியெழுப்புவது நமது தேசியக் கடமை

தமிழீழ விடுதலை வேள்விக்கு வங்கக் கடலில் தன்னை ஆகுதியாக்கிய கேணல் கிட்டுவினதும், ஒன்பது சகபோராளிகளினதும் நினைவெழுச்சிக்கூட்டம் கடந்த 19.01.1997 ஞாயிற்றுக்கிழமை பாரிசில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் சிறப்புரையாற்றிய விடுதலைப்புலிகளின் பிரெஞ்சுக் கிளைப் பிரதிநிதி வேமனோகரன் அவர்கள், புலம்பெயர்ந்த தமிழர்கள், தாயகத்தின் நிர்மாணப் பணியை முன்னெடுக்க உதவி செய்வது என்பது வரலாறு அவர்களுக்கு இட்ட கட்டளை ஆகும் என்றும், இதற்காக ஒவ்வொருவரும் தமிழீழ வைப்பகத்தில் தமது நிலையான வைப்புக் கணக்குகளை ஆரம்பித்து அதன்மூலம் தாயகத்தின் பொருளாதார முன்னேற்றத் திட்டத்தின் வளர்ச்சிக்கு முன்னோடியாக இருக்க வேண்டும் என்றும் தமதுரையில் வேண்டிக்கொண்டார்.

இதனையடுத்து சபையிலிருந்த மக்கள், பிரெஞ்சுக்கிளை உறுப்பினர்கள் மூலம் தமது தமிழீழ வைப்பகத்திறகான கணக்குகளை ஆரம்பித்தனர். பலர் தாங்களும் இதில் பங்குபெறுவோமென உறுதியளித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சோதியா கலைக்கல்லூரி மாணவிகளின் நடனங்களுடன் தமிழர் கலை பண்பாட்டுக் கழகத்தின் தமிழீழ இசைக்குழுவின் தேசிய எழுச்சிப்பாடல்களும் இடம் பெற்றதுடன் நிகழ்ச்சிகள் யாவும் இனிதே நிறைவேறின.

# அன்னையின் அரங்கில் தனயனுக்கு விழா

தளபதி கேணல் கிட்டு அவர்களின் நான்காவது ஆண்டு நினைவு நாள் 11.01.97 சனியன்று டோட்முன்ட (DORTMUND) நகரில் தமிழர் எழுச்சி விழா





வாக நடைபெற்றது. தமிழீழத்தில் காலமான கேணல் கிட்டு அவர்களின் தாயாரின் ஞாபகார்த்தமாக 'கிட்டம்மா அரங்கு' என எழுச்சி விழா மண்டபத்திற்கு பெயரிடப்பட்டது.

கடும் குளிரையும், பனிமழையையும் பொருட்படுத்தாது ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் கேணல் கிட்டு அவர்களையும், அவரோடு மாவீரரான ஒன்பது பேரையும் ஆராதிக்க ஒன்று கூடினர்.

முதலாவது நிகழ்ச்சியாக விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழக ஜேர்மன்கிளை நடன ஆசிரியை திருமதி வானதி தேசிங்குராஜாவின் மாணவிகளின் நடனம் இடம்பெற்றது.

கேணல் கிட்டு நினைவாக இடம் பெறற ஓவியப் போட்டியில் பங்கு பற்றி வெற்றி பெற்றோருக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. பல மாணவர்கள் ஜேர்மன் கலை நுணுக்கங்களைப் பயன்படுத்தி தமிழீழ நிகழ்வுகளை ஓவியமாகப் படைத்திருந்தனர்.

உலகத் தமிழர் இயக்க ஜேர்மனிக் கிளைப் பொறுப்பாளர் திரு.ரி. காங்கேயமூர்த்தி, கல்விப்பணிப் பொறுப்பாளர் திரு. இரா.நாகலிங்கம், ஜேர்மனி தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளர் திரு. இ. ஆனந்தராஜா ஆகியோர் பரிசில்களையும், சான்றிதழ்களையும் வழங்கினர். தொடர்ந்து சிறுமி துஷாலினி சிவப்பிரகாசம், கேணல் கிட்டுவைப் பற்றி வீராவேசமாக உரையாற்றினார்.

'சோராத மனம்' எனும் நடனத் தொகுப்பு தமிழர் கலைப் பண்பாட்டுக் கழகத்தினால் தயாரித்து வழங்கப்பட்டது. இதில் கலைபண்பாட்டுக் கழக நடன ஆசிரியைகளான திருமதி வானதி தேசிங்குராஜா, வாணி, பவித்திரா செல்வகாந்தன், சுகன்யா சிவசுதன் ஆகியோர் நடனங்களை வழங்கினர். தமிழர்களின் விடுதலை உணர்வுகளை தட்டியெழுப்பும் பாடல்களுடன் நடனங்கள் அமைந்தமை சிறப்பாக இருந்தது.

கலைபணபாட்டுக் கழகத்தின் துணைப்பொறுப்பாளரும் இசையமைப்பாளருமான திரு. கண்ணனின் தமிழிசை இடம் பெற்றது. கேணல் கிட்டு அவர்களின் தாயாரின் நினைவாக அமுதநிதி சுதர்சன் இயற்றிய பாடலை திரு.கண்ணன் பாடினார்.

கலைபண்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஷ்ப்பற்றால் திரு. நா. சிவநாதன் தயாரித்து வழங்கிய 'சமாதானப் புறா' நாடகம் கேணல் கிட்டுவின் கடற் பயணத்தை ஞாபகப்படுத்தியது. கிட்டுவைப் போலவே ஒருவர் இதில் நடித்து அனைவரின் பாராட்டுதலையும் பெற்றுக் கொண்டார்.

கலைபண்பாட்டுக் கழக நடன ஆசிரியை திருமதி சாவித்திரி 'முல்லை மலர்' என்ற நாட்டிய நடனத்தை வடிவமைத்தார். இதனை அமுதநிதி சுதர்சன் தயாரித்து வழங்கினார். நடனங்கள் தாயக விடுதலையோடு ஒன்றிணைந்திருந்தன.

கேணல் கிட்டு எழுச்சிவிழாவில் உரையாற்றிய ஜேர்மனி உலகத் தமிழர் இயக்க கலைப்பணிப் பொறுப்பாளர் திரு.இரா. நாகலிங்கம், "புலம்பெயர்ந்தாலும் தமிழன் தமிழனாக வாழ வேண்டும் என்பதை வற்புறுத்தியவர் கேணல் கிட்டு" என்றார்.

விடுதலைப் புலிகளின் ஜேர்மன் கிளையின் கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. கா.சிவநாதன் பேசுகையில், சிங்கள ஆய்வாளர்களே இனவெறிச் சிங்கள மனப்பான்மையை விமர்சிக்கத் தொடங்கிவிட்டமை குறித்து விளக்கினார்.

இவ்வெழுச்சி விழாவில் 1996ம் ஆண்டில் ஜேர்மனியில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்ச்சித் தொகுபபு ஒளியிழை நாடா வெளியிடப்பட்டது. நிகழ்ச்சிகளை திரு. வலன்ரைன் தொகுத்து வழங்கினார்.

(V.R.வரதராஜா)

# வங்கக் கடல் நாயகர்களின் நினைவில் டென்மார்க் தமிழர்கள்

தமிழீழ விடுதலைப் புலிகள் டென்மார்க் கிளையினரால் தளபதி கேணல் கிட்டுவினதும், ஒன்பது வீரவேங்கைகளதும் 4வது ஆண்டு நினைவுகூரல் ஈக்காஸ் நகரில் கடந்த 11.01.97 சனிக்கிழமை நினைவு கூரப்பட்டது.

தாயக மண்ணின் மீது தானாத [illegible] காலை இழந்த பின்பும் களத்தில் வீரனாக நடந்து காட்டிய கேணல் கிட்டுவினதும், தோழர்களினதும் வரலாற்றுச் சாதனைகளை சகல பரிமாணங்களின் ஊடாகவும் சீர் தூக்கும் நினைவுகள் பல ஒருங்கமைக்கப்பட்டிருந்தன.

விடுதலைப் பாடல்களுக்கான அபிநயம், கவிதை நிகழ்வு, அழியாத சுவடுகள் என்னும் குறுநாட்டியத் தொகுப்பு, கலாகேந்திரா நாட்டியாலயததினரின் நாட்டிய நிகழ்வுகள் ஆகியன இடம் பெற்றன. இன்றைய தமிழீழ நிகழ்வுகளையும், வன்னிப் பெருநிலப்பரப்பின் வரலாற்றுப் பணிகளையும் விளக்கும் வண்ணம், 'அடைக்கலம்' என்னும் நாடகத்தை கலை பண்பாட்டுக் கழகத்தினா தயாரித்திருத்தனர். தமிழீழ இசைக் குழுவினர் விடுதலைப் பாடல்களை சிறந்த முறையில் உருக் கொடுத்து வழங்கினர். நிகழ்ச்சியின் இறுதியில் முல்லைச்சமர் ஒளிப்படம் காட்டப்பட்டது.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive


## லக்ஸ்மி ஏசியன் சோப்

**LUXMY ASIAN SHOP**
BAU STR-22
47137 DUIS BURG
TEL: 0203. 439214
FAX: 0203. 439214

**LUXMY ASIAN SHOP**
WIEDENHOF STR-03
47798 KREFELD
TEL: 02151. 608726
FAX: 02151. 608726

DUISBURG கடைக்கு செல்லும்வழி:
(A.59 DUSSELDOR F - DINSLAKEN AUSFART - UNTER MEIDERICH)
உரிமையாளர்: கா. மகேந்திரம் (H.P.017295533332)

## மாபெரும் மலிவு விற்பனை

| | | |
|---|---|---|
| சர்க்கரை 500g | – | .89pf |
| கடலைப் பருப்பு 500g | – | .99pf |
| மைசூர் பருப்பு 500g | – | .99pf |
| ஜூஸ் வகை அனைத்தும் | – | .99pf |
| புளி | – | .99pf |
| மிளகு 100g | – | .99pf |
| வெந்தயம் 100g | – | .39pf |
| பெ.சீரகம் 100g | – | .49pf |
| அரிசிமா | – | 2.69Dm |
| 5 Kg U.S.A. அரிசி | – | 9.00Dm |
| 20 kg BROKEN அரிசி | – | 23.90Dm |

அத்துடன் தொழில் நுட்ப முறையில் வீடியோ படம் எடுத்தல், மணவறை, மாலை, சாப்பாடு, றைஸ்குக்கர், அடுப்புகள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.



## KBM கே.பி.எம் நகை மாளிகை KBM

அனைத்து நாடுகளுக்கான குறைந்த விலை தொலை பேசிச் சேவை
Telephone Cabine
53410863 53410865
53410864 53410855
தொலை பேசிச் சேவைத் தொடர்புகளுக்கு

தொலை பேசி: 01 42.59.31.74

5, Rue Labat, 75018 Paris
Métro: Marcadet Poissonniers

KBM நகை மாளிகை

உங்கள் விருப்பம் போல் தங்க நகைகளை வடிவமைத்துத் தருபவர்கள்

# முல்லைப் பெருஞ்சமர்

போரியலின் சிறப்பாய்...
தமிழன் வீரத்தின் மிடுக்காய்...
வெற்றிக் கனியமுதை அள்ளிச்சேர்த்த
'ஓயாத அலைகள்'
முல்லைப் பெரும் சமரை
அப்படியே அள்ளியெடுத்த
வீடியோப் பதிவு !!

# ஓயாத அலைகள்

இரண்டாம் உலகப் போரிற்குப்பின்
ஒரு சமரில் பெருந்தொகைப் படையினர் இறந்த சமர்
முல்லைச் சமரே ஆகும்.

## பாரிசில்

**02.02.1997 ஞாயிறு**
**3.30 மணி / 5. மணி**
**7 மணி**

**இடம் : LE TRIANON**
**80, BD. ROCHECHOUART**
**M° : ANVERS**

## துலுாசில்

**02.02.1997 ஞாயிறு**
**மாலை 4 மணிக்கு**

**இடம் : CENTRE ALBAN MINVILLE**
**Le Cinema Métro**
**Bellefontaine.**
**Métro : Bellefontaine.**

மேலதிக தொடர்புகளுக்கு : **01 43 58 11 42**

# ஈழத் தமிழ் மக்களுக்கு கைகொடுப்போம்

## தமிழ்ப் போராளிகள்

தமிழ் இனத்தவர்கள் தமிழ் பேசுபவர்கள், காலம் காலமாக இலங்கையில் சொல்லவொண்ணாத கொடுமைகளுக்கு ஆளானார்கள். இலங்கை அரசின் கொடுமையில் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாக்க போராளி குழுக்கள் தோன்றின; ஆயுதம் ஏந்தின! ஆனால் பல போராளி குழுக்கள் தோன்றினாலும், விடுதலைப் புலிகளைத் தவிர மற்றைய குழுக்கள் காலப்போக்கில், தமிழ் மக்களுடைய பாதுகாப்பில் போதிய அக்கறை காட்டவில்லை. சில குழுக்கள் இலங்கை அரசோடு இச்சகமும் பேசின. அதனால் தமிழர்கள் மனதிலிருந்து அவை மறையத் தொடங்கின. ஈழத் தமிழர்கள் விடுதலை இயக்கம் என்றால் அது ஒரே இயக்கம் 'விடுதலைப் புலிகள் இயக்கம்தான்' என்றாயிற்று விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவன் பிரபாகரன் தன்னிகரற்ற தலைவனானான்!

## தமிழ் ஈழம்

அவன் தமிழ் ஈழம்தான், தனிநாடுதான், தமிழர்களை வாழ வைக்கமுடியும் என்றான். இனியும் சிங்களவர்களோடு சேர்ந்து வாழ இயலாது என்றான். அவன் மேற் கண்ட முடிவே அல்லற்பட்டு ஆற்றாது தினம் தினம் செத்து மடிந்த தமிழர்கள் நெஞ்சிலும் இறுதி முடிவாயிற்று. அதுவே உலகில் எங்கெங்கும் உள்ள தமிழர்களின் கோரிக்கையும் ஆயிற்று.

## அமைதி வழி பேச்சிற்கு இடமில்லையா ?

நாடுகளிடைச் சட்டத்திலும் போர் தடை செய்யப்பட்டுள்ளது என்பது உண்மைதான். எந்தப் பிரச்சினைக்கும் ஆயுதம் ஏந்தக்கூடாது என்றுதான் சட்டம் கூறுகிறது. அதற்கு மாறுபட்ட சட்டக் கருத்தில்லை. ஆனால் வெறிபிடித்த சிங்களவரும், உரிமைக்குப் போராடும் தமிழனும் அமைதி வழி பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வது எப்போ? என்பதில்தான் பிரச்சினையே இருக்கிறது. சிங்கள அரசு என்றென்றும், ஈழத் தமிழர்களை அந் நாட்டு குடிமக்களாக பார்த்ததில்லையே! தமிழர்களை அழிப்பதில்தானே, தமிழ் நாட்டிற்கு விரட்டுவதில் தானே அக்கறை காட்டியது! வரலாறு இதைத்தானே கூறுகிறது.

> நெற்றிக்கண் வார சஞ்சிகைக்கு சட்டப் பேராசிரியர் ச.கிருஷ்ணசாமி அவர்கள் எழுதிய "ஈழமக்களுக்கு கைகொடுப்போம்" என்ற கட்டுரையில் இருந்து எடுக்கப்பட்ட பகுதிகள்.

## இந்திய அமைதிப்படை

ஈழத் தமிழர்களுக்கு உதவுவதாக கூறிக்கொண்டு இந்தியா அனுப்பிய அமைதிப்படை ஈழத் தமிழர்களுக்கு எதிராகத்தானே செயல்பட்டது. சிங்களப்படை செய்ய எண்ணியதை இந்திய அமைதிப்படை செய்து முடிக்க நின்றதல்லவா? எதற்காக அனுப்பப்பட்டது என்பதை அனுப்பியவாகளே மறந்து செயல்படவில்லையா? இலங்கை அரசும் அமைதிப்படையின் போக்கினை ஏற்கவில்லை என்பதும் உண்மைதானே! இறுதியாக அமைதிப்படை இலங்கை அரசுக்கும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் பேச்சு வார்த்தை என்ற பேச்சிற்கு இடமின்றி பெரும் போரைத் தோற்றுவித்து நாடுதிரும்பவில்லையா?

## இலங்கை அரசின் பயங்கரவாதம்

இலங்கை அரசு 1995 ஆம் ஆண்டு செப்டெம்பர், ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் யாழ்ப்பாணத்தின் மீது தாக்குதல் நடத்தி தமிழர்களை கொன்று குவித்தது. விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தை விட்டுவெளியேறும் பொழுது, தமிழ் மக்களும் இடம் பெயர்ந்தனர். பலர் இந்தியாவில் தஞ்சம் புக வந்த நேரத்தில், இந்திய கடலோர எல்லைப்படை அவர்களை இந்தியாவில் நுழையவிடாமல் தடுத்தது. பலர் நடுக்கடலிலேயே கொல்லப்பட்டனர். இந்திய அரசும், அன்று தமிழ் நாட்டில் ம.தி.மு.கவும் பாட்டாளி மக்கள் கட்சியும் இன்னும் பிற கட்சிகளும் பணமும், உணவுப்பொருட்களும், இரத்தமும், மருந்துகளும் சேகரித்து ஈழத்தமிழ் மக்களுக்கு தர இந்திய செஞ்சிலுவை சங்கத்திடம் வழங்கின.

## உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு

அந்த நேரம் சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு (W.P.15933/95) தாக்கல் செய்து, இலங்கையில் இருந்து வரும் அகதிகளை நடுக்கடலில் தமது எல்லையோரக் கடல் படை தடுத்து நிறுத்தவும், சுட்டுக் கொல்வதும், நாடுகளிடை சட்டத்திற்கு (International Law) முரண்பட்டது என்று நான் வாதிட்டேன். யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் உண்ண உணவின்றி, நோய்க்கு மருந்தின்றி வாடும் தமிழ் மக்களுக்கு இந்திய அரசு, குறிப்பாக தமிழ் நாட்டு அரசு சர்வதேச ஜெனீவா கோட்பாடுகள் 1949 (The Geneva Conventions, 1949) மனிதாபிமான முறையில் உதவிட வேண்டும் என்று கோரினேன். உயர் நீதிமன்றம் அதன் தீர்ப்பில் நவம்பர் 24,1995 அன்று இந்திய அரசை இப்படிப்பட்ட முடிவெடுத்து, உதவிகள் வழங்கிட வேண்டும் என்று கட்டாயப்படுத்த நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்று கூறினாலும் மனிதாபிமானமான நடவடிக்கையாக யாழ்ப்பாண தீபகற்பத்தில் உண்ண உணவின்றி நோய்க்கு மருந்தின்றி செத்துமடியும் மக்களுக்கு இந்திய அரசும், தமிழ்நாடு அரசும் விரும்பினால் உதவி செய்யலாம் என்று கூறியது. ஆனால் அன்றைய இந்திய அரசு செய்ததா? தமிழ்நாடு அரசு அதைப் பற்றி நினைத்துப்பார்த்ததா? இல்லையே! இந்திய அரசுக்கு மனிதாபிமான நோக்கே அன்று இல்லை. தமிழ் நாட்டு அரசுக்கு தமிழர் உணர்வே அன்று இல்லை! இன்றைய அரசுக்காவது உண்டா?

## இன்றும் மக்கள் மருந்தின்றி வாடுகின்றனர்

யாழ்ப்பாண தீபகற்பத்தில் இன்றும் மக்கள் நோய்க்கு மருந் [illegible]றனர் என்ற செய்தி வந்த வண்ணம் உள்ளன. இங்கு அரசியல் கட்சிகள், தமிழ்மக்கள் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்திடம் சேகரித்துக் கொடுத்த மருந்தும் மற்றப் பொருட்களும் யாழ்ப்பாணம் செல்லவில்லை. இலங்கை அரசின் முயற்சியால் இந்திய அரசு இங்கேயே எல்லாப் பொருட்களையும் முடக்கி வைத்துவிட்டது. என்னே மனித நேயம் இந்திய அரசிற்கு!

> ஈழத் தமிழர்கள் விடுதலை இயக்கம் என்றால் அது ஒரே இயக்கம் 'விடுதலைப் புலிகள் இயக்கம்தான்' என்றாயிற்று. விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவன் பிரபாகரன் தன்னிகரற்ற தலைவனானான்!

## இந்திய செஞ்சிலுவைச் சங்கம்கூட மனிதாபிமானத்தை இழந்துவிட்டதா ?

பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கங்களும் ஈழத்தில், யாழ்ப்பாணத்தில், தமிழ் மக்களுக்கு மருந்துகளையும், மற்றப் பொருட்களையும் கொண்டு வந்து கொடுத்து உதவுகின்றன. ஆனால் இந்திய செஞ்சிலுவைச சங்கம் மட்டும் கொடுத்த பொருட்களையும் கொண்டு சேர்க்கவில்லை, இன்னும் சேர்க்கவில்லை. ஏன்? தேவகௌடா அரசை தட்டிக் கேட்பார் இல்லை. உண்மை! தமிழக முதலமைச்சர் கருணாநிதியும் கேட்டாரில்லை!

## மேலும் தாக்குதல்

இலங்கை அரசு, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று கூறிக் கொள்வது இலங்கை இராணுவத்தை பலப்படுத்திக் கொள்ள கால அவகாசம் பெறுவதற்காகத்தான். நேற்றைய இலங்கை அதிபர் ஜெயவர்த்தனாவும் அதைச் செய்தார். இன்றைய இலங்கை அதிபரும் அதைத்தான் இன்றும் செய்து கொண்டிருக்கிறார். மேலும் தமிழ் மக்களைக் கொன்றுகுவிக்க திட்டம் வகுத்துக்கொண்டிருக்கிறார். இந்திய உதவி கிடைத்திடாமல் தடுக்க இந்திய பிரதமரை சந்திக்க இலங்கை அதிபர் இந்தியா வந்தார்

> விடுதலைப் புலிகளுக்கு எதிரான தமிழ் மக்கள் ஆதரவற்ற சக்திகளை ஒன்று திரட்டி நிலை நிறுத்தி வருவதாகவும், வரதராஜப் பெருமாளும் ஈழம் திரும்பி அவருடைய தமிழர் துரோக அரசியலை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

## சந்திரிகா இந்தியா வந்தது அவரது தனிப்பட்ட வருகை அல்ல !

இந்திய அரசு இலங்கை அதிபர் சந்திரிகா குமாரதுங்கா இந்தியா வந்தது அவரது தனிப்பட்ட வருகை என்று கூறியது ஆனால், அரசியல் நோக்கர்கள் கருத்துப்படி சந்திரிகா இந்தியாவுக்கு தனிப்பட்ட முறையில் வரவில்லை! இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக இந்தியாவின் ஆதரவைப் பெறுவதற்காகவே அவர் இந்தியா வந்தார். இந்தியப் பிரதமர் தேவகௌடாவையும் பார்த்து, இலங்கையில் என்ன நடந்தாலும் அது விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்டது என்ற மாயையை இந்தியாவில் தோற்றுவிக்குமாறு கேட்டுச் சென்றார். இந்திய செஞ்சிலுவைச்சங்கம் கூட மனிதாபிமான உதவிகளை தமிழ் மக்களுக்கு செய்யக்கூடாது என்று கேட்டுக்கொண்டார்!

## சந்திரிகா வரதராஜப் பெருமாளை பார்த்தாரா ?

இலங்கை அதிபர் சந்திரிகா குமாரதுங்கா 1996 டிசம்பர் கடைசி வாரத்தில் இந்தியாவுக்கு வந்தார். அவர் இலங்கையில் தமிழ்மாநில முதலமைச்சராக ஜெயவர்த்தனே அரசால் அமர்த்தப்பட்ட வரதராஜப் பெருமாளை இந்தியாவில் சந்திக்கவும் வந்தார். ராஜஸ்தான் மாநில தலைநகர் ஜெயப்பூருக்கு நேரடியாகச் சென்றார். ஈழத் தமிழர்களுக்கு எதிராக வரதராஜப் பெருமாள் ஆதரவைக் கேட்டிருக்கிறார். யாழ்ப்பாணத்திலும், மற்ற இடங்களிலும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தமிழ் மக்கள் ஆதரவற்ற சக்திகளை ஒன்று திரட்டி நிலை நிறுத்தி வருவதாகவும், வரதராஜப் பெருமாளும் ஈழம் திரும்பி அவருடைய தமிழா துரோக அரசியலை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

## வரதராஜப் பெருமாள் எங்கு வைக்கப்பட்டிருக்கிறார் ?

இந்திய அரசு ராஜீவ்காந்தி படுகொலை பற்றி விசாரித்து வரும் ஜெயின் கமிஷன் முன்பு, வரதராஜப் பெருமாள் எங்கிருக்கிறார் என்று தெரியாது என்று கூறியது. இந்திய அரசு வரதராஜப் பெருமாளுக்கு எல்லா வசதிகளும் செய்து ராஜஸ்தான் மாநிலத்தில் ஓர் ஊரில் விருந்தினராக வைத்திருக்கின்றது என்றாலும் ஜெயின் கமிஷன் முன்பு அப்படி ஓர் அப்பட்டமான பொய்யைக் கூறியது. ஆனால், இலங்கை அதிபர் சந்திரிகா குமாரதுங்காவுக்கு வரதராஜப் பெருமாள் இந்தியாவில் இருக்கும் இடம் தெரிந்திருக்கிறது. அதனால் தான் அவர் நேராக ராஜஸ்தான் மாநில ஜெய்ப்பூருக்கு சென்றார். வரதராஜப் பெருமாளை பார்த்தார். ஈழத் தமிழர்களுக்கு விரோத அமைப்புகளை ஒரு முகப்படுத்த முனைந்நார்.

## ஜெயின் கமிஷன் அவமதிப்பு !

இதை அறிந்த ஜெயின் கமிஷன், ஜெயின் கமிஷனை இந்திய அரசு அவதூறு செய்துவிட்டதாக கருதியது. வரதராஜப் பெருமாள் இருக்கும் இடத்தைத் தெரிந்து வைத்துக் கொண்டே அவர் இருக்கும் இடம் தெரியாது என்று கூறியது. இது ஜெயின் கமிஷனை இந்திய அரசு அவமதிப்பதாகும் என்று கூறியது. ஜெயின் கமிஷன் வரதராஜப் பெருமாளை ராஜீவ்காந்தி கொலை பற்றி விசாரிக்க வேண்டும் என்று கூறியது. இந்தியா வேறுவழியின்றி வரதராஜப் பெருமாளை ஜெயின் கமிஷன் முன் இப்பொழுது கொண்டுவர இருக்கிறது.

## முதலமைச்சருக்கு ஒரு வேண்டுகோள் !

இந்நிலையில், ஈழ மக்கள் விடுதலை வேட்கையை ஈழத் தமிழ் மக்கள்வேறு, விடுதலைப் புலிகள் வேறு என்று பிரித்துப் பார்க்க இயலாது. விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்திடல் சட்ட விரோதம் என்று கூறிக் கொண்டு, நித்தந் நித்தம் செத்து மடியும் தமிழ் மக்களுக்கு, ஈழத்தமிழ் மக்களுக்கு துரோகம் செய்யலாமா? மனிதாபமான முறையிலாவது இந்திய செஞ்சிலுவைச் சங்கத்திடம் கொடுத்த மருந்துகளையும், மற்றப் பொருட்களையும் ஈழத் தமிழ் மக்கள் பெற்றிடச் செய்தல் உங்கள் கடமை அல்லவா? நீங்கள் தமிழா அல்லவா? ஈழத் தமிழ் மக்களுக்கு கைகொடுங்கள்.

# கல்கியின் கே.பாலச்சந்தர்

கே. பாலச்சந்தர் இயக்கிய கல்கியை நண்பர்களுக்கு இடையேயான சந்திப்பொன்றில் 'பெண்விடுதலை' பற்றிய படம் என்ற அபிப்பிராயம் ஒன்று வந்ததால் பார்க்க நினைத்தேன். பார்த்துவிட்டு, எழுதுவதற்கு ஏதேனும் இருந்தால் அது மிகக் கோபமாகவே இருக்கும் என்பதால் விட்டு விட நினைத்தேன். டிசம்பர் 96 பிலிமாலயா ஆசிரியர் குழு அபிப்பிராயத்தைப் பார்த்த பின்னால் எழுதவேண்டிய தேவை இருப்பதை உணர்ந்தேன்.

பெண் விடுதலை பற்றி அறியாத அப்பாவியாக அடங்கிப் போகும் மனைவி, பெண் விடுதலைபற்றி விரிவுரைகள் நிகழ்த்தும் பெண், விவாகரத்து, போன்றவை வருவதால் கல்கி படத்தோடு வேறு இரு படங்களையும் ஆரம்பத்திலேயே ஞாபகப் படுத்திக்கொள்ள வாசக/ வாசகிகளைக் கோருகிறேன். படங்கள் 1. முத்தையாவின் அவள் அப்படித்தான். 2. RC சக்தி/ திலகவதியின் பத்தினிப் பெண். இந்த இரண்டு படங்களிலும் வராத ஒரேஒரு புரட்சிகரமான பாலச்சந்தர் விஜயம்; குழந்தை மீது ஆசையுள்ள ஒரு பெறமுடியாத பெண்ணுக்கு குழந்தை வேண்டும். ஆனால் அது தனது கணவனின் விந்துவழியான குழந்தையே வேண்டும்.

புரட்சிப்பெண் இங்குதான் வருகிறாள். தனது உடல் பற்றி பிரக்ஞை அற்றவள். உடலை சொத்தாகவோ உடைமையாகவோ கருதாதவள். அவ்வாறான 'விதைக்கத்தக்க' தன் உடலை 'ஆதாரவிந்துவை' புதைக்கக்கொடுத்து 'புனிதச்சிசுவை' வேண்டும் சங்கீதரூபிணி செல்லம்மாவுக்குக் கொடுத்து 'தியாகம்' செய்கிறாள்.

தன் உயிரை பண்டமாக மறுப்பவள் சரிதான். உடமையாக மறுப்பவள் சரிதான். அவளது மறுப்பில் இங்கு மையம் பெற்றிருப்பது என்ன? அவளது மறுப்பின் ஆதாரமாகி திரூபணமாகி இருப்பது என்ன? ஆண் உடல், அது கூடப் பரவாயில்லை ஆணின் விந்து இங்கு சொத்தாகிறது, உடமையாகிறது, புனிதமாகிறது, அங்கீகாரத்துக்கான விக்கிரகமாகிறது.

பின் இந்தப் புரட்சிப்பெண் தன் காதலனோடு வாழ்ந்து, அக் குழந்தையை செல்லம்மா




வுக்குக் கொடுத்திருக்கக்கூடாது? செல்லம்மாவின் கணவன் கொடுமையானவன், அயோக்கியன், வக்கிரம் பிடித்தவன். விவாகரத்துப் பெறுகிறான். ஏன் அவளது விந்து மட்டும் புனிதமும், அவனுக்கு மரபுப்படி, ஆசாரப்படி உரியதாக ஆகிறது?

மூச்சுக்கு முன்னூறுதரம் பினாத்தும் கல்கிக்கு இது ஏன் கண்ணுக்குப்படவில்லை? Duet பற்றி; சினிமா காதலர்கள் பற்றி, பிரா போடுவது பற்றி நிறையத் தத்துவம் விடுகிறாள் கல்கி. அடுத்தடுத்த காட்சிகளில் கனவுக் காட்சிகளில் டூயட் பாடுகிறாள். ஈரத்தில் ஒட்டிய பெருத்த மார்புகளைக் காட்டுகிறாள். படத்திற்குள்ளேயே பாத்திரப் படைப்புக்கும் / காட்சியமைப்புகளுக்கும் ஏன் இந்த முரண்பாடு?

சகிக்க முடியவில்லை! பாசாங்கும், வேசமும் சகலத்தையும் சும்மா சகட்டு மேனிக்கு மறுத்துப் பேசுவதும் கலகக்காரி போல ஆட்களைத் தூக்கி வீசுவதும் மட்டும் பெண்விடுதலை ஆகிவிடாது. பிஸ்னஸ்மேன்களின் Board Meeting இல் ஆசை நாயகி என்று சொல்வதால் அவளது வேசம் கலைந்து போகச் செய்கிறாளாம் கல்கி.

இரண்டு பெண்டாட்டிக் கலாச்சாரம் தமிழ்க் கலாச்சாரம் என்கிறார் ஒரு எழுத்தாளர். தமிழக அரசியல் வாதிகளின் கௌரவம் அவர்களது மனைவியரின் எண்ணிக்கைதான். பெரிய பிஸினசுகளில் பெண் ஒரு வர்த்தகப் பண்டம்.

எந்த உலகத்தில் இருக்கிறார் பாலச்சந்தர்? எல்லா மனைவியரையும் தூக்கியெறியும் பிரகாசிறகு இப் பெண்ணைத் தூக்கியெறிய அப்படியென்ன பெரிய பிரச்சினை இருக்கப் போகிறது? பாலச்சந்தரின் Super Women கள் ப[illegible] கனவுப் பெண்கள்.

கொடுமைக்காரக் கணவன் விபத்தில் இறந்து விட்டதைக் கண்ணாரக் கண்டு விடுதலை கிடைத்ததென பெருமூச்சுவிடுகிறாள் திலகவதியின் பெண். விடுதலைப் பெண் / அப்பாவிப்பெண் பாத்திரங்கள் ஏற்கனவே அவள் அப்படித்தானில் வந்திருக்கிறார்கள். இப் படத்தில் இருக்கும் ஒரே புதுமை கணவனின் விந்துள்ள குழந்தை கோரும் பெறமுடியாத பெண்ணும், அதற்கென தன் உடலைத் தரும் புரட்சிப் பெண்ணும் இருப்பது மட்டும்தான்.

பாலச்சந்தரின் பிரச்சினையே இதுதான். மத்யதர வர்க்கப் பெண்களின் அனுபவங்களைப் பெருமைப் படுத்திக் கொள்வார். பாத்திரங்களுக்கு சுயாதீனமான தர்க்கபூர்வமான வளர்ச்சி என்பதே இருக்காது. பிரச்சினைகள் பூதாகரமாகி நெருக்கலுக்குள் அமிழும் போது பாலச்சந்தர் அங்கே தோன்றி தனது தனிநபர் மதிப்பீடுகளை முன்வைப்பார்.

பெண் பைத்தியமாவாள். ஊர்விட்டு ஓடிப் போவாள். தியாகி ஆவாள். இல்லை: கடைசிக்கு அந்தரத்திலேயாவது நிற்பாள்.

அப்புறம் பரஞ்சோதியின் பாத்திரம் எத்தகையது? அவனுக்குத் தெரிந்திருக்கிறது. அவளது நடத்தை அபத்தம்; பொய். காரண காரியத்துக்குள் வராதது. பாலச்சந்தருக்கும் அது தெரியும். ஆகவேதான் காதலுணர்ந்து, ஒருவனோடு வாழும் பெண்ணாக வருவாள் என பரஞ்சோதி கடைசிவரை காத்திருக்கிறான்.

ஒரு ஆணின் விந்து புனிதப்பட, மற்றொருஆண் 'இந்தப் பைத்தியக்காரப் பெண்ணின் மனம் திருந்தி வர' காத்திருக்கிறான். பாலச்சந்தரின் பெண்கள் தம் பிரச்சினையை உணர்ந்ததாகக் கருதி சத்தம் போட்டுப் பேசி எல்லைகள் உடைத்துக் கொள்ள முன் வரும் போது ஆண் வேலியிட்டு அவர்களைக் காப்பான். முடியாதெனில் மனம் பேதலித்துப் போவான். யோசித்து இடசித்தமுள்ளவனாக இயல்பாக வாழமாட்டான்.

இவ்வளவு மோசமான 'ஆண் விந்து ஆதிக்கப்படம்' பெண் நிலை விடுதலைப் படமாகக் காணப்படுவது அபத்தத்தின் உச்சம்.

இரண்டு அபிப்பிராயங்கள்.

**புரட்சிப்பெண் இங்குதான் வருகிறாள். தனது உடல் பற்றி பிரக்ஞை அற்றவள். உடலை சொத்தாகவோ உடைமையாகவோ கருதாதவள். அவ்வாறான 'விதைக்கத்தக்க' தன் உடலை 'ஆதாரவிந்துவை' புதைக்கக்கொடுத்து 'புனிதச்சிசுவை' வேண்டும் சங்கீதரூபிணி செல்லம்மாவுக்குக் கொடுத்து 'தியாகம்' செய்கிறாள்.**

1. இந்தியா டுடே ஆசிரியர் வாஸந்தி கமல்ஹாஸன் பற்றி 'புதுமைப்பித்தன்' என அட்டைப் படக் கட்டுரை ஒன்றை எழுதியிருக்கிறார்.

அவ்வை சண்முகியின் மேக்கப் 'உன்னதம்' பற்றி எழுதியதோடு, விமர்சனமற்று அதன் வெற்றி பற்றி எழுதிச் செல்கிறார். ஸார்லி ஸாப்ளினைப் பற்றியெல்லாம் சங்கீதம் சீனிவாசரால் கமல்ஹாஸன் பற்றிப் பேசுகிறபோது குறிப்பிடுகிறார்.

'உன்னதம்' போன்ற வார்த்தைகளுக்கு 'தரிசனம்' போன்ற சொற்களுக்கு அர்த்தமே இல்லாமல் போய்விட்டது. கமல்ஹாஸனின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவது சரி. அதற்காக சுகதுக்கங்களைக்கூட புனிதப்படுத்துவது ஆரோக்கியமான பார்வை அல்ல. கமல் காஹன் இத்தகைய கட்டுரைகளால் புளகமெய்தமாட்டார் என்றே நினைப்போம். எய்தினால் அவருக்கு விமோசனமே ஒன்றுமில்லை. தமிழ் சினிமாவும் உருப்படவே உருப்படாது.

2. பிலிமாலயா இதழில் ஸ்கிரிப்ட் எழுதுவதுபற்றி பயிற்சியெடுக்க கமல்ஹாஸன் அமெரிக்கா போவதாக எழுதியிருக்கிறார்.

இந்தியாவில்தான் உலக சினிமாவின் அற்புதக் கலைஞரான ரே வாழ்ந்தார். கிரிஜ்கர்னாட் போன்ற மேதைகள் வாழ்கிறார்கள். நல்ல ஸ்கிரிப்டுகள் எல்லாம் புத்தகமாகக் கிடைக்கிறது. அமெரிக்க ஸ்கிரிப்ட்; பிறகு அமெரிக்க மேக்கப்; பிறகு அமெரிக்கா? சினிமா என்று கமல்ஹாஸன் ஆகாமல் இருந்தால் சரி.

தன் சொந்த மக்களின் வாழ்பனுபவம், தீவிர சினிமா விமர்சனப் பார்வை இவைகளே இன்று தமிழுக்குரிய ஸ்கிரிப்ட் எழுத்தாளனை உருவர்க்கும் இரண்டு ஆதாரங்கள்.



கே.பாலச்சந்தர்

ஒரு குறிப்பு வாசகர்க்கு:

18.12.1996 இலண்டன் ஸன்ரைஸ் வானொலியில் முகம் படத்தின் விமர்சனம் தொடர்பாக எனது நேர்முகம் ஒன்று ஒலிபரப்பானது. அந்த விமர்சனத்தில் முகம் படத்தின் சில நடிகர்கள் சில காட்சிகளில் சிவாஜி கணேசனின் மிகை நடிப்பை பின்பற்றியிருந்தனர். இது ஆரோக்கியமானதல்ல என்று சொல்லியிருந்தேன்.

இது பற்றி மாற்றுக் கருத்துள்ள எவரோடும் நான் விவாதிக்க திறந்த மனதுடனேயே இருக்கிறேன். ஈழமுரசு இலண்டன் பிரதிநிதி ஜெயந்தனுக்கும் பின் மதிப்புக்குரிய திரு. பத்மநாப ஐயருக்கும் போன் செய்து அருமையான வார்த்தைகளில் ஏசிய அந்த வாசகரை நான் கேட்டுக் கொள்வதெல்லாம் இதுதான். அநாகரீகமான கலாச்சாரத்துக்கு நான் உடன்பயணி ஆகமுடியாது.

எவராயினும் தமது அபிப்பிராயங்களை நான் தொடர்ந்து எழுதும் ஈழமுரசுக்கோ, அல்லது நான் கருத்து வெளியிடும் தகவல் சாதன முகவரிக்கோ அனுப்புங்கள். நான் தொடர்ந்து, விவாதிக்க தயாராயிருக்கிறேன்.

மறுபடியும் சொல்கிறேன். செவாலியர் விருது ஒரு தகுதி அல்ல. எந்த விருதும்தான். சிவாஜிகணேசன் நல்ல நடிகர் அல்ல என்று நான் சொல்லவில்லை. அவரிடம் மிகை உணர்ச்சி நடிப்பு இருந்தது. அது இன்று நாம் எதிர்நோக்கும் வாழ்க்கைக்கு நெருங்கிய இயல்பான சினிமாவுக்கு உகந்தது அல்ல என்கிறேன்.

இதுபற்றி ஈழமுரசில் ஒரு கட்டுரை எழுதும் உத்தேசமும் உண்டு. வாசகர் எதிர்வினையை எதிர்பார்த்திருக்கிறேன்.



யமுனா ராஜேந்திரன்

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

## காணி நிலம்

தங்கியிருந்து அங்கேயே காலமாகியும் போனார்.

* * * * *

சமையலறையினுள் இருந்து வெளிவந்த கிழவர், தேனீர் கிண்ணத்தை சுந்தரத்திடம் கொடுத்துவிட்டு, தானும் அத்திவாரக் கட்டில் உட்கார்ந்து கொண்டே கேட்டார்."என்ன ?... இவ்வளவு காலத்துக்குப் பிறகு வாறியள் ?"

"அப்பா சாகிறதுக்கு நாலைஞ்சு நாளைக்கு முதல் ஒருநாள் என்னைக் கூப்பிட்டுச் சொன்னார்"...

'தம்பி சுந்தரம்!... என்ரை காலம் இனிக் கொஞ்சநாள்தான்... என்ரை ஊரிலை, நான் நட்ட தென்னம்பிள்ளையளுக்கைதான் என்ரை கடைசி மூச்சை விடவேணும் எண்டு நினைச்சிருந்தன்... அந்த ஆசை நிறைவேறாது எண்டு எனக்கு இப்ப வடிவாய்த் தெரியுது!

ஆனால் எங்கடை நாட்டிலை நிலமை எப்போதும் இப்பிடியே இருக்காது! எப்பிடியும் சண்டையள் முடிஞ்சு ஒரு சுமுகமான காலம் வரும்!... அப்பநான் இருக்கமாட்டன்! ஆனால் எனக்கு ஒரு விருப்பம் இருக்குது...அதை நீ நிறைவேற்றுவியோ? எண்டு கேட்டார். நானும் உடனே ஓமெண்டு சொன்னனான்.

...சுந்தரம்! அப்பிடி ஒரு அமைதியான நிலமை வரேக்கை நீ ஒருக்கா தன்ணியூத்துக்குப் போய் அங்கை எங்கடை தென்னந்தோட்டத்தைப் பார்த்திட்டுவா!... அதிலை இப்ப ஆர் இருக்கினம், ஆர் ஆண்டனுபவிக்கினம் எண்டு தெரியாது. இந்த உறுதியிலை, எங்கடை தென்னந்தோட்டத்து எல்லைகள், விஸ்தீரணம் எல்லா விபரமும் இருக்கு!... அங்கை இருக்கிறவை ஆரெண்டாலும் இருக்கட்டும்! ஆனால் அந்த இருபத்தியஞ்சு ஏக்கரிலை ஒரு ஏக்கரை மட்டும் கேட்டு வேண்டி, அதுக்கு வேலியடைப்பிச்சு, ஒரு சின்னக் கொட்டிலையும் போட்டு, உனக்கு உரிமையாக்கிப் போட்டு வா! உன்ரை கொம்மாவின்ரை கோண்டாவில் வீடு, கொக்காமாற்றை கொழும்பு வீடுகள் எல்லாத்தையும் வித்துப் போட்டு எல்லாருமே லண்டனுக்கு வந்தாச்சு! எங்கடை நாட்டிலை எங்களுக்கெண்டு... எங்கடை சந்ததிக்கெண்டு நீங்கள் உரிமை கொண்டாட இப்ப இந்த கொத்தியாம்பத்துத் தென்னந்தோட்டம் ஒண்டுதான் இருக்கு!... இருபத்தியஞ்சு ஏக்கருக்கும் உரிமை கொண்டாட எங்களுக்கு எந்தத் தகுதியும் இல்லையெண்டு எனக்குத் தெரியும்!... ஆனால் அந்தத் தென்னந்தோட்டம் நானும் கூலி ஆக்களோடை நிண்டு வேர்வை சிந்தி உழைச்சு உருவாக்கின காணி... அதிலை ஒரு ஏக்கரை மட்டும் கேட்டால் ஆரும் தருவினம்!... அப்பிடி இல்லையெண்டாலும் அதிலை ஒரு ஏக்கரை விலை குடுத்தெண்டாலும் வாங்கி நான் சொன்னபடி செய்!... இதை ஏன் சொல்லுறன்... எங்கடை பிள்ளையள் இங்கை லண்டனிலை பிறந்து வளர்ந்து இங்கிலாந்துக் குடிமக்களாய் இருக்குதுகள்தானே...அதுகளுக்குக் கொத்தியாம்பத்திலை ஏன் காணி எண்டு நீ நினைக்கக்கூடும்.

உன்ரை பிள்ளையளையும் சேர்த்து எனக்கு இப்ப எல்லாமாய் பதினேழு பேரப்பிள்ளையள் இருக்குதுகள்!... இன்னும் ஒரு முப்பது வருஷத்திலை இதுகள் வளர்ந்து, உன்னைப் போல பிள்ளைகுட்டியளோடை இருக்கிற காலத்திலை, அதுகளிலை ஒண்டு இரண்டு பிள்ளையெண்டாலும் தங்கடை மூத்த பரம்பரை ஆர் ?... அவையளின்ரை அடிகொடி என்ன ?... ஊரெது ?...எண்டு யோசிக்குங்கள் எண்டுதான் நான் நம்புறன்!... அந்த நேரம்... எங்கடை சந்ததிக்கெண்டு அங்கை ஒரு பொட்டுக் காணிநிலமெண்டாலும் இருக்க வேணும் எண்டதுதான் என்ரை ஆசை!... உன்னாலை ஏலுமெண்டால் இதைச் செய்!... எண்டு சொன்னார். சொல்லி நாலைஞ்சு நாளைக்குள்ளை செத்துப் போனார்.

அந்த நாளிலையிருந்து, அவற்றை கடைசி விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் எண்ட எண்ணம் என்ரை மனதிலை வலுக்கத்தொடங்கீட்டுது!... இப்ப சமாதானப் பேச்சுவார்த்தை நடக்கிற இந் நேரத்திலை நானும் இஞ்சை வரக்கூடியதாய் இருந்தது... அதுதான்!..." என சுந்தரம் தான் தண்ணீரூற்றுக்கு இருபது வருடங்களின் பின்னர் வரநேர்ந்த காரணத்தைக் கூறினார்.

இதை மிகவும் அவதானமாகக் கேட்டுக் கொண்டிருந்த கிழவரின் முகத்தில் இலேசான ஒரு புன்னகை படர்வதை, இருள் பரவிக்கொண்டிருந்த அந்த வேளையிலும் சுந்தரத்திற்கு தெரிந்தது.

"உங்கடை அப்பாவின்ரை விருப்பம் எனக்கு நல்லாய் விளங்குது தம்பி!... எனக்கும் கொத்தியாம்பத்திலை அஞ்சு ஏக்கர் காணி இருக்குது! உங்கடை அப்பா காடு வெட்டி, எரிச்சு, கட்டை பிரித்து, வாழை போட்டு தென்னை நட்ட காலத்திலைதான் நானும் எனக்குக் கிடைச்ச காட்டைத் திருத்திக் காணியாக்கினனான்... தன்ரை கையாலை பாடுபட்டு வேலை செய்து, கஷ்டப்பட்டு, வளர்த்துப் பராமரித்துப் பலன் கண்ட ஆக்களுக்குத்தான் அப்பிடி ஒரு காணியின்ரை அருமை தெரியும்!

...தென்னையை எங்கடை முந்திய ஆக்கள், தென்னம் பிள்ளை எண்டு பேர்வைச்சு, தாங்கள் பெத்த பிள்ளைகளைப் போல வளர்த்து ஆளாக்கினவை. பத்துப் பன்னிரண்டு தென்னைமரம் வளவுக்கை நிண்டால் போதும் ஒரு சின்னக் குடும்பம் சீவிக்க!... உங்களுக்குத் தெரியுமே ?... எங்கடை பழைய ஆக்கள், தங்கடை தென்னம்பிள்ளை, முதல் பாளை தள்ளினவுடனை அதுக்குப் பட்டுத்துணி சுத்தி, பால்வைத்து, பக்குவப்பட்ட பொம்பிளைப் பிள்ளையளுக்கு சாமத்தியச் சடங்கு செய்யிறதுபோல செய்யிறது எண்டு ?... அந்த வழக்கமெல்லாம் என்ரை அப்பு ஆச்சியின்ரை காலத்தோடை சரி!... அப்ப எல்லாற்றை காணியும் சின்னச் சின்னக் காணியள்தான்!... தன்தன் தேவைக்கேற்ப அளவிலைதான் காணிபூமி சம்பாரிச்சினம்!... உங்கடை அப்பாவைப்போல, என்னைப்போல இருபத்தைஞ்சு ஏக்கர், பத்து ஏக்கர், அஞ்சேக்கர் எண்டு பெருமளவிலை தென்னந்தோட்டத்தை உண்டாக்கிப் போட்டு, அத்தினை தென்னம் பிள்ளையளுக்கும் "முதல் பாளை வளர சாமத்தியச் சடங்கு செய்து கொண்டு நிக்கலாமே!..." எனக் கூறிய கிழவர் பெரிதாக வாய்விட்டுச் சிரித்துக்கொண்டார்.

அவருடைய சுவையான பேச்சும், மனந்திறந்த சிரிப்பும் சுந்தரத்திற்கு சுவாரஷ்யமாக இருந்தன.

(மிகுதி அடுத்த வாரம்)

# நாற்று

## அமைதி வரும்

முல்லையில் கிடைத்த வடு
முழுதாக மறையுமுன்...
எல்லையில் இன்னொரு
எதிரி முகாம்!

ஆனையிறவு பரந்தன்
இராணுவப்படையை
நேரடியாய் தாக்கினர்!
ஆயுதக்கிடங்கும் ஆட்டிலறிகளும்
பட்டியலிட முடியா பத்தும் பலவும்
பாயும் புலிவீரர் சொத்துக்களாகின!

அமைதியைக் கொண்டு வந்து...
அகப்பையால் அள்ளித்தந்து - தமிழர்
முகப்பையே மாற்றுவேனென
முன்மொழிந்த ராணியே...

உம் அம்மாவைக் கூப்பிடும்...
மாமாவையும் அழைத்து வரச் சொல்லும்
அமைதி விரைவிலென அவர்களுக்குக்
கூறும்!

புரியவில்லையா...? புதிராக
இருக்கிறதா...?
படித்தவர் நீங்கள் பட்டெனப் புரியுமே!

ஆயுத ஒப்படைப்புத்தான் இப்போ
அடிக்கடி நடக்குதே!
அதுதான்...
அமைதி விரைவில் வரும்!

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

- தமிழொளி -

## '1997' அல்லது '1996 பாகம் II'?

காலக் கலண்டரில்
இன்னொரு புது இலக்கம்
இன்னொரு புது வருடம் -இதில்
மற்றது எல்லாம்
வழமை போலவா...?
சிந்தும் குருதி...
சிதறும் தசைகள்...
எரியும் வீடுகள்...
ஏதிலியாய் எம் மக்கள்...
எல்லாம் வழமைபோலவா...?
நீட்டிய துப்பாக்கி...
வீதியின் குறுக்காய் காப்பரண்...
பார்த்திராத அன்னியமுகம்...
புதைகுழியுள் மக்கள்...
எல்லாம் வழமைபோலவா...?
சிறீலங்காவுக்கு
மெதுவான கண்டனம்...
பலமான உதவி...
எம்மை இன்னும் உலகம் பாராமுகம்...
எல்லாம் சென்றமுறைபோல-
எல்லாம் வழக்கம் போல என்றால்
ஏன் புது வருடம்
ஏன் புது இலக்கம்...?
வழக்கம் போல
1996 பாகம் II என்று
குறிக்கலாமோ...?

-அஸ்வின் சரவணா-
டென்மார்க்

## அந்தக் கடைசி நேரம்!

முருகா கந்தா என்று
ஓலமிட்டு அழுதிருப்பர்
மாதாவே யேசுவே
காப்பாற்றென்று கதறியிருப்பர்
கந்தல் துணியெனினும்
ஒட்டிய வயிறெனினும்
ஓலைக்குடிலெனினும்
புழுதி வயற்காடும்
பிள்ளையார் கோயிலடியும்
மாதா கோவில் மரநிழலும்
போதுமென்று புலம்பியிருப்பர்
கிரேக்கக் கடலே கேட்டிருப்பாயோ
அவர் குரலை!
மூன்று லட்சம் என்று
முற்பணம் வாங்கியவர்
முழுதாக என்ன செய்தார்?

பாதிக்கடலிலே பரிதவிக்க விட்டுச்
சென்றதேனோ?
ஓ... பாவித்தரகர்களே பழியையும்
ஏற்றிடுங்கள்
அடே! த்மிழா!
உலகத்தின் எக்கடலும்
உலகத்தின் எந்நிலமும்
உலகத்தின் எவ்வானும்
சொந்தம் உனக்கில்லை என்று
தெரிந்து கொள்
விக்கினங்கள் ஏதும் இல்லை
நிம்மதி வாழ்விற்கு
நீவாழும் ஈழம்தான்
நிச்சயம் வேண்டுமென்று
நினைத்து வாழ்ந்திடு

ஜெயா, பலர்மோ

## உதிர் பூவின் சுவடு

துணிவதில்லை
நம் மனம் துணிவதில்லை
பணம் தேடும் போக்கா
நம் மனம் எதற்கும் துணிவதில்லை
சுதந்திரத்திற்கும் தான்
துணிவு இல்லை!

நம் சுயநலம்
எம்மோடு இருக்கும் வரை
விடியலில் கூட
தமிழிற்கு விடிவில்லைப் போலும்!

போராட்டம் முடிவதில்லை
நாம் ஒன்றிணையும்
காலம் வரை
போராட்டம் முடிவதில்லை!

நம் உயிர் மடிவதில்லை
மண்ணிற்கு உயிர் மடிந்தாலும்
உடல் மடியும்...!
நாம் மடிவதில்லை....

மயிலை ராசன்

# புகலிட வாழ்வின் பரிமாணங்கள்



## லண்டன் கனவும் - பாரிஸ் கனவும்

பாரிஸ் நகரத்தில் வசிக்கக்கூடிய ஈழத்தமிழர்களின் நிலை என்பது திருவிழாக்கூட்டத்துக்குள் வழி தவறிப்போன சிறுவன் ஒருவனின் நிலைக்கு ஒப்பானது. எப்படி திருவிழாக்கூட்டத்தில், வழிதவறிப்போன சிறுவன், தன்னுடைய பெற்றோர்களை, உறவினர்களைத் தேடிக்கண்டுபிடிப்பதற்காக அந்நிய முகங்களுக்குள் சிக்கித்தவித்துத் திணறி அல்லல் படுகின்றானோ அப்படியே முதலாளித்துவ நுகர் பொருள் கலாச்சாரத்தின் உச்சக்கட்டத்திலிருக்கும் பாரிஸ் நகரத்துக்குள் வாழ முற்பட்டுள்ள ஈழத் தமிழர்களும் தங்களுடைய இருத்தலை உறுதிப் படுத்துவதற்காக பெரும் அவலங்களையும் இடர்பாடுகளையும் சந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

இந்த இடர்பாடுகளுக்கும்_ அவலங்களுக்குமான அடிப்படைக்காரணங்கள் என்ன என்பதைக் கண்டறிய வேண்டுமானால்_ ஈழத் தமிழர்கள் ஏன் பாரிசுக்கு வந்தார்கள் என்ற கேள்விக்கு விடை காண வேண்டும். புதுவைத் தமிழர்களை பிரஞ்சு அரசாங்கம் குடியுரிமை வழங்க அழைத்ததால் பெரும்பாலான மேல் தட்டு மற்றும் நடுத்தரப் பிரிவுகளைச் சேர்ந்த புதுவை மக்களுக்கு 'பாரிஸ் நகரக் கனவு' வாழ்க்கையில் ஈடேற்றப்பட வேண்டிய குறிக்கோளாக இருந்தது. ஆனால்_ ஈழத் தமிழர்களுக்கு அப்படி ஒருபோதும் பாரிஸ் நகரக் கனவு இருந்ததில்லை. அவர்களுடைய கனவெல்லாம் 'லண்டன்' கனவாகத்தான் இருந்தது. மாட்சிமை தங்கிய பிரித்தானிய மகாராணியின் பிரசைகள் என்ற அந்தஸ்த்தும், மாட்சிமை தங்கிய மொழியான ஆங்கில மொழிக் கல்வியும், லண்டன் ஒக்ஸ்பேட், கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகப் பட்டப்படிப்புமே ஈழத் தமிழரின், குறிப்பாக யாழ்ப்பாணத்து மேட்டுக் குடியினரின் ஒரு நூற்றாண்டுக் கனவாக இருந்தது. இந்தக் கனவை ஈடேற்ற வாழ்நாளெல்லாம் உழைப்பதே அவர்களின் வாழ்க்கையின் இலட்சியமாகவும் இருந்தது. பிரான்ஸ் அரசு, புதுவைத் தமிழர்களுக்கு அவர்களது பாரிஸ் கனவை ஈடேற்ற ஓரளவுக்காவது_ தனது கதவுகளைத் திறந்து விட்டதுபோல், பிரித்தானிய அரசு அவ்வளவு சுலபத்தில் ஈழத்தமிழர்களுக்கு வழிவிட்டுவிடவில்லை. அதனால் பணமும், சமூக அந்தஸ்தும், உயர்ந்த ஆங்கிலப் புலமையும் உள்ளவர்களுக்கு மட்டும் தான் லண்டன் நகரக் கதவுகளும், ஒக்ஸ்பேட், கேம்பிறிட்ஜ் பல்கலைகழகக் கதவுகளும் திறந்து கொண்டன.

நடுத்தர மற்றும் அடிமட்ட ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை இந்த லண்டன் கனவு 70களில் பிற்பகுதிவரை ஏக்கத்துக்குரிய நிறைவேறாத கனவாகவே இருந்தது. ஆனால் எழுபதுகளில் பிற்பகுதிகளிலும் 80-களிலும் ஒரு மாபெரும் புலப் பெயர்வுக்கான அடிப்படைக் காரணிகளை சிறீலங்கா அரசு திட்டமிட்டு ஈழமண்ணிலே தோற்றுவித்த போது ஏற்பட்ட 'உந்தித் தள்ளல்' என்பது இந்த நடுத்தர மற்றும் அடிமட்ட ஈழத்தமிழர்களைக்கூட லண்டன் மண்ணில் கால் வைக்கக்கூடிய ஒரு சூழ் நிலையை உருவாக்கியது.

ஆனால் அகதியாக ஐரோப்பாவுக்கு கொழும்பிலிருந்து விமானமேறிய எல்லா ஈழத் தமிழர்களுக்கும் அவர்களுடைய நீண்டகால கனவு நகரத்தின் கால்வைக்கும் பாக்கியம் கிடைக்கவில்லை. கடலில் ஒரு குறித்த இலக்கை நோக்கி கப்பலில் பயணம் செய்யும் பய[illegible] சுழற்காற்றால் கப்பல் திசைமாறி எங்கோ ஒரு கரையில் தரை தட்டி விடும்போது வேறு வழியின்றி அங்கே இறங்கி விடுவதைப்போல, பிரித்தானிய அரசின் குடிவரவுச் சட்டங்கள் இறுக, இறுக, பிரயாண முகவர்கள், அவர்களின் வசதிக்கேற்ப செய்த ஏற்பாடுகளின் பிரகாரமும் செய்த குறைபாடுகளின் பிரகாரமும், சீ... சீ... இந்தப் பழம் புளிக்கும் என்ற திராட்சைப்பழக் கதையில் வரும் நரியைப் போல லண்டன் என்ன லண்டன்? பாரிஸ் பரவாயில்லை! என்ற நினைப்பில் இங்கு வந்து இறங்கியவர்கள் நிறையப் பேர். இதைவிடப் பாரிசில் போய் இறங்கியவுடன், 10 வருட வதிவிட அனுமதி கிடைக்கும் என்றெல்லாம் கேள்விப்பட்டு அதற்காக இங்கு வந்து புகலிடம் தேடியவர்களும் நிறையப்பேர்.

மொத்தத்தில், என்ன அடிப்படையில் வந்தாலும், 'லண்டன் கனவு' சாத்தியமாகவில்லையே என்ற ஏக்கம் மட்டும் பாரிசுக்கு வந்த பெரும்பாலான ஈழத்தமிழர்களுக்கு விட்டுப் போவதில்லை. இந்த ஏக்கம், ஆங்கிலம்தான் சிறந்த மொழி, பிரெஞ்சு என்ன இரண்டாந்தர மொழி இதைப் படித்து என்ன பிரயோசனம் என்ற விரக்தி உணர்வைத் தோற்றுவிக்கின்றது. இந்த விரக்தி உணர்வு பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு சமூகத்தை, பிரெஞ்சு அரசியலை, பிரான்ஸ் நாட்டின் தொழிற் சங்க சட்டங்களை, தொழிலாளர்களுக்குரிய அடிப்படை உரிமைகளை, தெரிந்து கொள்வதற்கான அவற்றின் அடிப்படையில் தமது இருத்தலை நிலை நிறுத்திக் கொள்வதற்கான வாய்ப்பை ஈழத்தமிழர்களுக்கு இல்லாமல் செய்துவிடுகின்றது. இது புதுவைத் தமிழர்களுக்கு இல்லாத ஒன்று. (சில வேளை புதுவைத்தமிழர்கள் லண்டனுக்குச் சென்றிருந்தால் அவர்களுக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்கக்கூடும்)

அடுத்து, ஈழத் தமிழர்களுக்கு அதிகமாக புகலிடம் வழங்கக்கூடிய ஜேர்மனி, சுவிஸ், டென்மார்க், நோர்வே போன்ற நாடுகளில், புகலிடம் கோரும் ஈழத்தமிழர்களை தங்கள் நாட்டிலுள்ள பல்வேறு நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் பிரித்து அங்குதான் வசிக்கவேண்டும் என்று உத்தர விட்டு அனுப்பி வைக்கின்றன. ஆனால் பிரான்ஸ், எல்லைக்குட்பட்ட எங்கு வேண்டுமானாலும் அவர்கள் வசிக்கலாம். என்கிற உரிமையை வழங்கி விடுவதால் 90% மான ஈழத்தமிழர்கள், பாரிஸ் நகரத்தையே தங்கள் வதிவிடமாகத் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர்.

இதற்கு தலை நகரத்தில் அதிக வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும் என்பது ஒரு காரணம் என்று சொல்லப்பட்டாலும், லண்டனுக்கு இணையான பாரிஸ் நகரத்தில் வாழ்கிறோம் என்கிற திருப்தியும் அதில் அடங்கியுள்ளது என்பது குறிப்பிட வேண்டிய ஒன்று.

ஊரில் இருந்த போது இருந்த 'லண்டன் கனவு' என்பது (ஆங்கிலக்) கல்வி கற்க வேண்டும், பட்டம்பெற வேண்டும், அதன்மூலம் சமூக அந்தஸ்திலும் உயரவேண்டும். அதை வைத்து கொழுத்த சீதனத்துடன் திருமணம் செய்துகொண்டு லண்டனில் 'செற்றில்' ஆகிவிட வேண்டும் என்பதுதான்.

ஆனால் பிரான்சுக்கு வந்த பின்பு லண்டன் கனவு சாத்தியமற்றது அல்லது, பின்போடப்பட்டு விட்டது என்ற நிலையில் ஒரு புதிய பரிமாணத்தை எடுக்கின்றது. அதாவது, படிக்கவேண்டும், பட்டம்பெற வேண்டும் என்பதெல்லாம் போய் பணம் சம்பாதிக்க வேண்டும். அதிக பவுணில் தாலி கட்ட வேண்டும். மிகப் பெரிய அளவுக்கு பிள்ளையின் பிறந்தநாள் கொண்டாட வேண்டும். தங்கக் கத்தி செய்து பிறந்தநாள் கேக் வெட்ட வேண்டும், கடை போட வேண்டும், சொந்த வீடு வாங்க வேண்டும், இவற்றின் மூலம் அந்தஸ்த்தை உயர்த்த வேண்டும் என்ற புதிய பரிமாணம் இங்கே தோற்றம் பெறுகிறது.

இதை நடைமுறைப்படுத்த வேண்டுமானால், வேலை செயய வேண்டும். மொழி தெரியாத நிலையில் என்ன வேலை செய்வது? மொழி தெரியாத ஒருவனுக்கு யார் வேலை தருவார்கள்? இது ஒரு பெரிய கேள்வி?

(தொடரும்)

- நக்கீரன்

# தமிழீழச் செய்தித் தொகுப்பு

## வந்தாறு மூலையில் கைதானோரைக் காணவில்லை

வந்தாறு மூலை இராணுவ முகாம் தமிழ் மக்கள் மீதான வன்முறைகளுக்குப் பேர்போனது. கடந்த 6-ம் திகதி இரண்டு அப்பாவி இளைஞர்கள் இந்த முகாமிலிருந்த இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட பின்னர் காணாமற்போயுள்ளார்கள். சின்னத்தம்பி சிங்கராசா (வயது 22), சின்னத்தம்பி ஞானசேகரம் (வயது 15) ஆகியோரே இவ்வாறு காணாமற் போனவர்கள்.

## வயோதிப மீனவர் பலி

சிறிலங்கா கடற்படையினரின் சூட்டுக்கு வயோதிப மீனவர் ஒருவர் பலியாகியுள்ளார். திருமலைக் கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த இந்த வயோதிப மீனவரை எவ்வித தயவு தாட்சணியமின்றி கடற்படை கொலை செய்துள்ளது. இதே வேளை சிங்கள மீனவர்களுக்கு கடற்படையினரின் பாதுகாப்பு ரோந்து செய்யப்பட்டுள்ளது.

## புலிகளின் தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் வீரமரணம்

சிறீலங்கா இராணுவத்துடனான எதிர்பாராத நேரடி மோதலில் விடுதலைப் புலிகளின் தென்மராட்சிப் பகுதி அரசியற் பொறுப்பாளர் கப்டன் ஜீவன் (சிவகுரு ஜெயகுமார் யாழ்ப்பாணம்) வீரமரணமடைந்துள்ளார். கடந்த 19ஆம் திகதி நடைபெற்ற இம்மோதலில் இவருடன் கூட கப்டன் மயூரனும் (தம்பிப்பிள்ளை ரவிசங்கர் யாழ்ப்பாணம்) வீரமரணம் அடைந்துள்ளார்.

## பரந்தன் களமாடிய வேங்கைகளுக்கு நினைவுக் கற்கள்

பரந்தன்_ ஆனையிறவுச் சமரில் களமாடி வீரமரணமடைந்த வேங்கைகளில் மூவருக்கு வன்னிவிளாங்குளத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவுக்கற்கள் நாட்டப்பட்டன. 2-ம் லெப்டினன்ட் இளங்கோவன் (சொக்கலிங்கம் முகுந்தன், ஒலுமடு மாங்குளம்), 2-ம் லெப்டினன்ட் பெருந்திரன் (தர்மலிங்கம் சுதாகரன் யாழ்ப்பாணம்), கப்டன் நக்கீரன் (நடராசா இடாகேசன் யாழ்ப்பாணம்) ஆகிய மாவீரர்களுக்கே நினைவுக் கற்கள் நாட்டப்பட்டன.

## மாமாங்கத்தில் தாக்குதல்

மட்டக்களப்பு மாமாங்கத்தில் ரோந்து சென்ற பொலிசார் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தியதில் ஒரு கான்ஸ்டபிள் கொல்லப்பட்டார். ஏனையோர் ஓடித்தப்பினர்.

## தொலைதூர எறிகணை வீச்சுக்கள் தொடர்கின்றன

ஆனையிறவு இராணுவமுகாமிலிருந்து வகை தொகையின்றி தொலைதூர எறிகணைகள் ஏவப்படுகின்றன. மக்கள் குடியிருப்புக்களை நோக்கி நடாத்தப்படும் இந்த எறிகணை வீச்சால் முறிகண்டி, வட்டக்கச்சி, கொக்காவில், இராமநாதபுரம் ஆகிய பிரதேசங்கள் பாதிப்படைந்துள்ளன.

## குடாநாட்டில் படையினரால் கைதாகிக் காணாமற் போனோர்

சிறிலங்கா இராணுவத்தால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ள குடாநாட்டில் காணாமற் போனோரில் கிடைக்கப்பெற்றவர்களின் பெயர் விபரங்கள்.

1. சண்முகம் வசந்தன் (வயது 18) யாழ்ப்பாணம்
2. பசுபதி டெனிஸ் (வயது 20) யாழ்ப்பாணம்
3. செல்வரெட்ணம் சந்திரகுமார் (வயது 27) கோப்பாய்
4. வேலுப்பிள்ளை சந்திரகுமார் (வயது 27) எழுதுமட்டுவாள்
5. றெஜினோல்ட் ஜீவராஜா (வயது 18) நவாலி
6. இன்னாசிப்பிள்ளை கஜேந்திரன் (வயது 18) யாழ்ப்பாணம்
7. கோபாலபிள்ளை ஜெயசீலன் (வயது 21) நாவற்குழி
8. கந்தையா அருள்தாஸ் (சபேசன்) (வயது 27) யாழ்ப்பாணம்
9. இரட்ணம் ராசா (வயது 19) மிருசுவில்
10. குணரட்ணம் அருமைராசா (வயது 33) யாழ்ப்பாணம்
11. நல்லியன் தவராசா (வயது 27) நீர்வேலி
12. ரத்தினம் செல்வகுமார் (வயது 21) தச்சன்தோப்பு
13. காசிப்பிள்ளை கேதாரநாதன் (வயது 31) யாழ்ப்பாணம்
14. சுப்ரமணியம் மகேந்திரன் - யாழ்ப்பாணம்
15. பூலோகசிங்கம் செல்வநேசன் (வயத் 26) கொட்டடி
16. சிறிபாஸ்கரன் - சாவகச்சேரி
17. யோகநாதன் அற்புதராசா (வயது 25) கொடிகாமம்
18. சின்னையா சோமாஸ்காந்தன் (யாழ்பல்கலைக்கழக மாணவன்)
19. இரத்தினம் ராசேந்திரன் (வயது 28) சாவகச்சேரி
20. செல்லத்துரை (வயது 19) வேம்படி
21. அப்புக்குட்டி நாகராசா (வயது 34) மீசாலை
22. சண்முநாதன் முருகதாஸ் (வயது 29) கோயில் வீதி யாழ்ப்பாணம்
23. கந்தசாமி நடனசந்திரன் - அளவெட்டி
24. பற்றிக் மேரி ரவி - குருநகர்
25. சிதம்பரப்பிள்ளை பேரின்பநாதன் (வயது 21) நாவற்குழி
26. இரத்தினம் செல்வகுமார் (வயது 21) நாவற்குழி
27. நடராசா விநாயகமூர்த்தி - பளை
28. நவரட்ணம் யோகநாதன் (வயது 26) நல்லூர்
29. செல்வரட்ணம் தவநாதன் - சங்கிலியன் வீதி யாழ்ப்பாணம்
30. செல்லத்துரை சாந்தகுமார் - நல்லூர்




# தீவிரவாதிகளை அழிப்பேன் அல்ஜீரிய ஜனாதிபதி சூளுரை

கடந்த 24.01.97 வெள்ளிக்கிழமை தொலைக்காட்சியில் உரையாற்றிய அல்ஜீரிய ஜனாதிபதி லமின் ஜெருவால் தனதுரையில் தீவிரவாதிகளை முற்றாக ஒழிப்பேன் என சூளுரைத்துள்ளார். அவரது இந்த உரையில் சில வெளிநாட்டு சக்திகளே அல்ஜீரிய வன்முறைகளுக்குக் காரணம் எனத் தெரிவித்துள்ளார். ஜனவரி 10 ஆம் திகதி முதல் இது வரை 200 இற்கும் அதிகமானோர் தீவிரவாதிகள் எனக் கருதப்படுவோரால் படுகொலை செய்யப்பட்ட நிலையில் இந்த உரை நிகழ்த்தப்பட்டுள்ளது.




கடந்த 23-ம் திகதி இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்குச் சார்பான கட்சிகளின் கூட்டணி ரோமில் இருந்து விடுத்த அறிக்கையொன்றில் அமெரிக்க நடுநிலையுடன் பேச்சுவார்த்தை நடாத்துவது பற்றி முன்மொழிந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த உரை தொடர்பாக பத்திரிகைகள் வெளியிட்ட கருத்துக்கள் ஜனாதிபதியை விமர்சிக்கும் போக்கிலேயே அமைந்திருந்தன.

வன்முறையைக் கண்டிப்பதோடும், அதனை எவ்வாறு ஒடுக்குவது என்பது பற்றி சிந்திப்பதோடும் மட்டும் நில்லாமல் பிரச்சனையின் அடிப்படையை அறிந்து அதற்கு தீர்வு காண்பதே சரியான வழி என்பதே பத்திரிகைகளின் பொதுக் கருத்தாக அமைந்திருந்தது.

# தொழிற் சங்கத்துடன் கொரிய அரசு பேச்சு வார்த்தை நடாத்த வேண்டும்

கொரிய தொழிற் சங்கங்களுடன் அரச பேச்சு வார்த்தை நடாத்தி தீர்வுக்கு வரவேண்டும் எனத் தெரிவிக்கும் தீர்மானத்தை OCDE எனப்படும் சர்வதேச பொருளாதார ஒத்துழைப்பு ஸ்தாபனம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொரியாவில் கொண்டு வரப்பட்டுள்ள தொழிறசங்க சட்ட திருத்தங்களின் சில பகுதிகளை இவ் அமைப்புக் கண்டிப்பதாகத் தெரிகின்றது. புதிய தொழிற் கொள்கைகளை எதிர்க்கும் தொழிற் சங்கத் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இக் கண்டனம் வெளியாகியுள்ளது.

இது ஒருபுறமிருக்க மியங் டொங் தேவாலயத்தில் தஞ்சம் புகுந்திருந்த தொழிற் சங்கத் தலைவர் கைது செய்யப்பட மாட்டார் என்ற அரசின் உறுதி மொழியை ஏற்று வீடு திரும்பியுள்ளார்.

# செச்செனியாவில் ஜனாதிபதித் தேர்தல்

போரால் அழிந்து போயிருக்கும் செச்செனியாவில் 27.01.97 திங்களன்று ஜனாதிபதித் தேர்தல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இத் தேர்தலில் ஐந்து வேட்பாளர்கள் போட்டியிடுகின்றார்கள்.



பொறிஸ் ஜெல்சினால் பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர் அலெக்ஸான்டர் லெபெட் உருவாக்கிய சமாதான ஒப்பந்தமே இந்த தேர்தலுக்கு வழி வகுத்திருந்தது. செசெனியாவின் முன்னாள் ஜனாதிபதி டுடயேவ் ரஷ்ய குண்டுத் தாக்குதலில் பலியாகியதைத் (?) தொடர்ந்து அவருக்கு அடுத்ததாக விடுதலைப் போராட்டத்தை தலைமை ஏற்று வழி நடாத்திய Zelimkhan இத் தேர்தலில் போட்டியிடுகின்ற போதிலும், அஸ்லான் மஸ்கடோவ் என்னும் மிதவாத வேட்பாளரே தேர்தலில் வெல்வார் என கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன. மத சார்பற்ற செச்செனியா என்ற கொள்கையுடைய இவர் செச்செனியாவை தனி நாடாக பிரகடனம் செய்ய ரஷ்ய தலைமையின் ஒத்தாசையை பெறுவார் எனவும் எதிர் பார்க்கப்படுகின்றது.

# இராணுவ நடவடிக்கைக்கு பெரு முயற்சி ஜப்பானியத் தூதுவராலய பணயம்

பெரு நாட்டில் உள்ள ஜப்பானியத் தூதுவராலயத்தில் 400 இற்கும் அதிகமானோரைப் பணயம் பிடித்து வைத்திருந்த கெரில்லாக்கள் பணயக் கைதிகளில் பெரும் பகுதியினரை விடுதலை செய்துள்ளனர். 73 பேர் மட்டுமே இன்னும் பணயக் கைதிகளாக உள்ளனர்.

கடந்த வாரம் பணயக் கைதிகள் வைக்கப்பட்டிருக்கும் மண்டப பிரதேசத்தில் வெடிச் சத்தம் கேட்டதாகவும் அதனைத் தொடர்ந்து இராணுவ கவச வாகனங்கள் தூதுவராலயத்தை அண்மித்த பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. பெரு நாட்டு அரசு இராணுவத் தாக்குதலை நடாத்தி பணயக் கைதிகளை மீட்க தயார் செய்கின்றதா? என்ற ஊகங்களை இச் செய்தி கிளப்பியுள்ளது.

# ஐ.நா தடையை லிபியா மீண்டும் மீறியது

கடந்த 23.01.96 வியாழக்கிழமை லிபியாவில் இருந்து புறப்பட்ட விமானம் ஒன்று கானாவுக்குச் சென்றுள்ளது. இந்த விமானம் பல உயர் அதிகாரிகளையும் கொண்டு சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. தமது நாட்டு விமானம் ஒன்று ஐ.நா.நாட்டுத் தடையை மீறும் என லிபிய அரசு அறிவித்து இரு நாட்களில் இந்த மீறல் நடைபெற்றுள்ளது. கானாவுக்கு சென்ற விமானத்தின் விமானி தனது விமானத்துக்கு எரிபொருள் பற்றாக் குறையாக இருப்பதாக அறிவித்ததைத் தொடர்ந்து கானா விமான நிலையக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் விமானத்தை இறங்க அனுமதித்தனர்.

# சந்தோசின் செயலாளராக சவிம்பி

அங்கோலா ஜனாதிபதி ஜோசே எடுவார்டோ சந்தோசின் செயலாளராக செயலாற்ற யூனிட்டா தலைவர் ஜோனாஸ் சவிம்பி உடன்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அங்கோலாவின் யூனிட்டாக் கெரில்லாக்கள் சமாதான ஒப்பந்தத்தை செய்து கொண்ட பின் இருந்த அதிகாரப் பங்கீடு தொடர்பான இழுபறிக்கு இப் பதவி ஒரு முடிவை ஏற்படுத்தும் எனப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# பிரான்சும் ஜேர்மனியும் கூட்டு பாதுகாப்பு ஒப்பந்தம்

பிரான்சும் ஜேர்மனியும் கூட்டு பாதுகாப்பு ஒப்பந்தமொன்றை கடந்த டிசம்பரில் செய்து கொண்டுள்ளன. நீண்ட நாட்களாக இரகசியமாக வைக்கப்பட்டிருந்த இந்த ஒப்பந்தத்தின் விபரங்களை லு மோண்ட் பத்திரிகை வெளியிட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளின் இணைப்பின் மூலம் உருவாகும் இந்த இராணுவ அமைப்பு அமெரிக்க இராணுவத்தினை விட பலம் மிக்கதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இரண்டாம் உலகப் போரில் எதிரும் புதிருமாக இருந்த பிரான்சும் ஜேர்மனியும் இராணுவ ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை செய்து கொண்டதை பலர் ஆச்சரியத்துடன் காண்கின்றனர் எனவும் அப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

# சதாமின் மகனுக்கு வைத்திய உதவி; பிரான்ஸ் மீது ஐ.நா சபை தடை

ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைனின் மகன் உடாய் தாக்குதல் ஒன்றில் காயமடைந்ததைத் தொடர்ந்து அவருக்கு வைத்திய உதவியளிக்குமாறு ஈராக் பிரான்சிடம் கோரிக்கை விடுத்திருந்தது. இதனை பிரான்ஸ் நிராகரித்திருந்தது. இது ஒருபுறமிருக்க பிரான்ஸ் நிராகரித்ததை ஈராக் கண்டித்திருந்தது. உடாயிற்கு ஏற்பட்ட காயம் வைத்திய அத்தியாவசியம் அற்றது எனக் கருதும் ஐ.நா சபையின் வைத்திய கட்டுப்பாட்டு சபை அத்தகைய உதவியை தடுத்துள்ளது.

# பிரமிட் முறை வியாபாரத்தால் மக்கள் கிளர்ச்சி; பிரதமர் மீது 'கல்லெறி மாநகர' சபைக்குத் தீ வைப்பு

பிரமிடல் (Pyramidal) முறையில் இயங்கி வந்த வியாபார நிறுவனங்கள் தமது வருமானத்தை நட்டத்தில் காட்டி மக்களின் பணத்தை கொள்ளையடிப்பதை உணர்ந்த அல்பேனிய அரசு, அத்தகைய வியாபாரத்துக்கு தடை விதிக்கும் சட்டம் ஒன்றை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளது. ஆத்திரமடைந்த மக்கள் பாராளுமன்றத்தின் மீது தீப்பந்தங்களை வீசி தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

இத் தாக்குதலில் பிரதமர் உட்பட பலர் காயமடைந்துள்ளனர்.

# சீனாவிடம் கையளிக்கப்படும் ஹொங்கொங் மனித உரிமை பற்றி அமெரிக்கா அக்கறை

எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் சீனாவின் கைக்குச் செல்லும் ஹொங்கொங்கில் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது பற்றி அமெரிக்கா தனது அக்கறையை வெளியிட்டுள்ளது. பிரித்தானிய ஆட்சியில் இருந்து சீனாவிடம் கையளிக்கப்படும் ஹொங்கொங் நாட்டு மக்களின் உரிமைகள் தொடர்பாக பல மேற்கத்தேய நாடுகளும் தமது அக்கறையை அவ்வப்போது வெளியிட்டு வந்துள்ளன.

இது ஒரு புறமிருக்க கடந்த ஆட்சி மாறறத்தின் பின் அதிகாரத்தை கையேற்கவுள்ள நிர்வாக அதிகாரி சே. குவா தனது மந்திரிசபையை 24.01.97 வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளார். அவர் அமைத்துள்ள மந்திரி சபையில் 15 பேர் அங்கம் வகிப்பர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்கத்தைய பத்திரிகைகளின் கருத்துப்படி அந்த 15 உறுப்பினர்களும் பீக்கிங் ஆட்சி பீடத்துக்கு நெருங்கியவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அன்டார்டிக்கா சென்ற முதல் பெண்



அன்டார்ட்டிக்கா தென் முனையை சென்றடைந்த முதல் பெண்மணி என்ற பெருமையை பிரான்சைச் சேர்ந்த Laurance de la Ferriere பெற்றுள்ளார். 55 நாட்களில் 1300 கி.மீட்டர் தூரத்தை நடந்து சென்ற இவருக்கு வழிகாட்டியாக அவரது கணவர் செயலாற்றினார்.

மணித்தியாலத்துக்கு 100 கி.மீ வேகத்தில் குளிர்காற்று வீசுகையில் 30 பாகை குறை வெப்ப நிலையில் இவர் தனது பயணத்தை மேற் கொண்டிருந்தார்.

Charlotte (வயது 3), Celine (8 வயது) உடைய இரு பெண் குழந்தைகளுக்குத் தாயான புளோரன்ஸ் ஒரு நாளைக்கு 21 கி. மீட்டர் வீதம் நடந்து தனது பயணத்தை மேற் கொண்டுள்ளார். சிறு வயது முதல் எடுத்த காரியத்தை இறுதி வரை நிறைவேற்றும் அவரது பழக்கம் இந்த வெற்றியை ஈட்டித் தந்துள்ளதாக அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஐ.நா வுக்கு செலுத்த வேண்டிய தொகையை அமெரிக்கா செலுத்தும் !

ஐநாவுக்கு அமெரிக்கா செலுத்த வேண்டியுள்ள தொகையை விரைவில் படிபபடியாகச் செலுத்தி முடிக்கும் என அமெரிக்க சார்பில் ஐநா வின் புதிய செயலாளர் நாயகம் கொவ்பி அனான் இடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாம் செலுத்த வேண்டியுள்ள கடன் தொகையை விரைவில் படிப்படியாக செலுத்தி முடிப்போம் என தெரிவித்த அமெரிக்க அதிகாரி ஹெலம்ஸ் இந்த பணத்தை ஒரே தடவையில் செலுத்தினால் அது துஷ்பிரயோகம் செய்யப்பட்டு விடும் என்பதனாலேயே படிப்படியாகச் செலுத்த உள்ளதாக ஒரு கொள்கை விளக்கமும் அளித்துள்ளார்.

ஐ.நா வின் வரவு செலவுத் திட்ட மொத்த தொகையின் அரைப்பங்கு பணத்தை செலுத்தாமல் அமெரிக்க இழுத்தடித்து வருகின்றது. ஐ.நா வின் தீர்மானங்களில் அதிக செல்வாக்குச் செலுத்தும் அமெரிக்கா, முன்னாள் செயலாளர் பூட்றோஸ் காலி மீண்டும் பதவி ஏற்பதை தடுத்தது குறிப்பிடத்தக்கது.

## வீட்டுத் திட்ட வைப்புப் பணம் வட்டி வீதம் குறைப்பு

பிரான்சில் அமுலில் உள்ள PEL எனப்படும் வீட்டுத் திட்ட வைப்புத் திட்டத்தில் இது வரை வழங்கப்பட்டு வந்த 5.25 வீத வட்டி 4.25 வீதமாக 23.01.97 முதல் மாற்றப்பட்டுள்ளது. இந்த வகை வைப்புத் திட்டத்தில் நான்கு வருடங்கள் பணத்தை வைப்பிலிட்டவர்களுக்கு வீடு வாங்க கடன் வழங்கப்படும் என்பது கட்டாயமாகும்.

இந்த கடனுக்கான வட்டி வீதமும் கடந்த வாரம் முதல் குறைக்கப்பட்டுள்ளது. மேலும் PEL திட்டத்தில் பணத்தை வைப்பிலிட்டவர்கள் தமது சகோதரர், குழந்தைகள் போன்ற நெருங்கிய உறவினர்களுக்கு வீடு வாங்குவதற்குக் கடன் உதவிபெறவும் இத்திட்டம் வழி செய்கின்றது.

# ஜெருசலேம் வரை பாலஸ்தீனம் அரபாத் நம்பிக்கை

பாலஸ்தீன அதிகார சபையின் தலைவர் பாலஸ்தீனத்தின் எல்லைகள் ஜெருசலேம் வரை செல்லும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார். றம்ழான் நோன்பு முடிவுறும் வேளையில் லுமோன்ட் பத்திரிகை நிருபர் ஒருவருக்குப் பேட்டியளித்த பாலஸ்தீன அதிகார சபையின் தலைவர் யசீர் அரபாத், தனது பேட்டியின் ஓரிடத்தில் "சுரங்கத்தின் ஓர் எல்லையில் வெளிச்சம் தெரிகின்றது என்றும், அதன் பின் ஜெருசலேம் தெரிகின்றது என்றும் தெரிவித்துள்ளார்"

சிஸ்ஜோர்டானியில் இருந்து விலகும் இஸ்ரேலியப் படைகள் மேலும் பல பகுதிகளில் இருந்து விரைவில் வெளியேறும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இப் படைகள் வெளியேற்றம் தொடர்பான பேச்சு வார்த்தை சிக்கல் நிறைந்ததாக இருக்கும் எனத் தெரிவித்த அவர், இறுதியில் ஒரு உடன்பாட்டுக்கு வருவோம் எனவும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## வாரக் குறிப்பு

**19.01.96 ஞாயிற்றுக்கிழமை**

- சேர்பியத் தலைமைப்பீடமே சேர்பியாவில் கலவர சூழ்நிலையை உருவாக்குகின்றது என எதிர்க் கட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- நான் எல்லா பல்கேரியர்களின் ஜனாதிபதியாக இருப்பேன் எனக்கு கட்சி வேறுபாடுகள் கிடையாது என பல்கேரியாவின் புதிய ஜனாதிபதி Petar தெரிவித்துள்ளார்.
- ஆஸ்திரிய நாட்டு பிரதமராக Viktor Klima பதவியேற்றுள்ளார். பிரதமர் இராஜினாமச் செய்ததைத் தொடர்ந்து புதிய பிரதமராக இவர் பதவியேற்றுள்ளார்.
- 30 வருடங்களாக கெப்ரோன் நகரத்தை ஆக்கிரமித்திருந்த இஸ்ரேலியப் படைகள் வெளியேற்றம்.
- சிரியாவுடன் நிபந்தனையற்ற பேச்சவார்த்தை நடாத்த இஸ்ரேல் இணக்கம்.
- சூடான் நாட்டுக்கு இராணுவ பொருளாதார உதவியளிக்க எகிப்து மறுத்துள்ளது.
- அமெரிக்காவில் கருத்தடை முறையை அமுல் செய்யும் இரு வைத்திய நிலையங்கள் மீது குண்டுத் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

**20.01.97 திங்கட்கிழமை**

- ஜனாதிபதி கிளின்டன் இரண்டாவது பதவிக்காலத்துக்கு பதவியேற்பு.
- கனடிய இராணுவத்தினரில் பலர் பொஸ்னியாவில் மது அருந்திய நிலையில் ஒழுங்கீனமாக நடந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.
- இத்தாலிய முன்னாள் பிரதமர் பெருலொஸ்கினி மீதான வழக்கை விசாரிக்கும் நீதிபதி தனது பதவியை இராஜினாமச் செய்துள்ளார்.
- பல விளையாட்டு வீரர்களுக்கு பார்சல் குண்டு அனுப்பப்படும் வாய்ப்பு உள்ளதாக பிரிட்டிஷ் பொலிசார் தெரிவித்துள்ளனர். பிரபல விளையாட்டு வீரர் பொறிஸ்பேக்கரும் அவர்களில் அடங்குவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ருவன்டாவில் உள்ள உதவி நிறுவனங்களின் ஊழியர்களின் தொகை குறைக்குமாறு ஐநா சபை ஆலோசனை தெரிவித்துள்ளது. கடந்த வாரம் ஒரு சமூக சேவை ஊழியர் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.
- கௌதமாலாவில் ஐநா வின் சமாதானத் திட்டத்தை சீனா அங்கீகரித்துள்ளது.

**21.01.97 செவ்வாய்க்கிழமை**

- செக் நாடும் ஜேர்மனியும் ஒத்துழைப்பு ஒப்பந்தமொன்றைச் செய்துள்ளன.
- 300 சூடானியப் படையினரைத் தாம் கொன்றுள்ளதாக சூடானியத் தீவிரவாதிகள் தெரிவித்துள்ளனர்.
- ஆப்கானிஸ்தான் தலை நகர் காபூல், தலிபன் கெரில்லாக்களால் கைப்பற்றப்பட்டுள்ளது.
- ஜேர்மன் இறைச்சிச் சந்தையில் மாட்டுப் பைத்திய நோய் உள்ள இறைச்சி காணப்பட்டுள்ளது.

**22.01.97 புதன்கிழமை**

- இத்தாலியில் அரசியலமைப்பு மாற்றம் செய்யும் நோக்குடன் விதந்துரைகளை வழங்கும் ஆணைக்குழு நியமனத்துக்கு பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.
- அமெரிக்க இராஜாங்கச் செயலாளராக திருமதி மடலின் அல்பிறைற் நியமனத்துக்கு செனட் சபை அங்கீகாரம். இராஜாங்கச் செயலாளராக பதவி வகிக்கும் முதல் பெண் இவராவார்.
- கென்யாவில் உணவுப் பஞ்சம் ஏற்படலாம் என்ற அச்சத்தால் அரசு உணவு இறக்குமதி பற்றி ஆராய ஆரம்பித்துள்ளது.
- எட்டு வட கொரியர்கள் தென் கொரியாவில் அடைக்கலம் கோரியுள்ளனர்.
- பிரான்சுக்கான ஜெயிர் தூதுவர் தனது பதவியை இராஜினாமச் செய்துள்ளார். மது போதையில் இவர் செலுத்திய வாகனம் மோதியதில் இரு பள்ளிச் சிறுமிகள் பலியாகினர்.

**23.01.97 வியாழக்கிழமை**

- நாஜிப் படைகள் யூதர்களிடம் திருடிய தங்கத்தை வைப்பிலிட்ட குற்றத்திற்காக நஷ்ட ஈடு செலுத்த சுவிஸ் நிர்வாகம் உடன் பட்டுள்ளதோடு அதற்காக ஒரு நிதியத்தையும் உருவாக்க உடன்பட்டுள்ளது.
- கியூபா மீதான அமெரிக்காவின் பொருளாதாரத் தடையை மீறும் வகையில் கனடாவும் கியூபாவும் பொருளாதார உடன்பாடு ஒன்றைச் செய்துள்ளன.
- அமெரிக்க PEPSI COLA கம்பனியால் நடாத்தப்படும் KFC, PIZZA HUT, போன்ற உணவகங்கள் தனித்தனி நிர்வாகங்களாக பிரிக்கப்படவுள்ளன.
- ஜேர்மனியில் வருமான வரிக்குறைப்புக்கு வழி செய்யும் புதிய பொருளாதாரக் கொள்கை ஒன்று பிரதமர் ஹேலினால் முன் மொழியப்பட்டுள்ளது.

**24.01.97 வெள்ளிக்கிழமை**

- டென்னிஸ் வீராங்கனை ஸ்டெபி கிராபின் தந்தை பீட்டர் கிராபுக்கு ஜேர்மன் நீதி மன்றம் மூன்று வருடம் 9 மாதச் சிறைத் தண்டனை விதித்துள்ளது. வரி ஏய்ப்புக் குற்றத்திற்காகவே இத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
- ரஷ்ய ஜனாதிபதியின் உடல் நலக் குறைபாடு காரணமாக காமன் வெல்த் சுதந்திர நாடுகளின் மாநாடு தள்ளி வைக்கப்பட்டுள்ளது.
- சதாம் ஹுசைனின் மகன் மீதான தாக்குதல் தொடர்பாக இது வரை 600 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
- ஆசியான் அமைப்பில் பர்மா இணைவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன. பர்மாவில் மனித உரிமைகள் மதிக்கப்படவில்லை என அமெரிக்காவும், ஐநா சபையும் கண்டித்துள்ளன.

**25.01.97 சனிக்கிழமை**

- அல்பேனிய ஜனாதிபதிக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் சட்டத் திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- லீல் பணயக் கைதிகளை வைத்திருக்கும் துப்பாக் போராளிகளுக்கும் பெரு அரசுக்கும் இடையே முரண்பாடு வலுவடைகின்றது.
- இஸ்ரேலியப் பிரதமர் நெட்டன்யாகு மீதான ஊழல் குற்றச்சாட்டு வலுவடைந்து வருகின்றது.
- மடகஸ்காரில் வீசிய கடும் புயலால் 100-க்கும் அதிகமானோர் காணாமல் போயுள்ளனர்.
- காபூலை கைப்பற்றிய தலிபன் கெரில்லாக்கள் மக்களை அங்கிருந்து வெளியேற்றி வருகின்றனர்.

# திரைகடலோடியும்.... திரவியம் தேடலாம் போடர் தாண்டியும்.... பேத்டே கொண்டாடலாம்

நீங்கள் என்னதான் சொன்னாலும்.. இஞ்சையிருக்கிற எங்கடை சனத்துக்கு பெரிய.. பெரிய ஆசையள் எல்லாம் மனசுக்குள்ளை புதைஞ்சிருக்குக் கண்டியளோ! ஆனா ஒப்புக்கு மட்டும் சும்மா அடிக்கடி வெறுவாய் சப்புற கதையளைக் கதைக்கிறது.

இந்தக் குளிர் பிடிச்ச நாடுகளிலையும் மனிசர் சீவிக்கலாமோ.. சோறு.. தண்ணி இல்லாட்டிலும் சும்மா கிணத்துத் தண்ணியை அள்ளிக் குடிச்சுட்டு ஊரிலை கிடந்து உசிரை விட்டிருக்கலாம் எண்டு தேசபக்தியை அள்ளிக்கொட்டுறவையள் எல்லாம் பிறகென்னத்துக்கு இஞ்சை சொத்துச் சுகங்கள் தேடுறத்துக்கு ஆலாப்பறக்கினம் எண்டுறன். என்னடா.. எடுத்த எடுப்பிலேயே இந்தாள் கிரந்தக் கதையிலை துடங்குது எண்டு யோசிக்கிறியள் போலை. யோசியுங்கோ.. யோசியுங்கோ.. நான் அங்காலை போறன்.

உப்பிடித்தான், இந்தக் குளிராலை கை, காலெல்லாம் சரியா விறைக்குது. ஒரு வேலைவெட்டியும் செய்யேலாமல் கிடக்கெண்டு அடிக்கடி மூக்காலை அழுகிற ஆக்கள், இந்த மாசம் இங்கினை ஓடின சினிமாப்படமொண்டின்ரை ராவுக் காட்சிக்குப் போயிட்டு வீட்டை... பொடி நடேலை குளிருக்குள்ளாலை போன காட்சியைக் காண ஆயிரம் கண் வேணுமுங்கோ! சாமம் தாண்டியும் இவையின்ரை படம் முடியுமட்டும் ரெயின் ஓடுறவங்கள் முழிச்சிருக்க ஏலுமோ! அவங்கள் அடிச்சுப்பூட்டிப் போட்டு வீட்டை போயிட்டாங்கள். படம் முடிஞ்சு வெளியாலை வந்த ஆக்களிலை, வாகன வசதியுள்ளவை தாங்களுண்டு... தங்கடை வேலையுண்டு எண்டு சொய்..ங் எண்டு பறந்திட்டினம்.

ரெயினை நம்பி வந்தவை எல்லாம் நட.... ராசாவிலை தான் போக வேண்டியதாப்போச்சு. சும்மா சொல்லப்பிடாது. தலையிலை முண்டாசு கட்டிக்கொண்டு குளிருக்கை நடுங்கிக் கொண்டு இவை தெருவாலை போன காட்சி இருக்கெல்லோ.. மதுரை வீரன்சாமி ஊர்கோலம் போனது மாதிரி கிடந்திச்சு எண்டு கார்க்காரர் சிலர் பறைஞ்சிச்சினம்...

அட.. சினிமாப் படம் பாக்கிற ஆசையை அடக்கேலாமக் கிடந்திச்செண்டா அதை வேளை.. காலைக்குப் போய்ப் பாக்கிறது தானே! ஏமம்.சாமம் கடந்து போய் வில்லங்கத்திலை மாட்டுறது. பேந்து, கள்ளர் சங்கிலியை உருவிப் போட்டாங்கள்.. காசைப்பறிச்சுப் போட்டாங்கள் எண்டு உவை புலம்பித் திரியிறதாக்கும். உ.. ம்.. ம்..!

எங்களிலை .. சிலர் இங்கத்தையச் சூழலுகளை ஏதோ சொர்க்கம் எண்டு நம்பி சொத்துச் சுகங்களைச் சேர்க்கிறம். அப்ப.. அதுக்காக செய்ய வேண்டிய நாட்டுக்காரியங்களுக்கே நாலைஞ்சுதரம் அறிவித்தலுகள் குடுத்து கேக்க வேண்டியதாப் போச்சு! சிலர் ஏதோ உணர்ந்து செய்யினம்தான்... இல்லையெண்டேல்லை..!

அண்டைக்கொரு நாள் தெரிஞ்ச பெடியன் ஒருத்தன் வலு சந்தோசத்தோடை

## ஆருக்குச் சொல்லி அழ?

றோட்டுக் கரையிலையோ படுத்தெழும்புறது எண்டு கேட்டு சண்டைக்கு வராதேங்கோ.. சாமி! வரவுக்கு மீறின செலவுகளைத் தாறமாதிரி காரியங்களைச் செய்யிறது அவ்வளவு நல்லதில்லையுங்கோ எண்டதைத் தான் நான் இப்ப சொல்லுறன்.

பெரிய.. பெரிய வீடுகளை

> **இந்தக் குளிர் பிடிச்ச நாடுகளிலையும் மனிசர் சீவிக்கலாமோ... சோறு.... தண்ணி இல்லாட்டிலும் சும்மா கிணத்துத் தண்ணியை அள்ளிக் குடிச்சுட்டு ஊரிலை கிடந்து உசிரை விட்டிருக்கலாம் எண்டு தேசபக்தியை அள்ளிக்கொட்டுறவையள் எல்லாம் பிறகென்னத்துக்கு இஞ்சை சொத்துச் சுகங்கள் தேடுறத்துக்கு ஆலாப்பறக்கினம்**

வாங்கிப்போட்டு கடன் காசு கட்டேலாமலுக்கு கையைச் சுட்டுக்கொள்ளுறதோடை குடும்பத்தின்ரை சந்தோசத்தையும் துலைச்சுப்போட்டு பேய் முழிக்கிற நிலை தேவையே? அடுத்தவன் செய்யிறான் எண்டு அதையே நாங்களும் தூக்கி ஆடப்பிடாது, கண்டியளோ!

எங்கடை நாட்டுக்கு முதலிடுங்கோ... சேமியுங்கோ அது மிச்சம் உபகாரமான காரியம். நாளைக்கு உங்கடை குழந்தை குட்டியள் நெஞ்சை நிமித்திக் கொண்டு அங்கை போய் சந்தோசமாக வாழும். அதை விட்டுட்டு இதுகள்தான் மிச்சம் பவிசான நாடுகள்; இஞ்சை தான் செய்வம் எண்டு அடம் பிடிச்சா.. சில சித்துவக் கேடுகளை அனுபவிக்க வேண்டித் தானே வரும்.

செய்ய வேண்டியதுகள் எவ்வளவோ கிடக்க.. தேவையில்லாத சோலியளைத் தலையிலை எடுத்து செய்யிறதே எங்கடை சோலியளாப் போச்சு! நாங்கள், நாங்களாகச் சேர்க்க

இயக்கப்பாட்டொண்டை முணுமுணுத்தபடி வந்தான். என்னடா.. பொடியா வலு குசியாய் இருக்கிறாய் எண்டு கேட்டு வச்சன். அவன் சொன்ன விசயம் உண்ணாணை எனக்கும் ஒரு கொஞ்ச நேரம் சந்தோசத்தைக் குடுத்ததுதான் எண்டுறன்.

நாட்டுக்காகக் காசு சேர்க்க பெடியன் வலு மும்மரமாக திரிஞ்ச வேளையில.. ஒருக்காலும் போகாத ஒரு வீட்டு விலாசத்தை தேடிப் போயிருக்கிறான். அந்த வீட்டுக்காரரும் வலு ஆவலோடை கதைச்சுப்போட்டு என்வலப்பு ஒண்டைத் தூக்கி குடுத்திட்டு தம்பியவை.. நீங்கள் எப்பிடியும் வருவீங்கள் எண்டு தெரியும். அப்பிடி வராட்டியும் உங்களைத் தேடி வந்திருப்பம் எண்டு சொல்லிப்போட்டு கடைசியிலை அவை சொன்ன வசனம் பொடியைக் கொஞ்சம் பெரிசாயே.. நெகிழவைச்சிட்டுதாம். அந்தக் குடும்பத்தின்ரை பிறப்பு; வளப்பு எல்லாம் மலையகமாய் இருந்தாலும்; அங்கை இருக்கேக்க.. தமிழீழத்துக்குப் போக வேண்டிய சந்தர்ப்பம் ஒருக்காலும் கிடைக்கேல்லை எண்டும், ஆனாலும்.. அது எங்கடை நாடு எண்டதை மறக்கமாட்டம் எண்டும் அவை அவரிட்டைச் சொல்லியிருக்கினம்.

சொந்த நாட்டுக்குக் குடுக்கிறதுக்கே சிலர் கிளித்தட்டு மறிச்சு விளையாடிக் கொண்டிருக்கேக்கை.. இப்பிடிப்பட்டதுகளின்ரை நாட்டுப் பற்றுக்கு எல்லாரும் நன்றி சொல்லத்தானே வேணும். ம்.. ம்..! இது இப்படியிருக்க..

மற்றப் பக்கத்திலை எங்கடை ஒருத்தர் எல்லை தாண்டிவந்து பிள்ளையின்ரை பிறந்தநாளைக்கொண்டாடி தான் குடுத்த காசை வசூலாக்கிக்கொண்டு போயிருக்கிறார்.

அவரும் கனகாலமாய் இஞ்சை இருந்தவர். பிள்ளையளின்ரை எதிர்காலத்தை(?) முன்னிட்டு லண்டனுக்கு குடிபோறதாச் சொல்லிப்போட்டு குடும்பத்தோட போனவர் திடீரெண்டு மீண்டும்.. குதிச்சார். என்னடாவெண்டு விசாரிச்சா, அங்கை புதிசாப் போனதாலை சனங்கள் இன்னும் சரியாக முகப் பழக்கத்துக்கு வராததாலை கடைசிப் பிள்ளையின்ரை பிறந்த நாளை அறிஞ்ச, தெரிஞ்ச முகங்களோடைக் கொண்டாடப் பிரியப்பட்டு (?) வந்தவரெண்டு ஒரு கதையை அவிட்டுவிட்டிருக்கிறார்.

உண்மையிலை, சூச்சமம் அதில்லைக் கண்டியளோ! இஞ்சை கனவரியம் இருந்தவர்தானே..! கலியாண வீடு, பிறந்தநாள், சாமத்தியச் சடங்குக்கெண்டு குடுத்தவரெல்லே; இனி லண்டனோடை போயிட்டம் இந்தக் காசெல்லாத்தையும் இப்ப வேண்டாட்டி இனி எப்ப வேண்டுறது.. பிறகு 'ஆறின கஞ்சி பழங்கஞ்சியான' கதையாய்ப் போகுமெண்டு பயந்தடிச்சு அவசர அவசரமா இந்தப் பிறந்தநாள் நாடக விழாவை ச்சீ.. நாக்குப் பிரண்டு போச்சு மன்னிச்சுக்கொள்ளுங்கோ! பிறந்தநாள் விழாவை மண்டபம் ஒண்டை எடுத்து வலுவிமரிசையாகக் கொண்டாடினதோடை 'தண்ணி'யைப் பாய்ச்சி காசையும் அறுவடையாக்கி கொண்டு போட்டார், சுவாமி.. மலையேற..!

உப்பிடி எங்கட வெளிநாட்டுத் தமிழ் அகதியளின்ரை அருமை.. பெருமை எல்லாம் இப்பிடியான வீண் தம்பட்டமான பிரயோசனமில்லாத காரியங்களுக்குள்ளையே சுத்திச்சுத்தி சுத்திமாத்தி.. வாற நிலைமையாப் போச்சுதே.. என்ர கடவுளே! தந்தைக்கு உபதேசம் செய்த கந்தா.. கடம்பா... காத்திகேயா... எந்தையர் பேத்டே மோகம் தீர ஒரு உபதேசம் அருள்வாயோ அப்பனே?

என்ன ஒரு மாதிரிப் பாக்கிறியள்? என்ரை மனக் குறையை அவன் காலடியிலை வைக்கிறன் அவ்வளவுதானுங்கோ!

**அருமைத்தம்பி**

மேற்கு இலண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
Nº: 199, The BROADWAY, Southall, Middx.
T.P: 0181 / 813 9126
(ADV)

லண்டன் மாநகரில்
ஸ்ரீ லட்சுமி என்ரபிறைசஸ்
கன்னியர் முதல் சிறுவர் வரை முதல் தர புடவை மாளிகை
SREE LAKSHMI ENTERPRISES
IMPORTER & EXPORTER, WHOLESALER & RETAILER
Large Collection of Wedding Sarees, Silk Sarees & Barathanatya Costumes
50 THE BROADWAY, SOUTHALL, MIDDLESEX, UB1 1QB
TEL: 0181-843 9495 / 01831-662 824 · FAX: 0181-606 9709
(ADV)

இலண்டனில் நகைத் தெரிவுகளுக்கு...
ராஜு பட்னி அன் சன்
PATTNI HOUSE
58-60 EALING ROAD WEMBLEY, MIDDX HAO 4TQ
TEL: 0181-903 6677 / 2859, 0181-902 0577
FAX: 0181- 903 4887
(ADV)




# மாதவிலக்கு வலியினை மனப் பயமும் அதீதமாக்கும்

சாதாரணமாக பெண்களில் பெரும்பாலானவர்களுக்கு மாதவிலக்கு ஏற்படும் நேரங்களில் ஓரிரு நாட்களுக்கு வயிற்றுவலி, மார்பு கனத்தல், தலைவலி, போன்ற உடற் கோளாறுகள் தலைகாட்டுவது வழமை.

ஆனாலும் சில சகோதரிகளுக்கு தங்களது அன்றாட கடமைகளைக்கூட செய்யமுடியாத நிலையில் இவ் வலியின் தாக்கங்கள் அமைந்து விடுகின்றன. குறிப்பாக அடி வயிற்றில் ஒருவித முறுக்கல்,திருகல் நிலை போன்ற வலி மிகுந்த வேதனையை தரும். இதனை சூதக வலி என்றும் அழைப்பர்.

குறிப்பாக அலர் அகவைப் பெண்கள் (டீன்ஏஜ்) இந்த வலிக்கு அதிகமாக இலக்காகின்றார்கள். -இவர்களுக்கு உளவியல் ரீதியில் மாதவிலக்குப் பற்றிய பய உணர்ச்சி அதிகமாக இருப்பதால்தான் இவ் வகையான வலியின் தாக்கங்களுக்கு உள்ளாவதாக மருத்துவத் தரவுகள் கூறுகின்றன.

மாதவிலக்கு என்பது ஒரு இயல்பான உடலியக்க நிகழ்வே என்ற மனோபாவத்தை வளர்த்துக் கொண்டால் இந்த வலியின் தாக்கம் அதிகமாகத் தெரியாது. மாதவிலக்குப் பற்றி பயம், வெறுப்பு, சங்கடம் ஆகிய மனோபாவம் இருந்தால், தோன்றும் சாதாரண வலி கூட அதிகமாக இருப்பதாக தோன்றும்.

மனதுக்கு ஒவ்வாத சூழல், தொழில் புரியும் இடங்களில் ஏற்படும் மன அழுத்தம், பாதுகாப்பற்ற உணர்வு ஆகியன கூட சூதகவலியினை அதிகமாக்கும்.

உடலியக்க ரீதியில் வளர்ச்சி குன்றிய கருப்பை, கருப்பைத் தசையின் இணக்கமற்ற செயற்பாடு, நாளமில்லாச் சுரப்பிகளின் மாறுபாடற்ற செயற்பாடுகள் ஆகியவற்றாலும் சூதகவலி ஏற்படலாம்.

புதிதாகத் திருமணமானவர்கள் குழந்தைப்பாக்கியத்தை எதிர்பார்த்திருக்கும்போது அச்சந்தர்ப்பத்தை தர முடியாத வகையில் மாதவிலக்கு ஏற்படும் போது மன உளைச்சலும் வலியின் தாக்கமும் அதிகமாகும். அந்தவேளையில் ஏற்படும் உணர்ச்சிக் கொந்தளிப்பால் கணவன்_மனைவியிடையே சச்சரவுகள் கூடத் தோன்றலாம்.

எனவே உணர்ச்சிக் கொந்தளிப்புகளுக்கு இடம் கொடுக்காமல் இருப்பது சிறந்தது. சூதக வலியை குறைப்பதற்கு சில செயற்பாடுகள் செய்ய முடியும்.

விரும்பத்தகாத சூழ்நிலைகள், ஊட்டச் சத்துக்குறைவு, உடல் நலக்குறைவு ஆகியன இருப்பின் அவற்றினை நிவர்த்தி செய்ய வேண்டும். முறையான உடற்பயிற்சி செய்து ஆரோக்கியத்தை வளர்ப்பது கூட இவ்வாறான வலியினை தவிர்க்கும் ஒரு செயற்பாடுதான்.

வலி அதிகமாக இருந்தால் சிறிதளவு வெந்நீர் ஒத்தடம் தருவது பயன் தரும். தேவையேற்பட்டால் வலி நிவாரணி மாத்திரைகளைப் பயன்படுத்தலாம். ஆனால் ஒரு போதும் தூக்க மாத்திரைகளை பயன்படுத்தக்கூடாது.

மருத்துவ ஆலோசனையின் பேரில் கருப்பை வளர்ச்சி அறியும் சோதனைகள், இயக்குநீர் சோதனைகள் ஆகியவற்றை மேற்கொள்ளுதல் நல்லது. கடுமையான சூதகவலி சிறிதுகாலமே இருக்கும். மகிழ்வான மணவாழ்வை ஏற்று ஒரு குழந்தை பிறந்த பின்னர் இந்த வலியின் தொந்தரவு ஏற்படாது என்பது மருத்துவ தரவுகள் தரும் ஆறுதலான விடயமாகும்.

**தொகுப்பு:**
**வர்ஷிகா-வைஷ்ணவி**

# பெண்களும் தமிழீழச் சட்டங்களும்

இந்த சம்மந்தம் ஒப்பேறியதில் எல்லோருக்கும் மகிழ்ச்சிதான். கமலாவுக்கு சென்ற பதினைந்து வருடங்களாக மேற்கொண்டிருந்த கலியாண முயற்சி இப்போது சரிவந்துள்ளது.

இளமையும், அழகும், கனவும், கற்பனையும் கலைந்து போன பிறகு, கலியாணம் தேவையா? என்பது கேள்விதான். முப்பத்தெட்டு ஆண்டுகளை கடந்து விட்டாள். மனித வாழ்க்கையின் சராசரி வயதில் பாதிக்கு மேல் இனி என்ன? என்றாலும் எமது சமுதாய மரபு ஒன்று இருக்கிறதல்லவா? கன்னி கழியாதவளுக்கு மோட்சமில்லை. சந்ததியில்லாத மலடி என்று ஊர் பேசுமே, தான் மலடி அல்ல என்பதை நிரூபிக்க யாரோ ஒருவனுடைய வம்ச விருத்திக்கு, அவனுடைய பெயர் சொல்லப்போகும் குழந்தையைக் கருவில் தாங்கி சுமந்து, நொந்து பெற்று தன் பெண்மையை நிலைநாட்டும் களமாக அந்த இல்லாள் எனும் பதவியை பெறதே ஆகவேண்டும். அதற்காக என்ன விலை வேண்டுமானாலும் கொடுக்கலாம்.

ஆம்; கமலாவுக்கு முப்பத்தெட்டு வயதுக்குப் பின் அந்த பெறுமதியைத் தரப்போகும் அவனுக்கு இரண்டு லட்சம் ரூபா விலை. நகைகள் தனி. அதை அவள்தானே அணியப் போகிறாள். இதை ஒப்பேற்றிவிட அருணாசலத்தார் அலையோ அலையென்று அலைந்ததில் நான்கு செருப்புக்கள் தேய்ந்தது டன் நாலாயிரம் வரையில் பேருந்து வாடகை, தேநீர் செலவுகள் இத்தியாதி, ஏனைய செலவுகளும், இப்புறமும் அப்புறமும் திரும்பித் திரும்பி, திருப்பித் திருப்பி, திருத்தித் திருத்திப் பேசியதில் கழுத்தில் திருகுவலி வந்ததாயும் கேள்வி, சும்மா! நட்பு ரீதியாக அவர் மேற்கொண்ட இந்த முயற்சிக்கு தரகு என்ற பெயர் பொருத்தமல்ல. வியாபாரம் என்றே கூறலாம்.

மாப்பிள்ளை பார்க்க சர்வலட்சண முகம் பொருந்தியவராகக் காணப்பட்டார். வயதும் 'பொம்பிளைய விட', ஒரு 'ரெண்டு மூன்று வரிசம் குறைவுதான்', என்று அருணாசலம் கூறியது சரி. கமலா காத்திருந்து கட்டினாலும் அதிர்ஷ்டக் காரிதான். மாப்பிள்ளையின் அழகும் அடக்கமும் கமலாவை மட்டுமல்ல அவள் பெற்றோரையும், உற்றாரையும் வியக்க வைத்தது.

இப்ப 'மாப்பிள்ளை பொம்பிளை' இருவரும் சம்மதம். ஆனால் மாப்பிள்ளையின் தங்கைக்கும் ஒரு 'பேசகக்கால்' வந்திருந்தபடியால் முதலில் அதை செய்த பிறகுதான் அண்ணன் கலியாணம் செய்யலாம். அதுதான் முறை. 'வீட்டில் குமரிருக்க பெடியள் முதல் செய்தா... பிள்ளையில குத்தை சொல்லுவாங்கள்' என்றார் மாப்பிள்ளையின் தந்தை. ஆனால் அந்தப் பிள்ளையை கரைசேர்க்க இந்தப்பிள்ளை (கமலாவின்ர சீதனக்காசு வேணும். என்ன செய்யலாம்)

அருணாசலத்தாருக்கு இப்படியான இக்கட்டுக்கள் எல்லாம் அத்துப்படி. 'இதென்ன பெரிய யோசினை... அம் கமலாவுக்கும் பெடியனுக்கும் எழுத்தை எழுதிப்போட்டு சீதனத்தை வாங்கினா லீலாவின்ர கல்யாணத்தை செய்யலாம்... அடுத்த முகூர்த்தத்தில இதை செய்வம்'.

என்று பிரச்சினைக்கு முடிவு சொன்னார். அந்த யோசனை எல்லோருக்கும் சரி என்றுபடவே... கலியாண எழுத்துக்கு நாள் குறிக்கப்பட்டது. மாப்பிள்ளையின் வீடு பொம்பிள்ளையின் வீட்டிலிருந்து சுமார் இருபது மைல்களுக்கு அப்பால் இருந்தது. முறைப்படி பெண் வீட்டில்தான் எழுத்து, மிக நெருங்கிய உறவினர்களுக்கும் சொல்லி சின்னதாய் 'ஒரு விருந்துடன்' எழுத்து நடந்தது.

விவாகப் பதிவாளர் முன்னிலையில் நிரம்பிய உறவினர் மத்தியில் வெகு காலமாக எதிர்பார்த்திருந்த மணக்கோலத்தில் கமலா மிக அழகாக அலங்கரிக்கப்பட்டு கொண்டு வந்து அமர்த்தப்பட்டாள். முப்பத்தெட்டு வயதானாலும் பெண் தானே. தலைநிறைய சூடிய மலர்களின் சுமையும்தான். அவள் தலை நிமிரவில்லை. (பெண்கள் கவனிக்க; குனிந்திருந்தால் தான் குட்டவளம்) முறைப்படி பிரமாணம் வாசிக்கப்பட்டு கையொப்பம் இட்ட பின், கமலாவை உள்ளே கொண்டு சென்றனர்.

தவறணை பனம்பால் விருந்துக்கு மெருகேற்றியது. உணவு, தாம்பூலம், ஆகியவை பரிமாறப் பட்டன. விழா இனிதே நிறைவுற்றது.

கமலாவின் நெருங்கிய தோழி அவளை கேலி செய்தாள். "எடி அவரைப் பார்க்க ஒரு 'பெக்கோ' மாதிரி இருக்கடி. இலையில இருந்து சாப்பிட தெரியேல்ல, அந்தாளுக்கு செருப்பு போட தெரியாது. வலக்கால் செருப்பை இடக்காலுக்கு போட்டு நடக்குது. கதைக்கிறதும் பார்த்தா ஆள் மூளை சரியில்லப் போல" எழுத்து முடிந்த மறுநாளே இதைக் கேட்ட கமலாவுக்கு ஒரு புறம் இவள் வழக்கமான பகிடிதான் விடுறாள் என்றிருந்தது. ஆனால் அவள் இதுவரை மாப்பிள்ளையுடன் பேசியதில்லை; ஒருக்கா கதைச்சுப் பாத்தா என்ன? என்று சிந்தித்தாள்."

பேருந்து நிலையத்திலிருந்து மிக அண்மையில் இருந்த அந்த வீட்டை அடைந்தாள். மாப்பிள்ளை முற்றத்தில் அழுக்கு சாரத்துடன் இருந்தார்.

"இஞ்சே.. அவா வாறா.." என்றபடி மரத்தின் பின் போய் நின்றான் அவன். அவளுக்கு புரிந்தது.. "நான் உங்களோடை கதைக்கத்தான் வந்தனான்" என்றாள்.

மாப்பிள்ளை விரலை வாயில் வைத்தான். பச்சைக் குழந்தை போல அவளைப் பார்த்தான். இரண்டு நிமிடம் நின்றதில் தான் ஏமாற்றப்பட்டது கமலாவுக்கு தெள்ளெனப்புரிந்தது. உள்ளக் குமுறலுடன் வீடு வந்தாள். குமுறிக் குமுறி அழுதாள் 'எனக்கு கலியாணம் வேண்டாம். என்ர காசை மீண்டும் தாங்கோ. எழுத்தை வெட்டி விடுங்கோ' என்றாள். தமிழீழப் பெண்களுக்கு தமிழீழ சட்டம் உதவுகிறது. பெண்ணுக்கு, பெண்கள் ஆய்வுநிறுவன சட்ட ஆலோசனை நிலையத்தின் அனுசரணையின் பேரில் பணம் மீளளிக்கப்பட்டது. ஏமாற்றிய தரகர் அருணாசலமும், மாப்பிள்ளையின் தந்தையும் தண்டனைக்குரியவர்கள். மாப்பிள்ளையைப் பொறுத்தவரை எதுவுமே நடவாததுபோல் மணல் வீடு கட்டி விளையாடுகிறது அந்த முப்பத்தைந்து வயதுக் குழந்தை. மோதிரத்தை கழற்றும்படி கேட்க...

"இது என்ர மாத்து மோதிர மெல்லே" என்று சிணுங்கினான். மாப்பிள்ளை என்பதும் மண வாழ்வு என்பதும் பெண்களுக்கு ஒரு கண்மூடித்தனமான தேர்வா? சிந்தியுங்கள் சகோதரிகளே.

(உண்மைச் சம்பவம்) நன்றி: நாற்று

# டென்னிஸ் உலகிலிருந்து ஆஜன்ரீனா வீராங்கனை ஓய்வு

ஆஜன்ரீனா டெனிஸ் வீராங்கனை கபிரியேல் சபாத்தினி மைதானத்தில் ஆடும் விதமே அழகானது. இவர் தற்போது டென்னிஸ் உலகிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். சபாத்தினியின் ஓய்வு அவரது ரசிகர்களுக்கு ஆச்சரியத்தையும் வேதனையையும் அளித்தாலும் அவரது ஓய்வு முடிவு மாற்றப்படவில்லை.



அமெரிக்க திறந்த டென்னிஸ் போட்டியில் வீராங்கனையாக இவர், மேலும் பல போட்டிகளில் வெற்றிகள் பெற்றவர். ஒரு முறை தனது எதிர்ப் போட்டியாளரான மாட்டினா நவரட்டிலோவாவை வெற்றி கொண்டதுடன் அவரை ஓய்வும் பெறச் செய்தவர்.

அண்மையில் சபாத்தினிக்கு ஏனைய டென்னிஸ் வீராங்கனைகள் எல்லாம் சேர்ந்து ஒரு பிரியாவிடை வைபவத்தினை நடாத்தினர். உலகின் முதற்தர டென்னிஸ் வீராங்கனையான ஸ்டெபி கிராப் பூச்செண்டு கொடுத்து வாழ்த்தினார். சபாத்தினியின் இன்னொரு டென்னிஸ் தோழியான மொனிக்கா செலசும் இந்த விழாவில் பங்கு கொண்டு ஓய்விற்குப் பின்னர் நல்லதொரு வாழ்வு சபாத்தினிக்கு அமைய வேண்டுமென்று வாழ்த்தினார்.

## சாளரம்

ஒரு அருமையான சமாச்சாரம், அதுவும் தமிழ் இலக்கிய உலகம் சம்பந்தப்பட்ட சமாச்சாரம்; நூல் வெளியீட்டு விழாவிற்கு வருகை தந்த சபையே அதிர்ந்துபோன சமாச்சாரம்.

உங்களுக்கு கம்பவாரிதி ஜெயராஜைத் தெரியும் தானே. இலக்கியங்களில் நல்ல பரிச்சயமுள்ள சிறந்த புலமையாளர். கருத்து முரண்பாடுகளுக்கு அப்பால் எல்லா எழுத்தாளர்களையும் மிகவும் நேசிப்பவர். நீதிக்காகவும், நியாயத்திற்காகவும் தனக்குச் சரியெனப்பட்ட கருத்தினை எந்தவிடத்திலும், எந்த சந்தர்ப்பத்திலும் சொல்லும் துணிச்சல் மிக்கவர்.

இப்படித்தான் ஒருநாள், அவர் பெருமதிப்பு வைத்திருக்கிற முதிய எழுத்தாளர் ஒருவரின் நூல் வெளியீட்டு விழா அண்மையில் கொழும்பில் நடைபெற்றதாம். அவ்விழாவில் அந்த எழுத்தாளர், இலக்கியவுலகில் தான் எதிர் நோக்கிய இன்னல்களையும் இடையூறுகளையும் எடுத்துக்கூறி தன்னைப்பற்றி அடுத்த நூற்றாண்டில் கூடப் பேசப்படுமென ஆவேசமாகச் சொன்னாராம்.

# கம்பவாரிதி தந்த தொப்பியும் கலை, இலக்கியவுலகக் கடமைகளும்

அவ்விழாவில் தொடர்ந்து பேசிய ஜெயராஜ் அந்த எழுத்தாளரைப் பார்த்து நட்புடனும், உரிமையுடனும் கேட்டாராம்.

"நீங்கள் இத்தனை வருஷங்களாக எழுதியும், பேசியும் வருகிறீர்களே. உங்கள் சாதனைகளை நீங்கள் இன்னும் திரும்பத்திரும்பச் சொல்லி இலக்கிய நேயர்களுக்கு நினைவூட்ட வேண்டுமோ? 21 ஆம் நூற்றாண்டில் உங்கள் பெயர் பேசப்பட வேண்டும் என்பதற்காகத்தான் எழுதுகிறீர்களா? உங்கள் இலக்கியத்திற்கு வேறு இலட்சியமில்லையா?"

இப்படி ஜெயராஜ் கேட்டபோது விழாவிற்கு வருகை தந்திருந்த சபையே அதிர்ந்து விட்டதாம். இத்துடன் நிறுத்தவில்லை அவர். தொடர்ந்து எழுத்தாளர்கள் மத்தியில் உண்மையான அன்பும், புரிந்துகொள்ளலும் இல்லையென்றும், சக எழுத்தாளனை நேசிக்கத்தெரியாத, அவன வளர்ச்சியை உள்ளன்புடன் ஏற்றுக்கொள்ள முடியாதவர்களால் சமுதாய நேயம், மனிதநேயம் கொண்டவர்களாக எப்படி விளங்கமுடியும் எனவும் வினாவினாராம். நியாயமான கேள்வி! தொப்பி அளவுள்ளவர்கள் அணிந்து கொள்ளவேண்டியதுதான்.

இங்கே நான் பேச நினைப்பது இலக்கியம் தொடர்பானது. இலக்கியம் என்றால் என்ன? மனிதர்களின் உள்ளத்துணர்வுகளையும், அவர்களது வாழ்க்கை நிலைமைகளையும் பேசுகின்ற எழுத்துதான் இலக்கியம்.

சரி, இலக்கியம் மனித வாழ்வுக்காகவென்றால் மனிதனின் வாழ்வு எதற்காக? குந்தியிருந்து சோறு சாப்பிடவா? இல்லை.. இல்லவேயில்லை. தன்னைத் தானே ஆளுகின்ற உரிமை, எவருக்கும் அச்சமே இல்லாத நிலை, நெறிதவறாது வாழ்கின்றோம் என்ற திருப்தி, குழந்தையை அணைத்தபடி கவலையற்று கால்நீட்டி உறங்கும் மகிழ்ச்சி, இன்னும் எங்கள் கலைகளையும், பண்பாடுகளையும் பேணிக்காத்து காலத்திற்கேற்றபடி அதற்கு உயிர் கொடுக்கும் உரிமை... இப்படி, இப்படியாக வாழ்க்கையின் அர்த்தங்கள் நீண்டு செல்லும். இந்த அர்த்தங்கள் நிறைந்த வாழ்வினை நோக்கி மனிதனைப் போராடத்தூண்டுவதே இலக்கியங்களின் முதன்மைப் பணியாக இருக்க முடியும்.

இன்று எங்கள் மக்கள் தங்களின் இறைமைக்காகவும், வாழ்வுக்காகவும் கரங்களை உயர்த்தி போராடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த தேசியப் போராட்டத்தின் தலைமையை தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். பல்லாயிரக்கணக்கான போராளிகளும், மக்களும் எங்கள் தாயகத்தின் விடுதலையை நோக்கி கால் பதித்து நிற்கின்றனர்.

இன்று எதிரி தனது தோல்வியை ஒப்புக்கொள்ளத் தொடங்கிவிட்டான். "சிறு பிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது" என எண்ணி நகையாடியோர் வரலாற்றின் ஓட்டத்தில் தூக்கி வீசப்பட்டார்கள். உலகமே வியக்கும் வண்ணம் அனுபவங்களை படிப்பினை ஆக்கி, படிப்பினையில் கற்றுக்கொண்டு ஒரு புதிய வரலாற்றினை எழுதத் தொடங்கியிருக்கிறார்கள் எங்கள் மக்கள். குஞ்சுகள் கூட செட்டைவிரித்து போர்ப்பரணி பாடுகிறார்கள்.

இந்த வீரம் செறிந்த விடுதலைப் போராட்டத்தினை மேன்மேலும் எழுச்சியுற வைக்கவும், இந்த சத்தியப் [illegible]கிற்கு உணரவைக்கவும் யாரால் முடி[illegible]? யார்மீது அந்த வரலாற்றுக்கடமை சுமத்தப்பட்டிருக்கிறது?

ஆம், காலம் சுமத்திய வரலாற்றுக் கடமைகளை சிலுவைகளாக சுமக்கவேண்டியவர்கள் தான் கலை, இலக்கியவாதிகள். மாற்றுக் கருத்துக்களை மதித்து, சகோதரத்துவத்துடன் ஒரு உன்னத இலட்சியத்திற்காக மூங்கில் மரங்களைப் பறித்து புல்லாங்குழல் செய்து விடியலை நோக்கிய இசையினை இசைக்க சாளரம் அனைத்து கலை, இலக்கியவாதிகளையும் கரம் நீட்டி அழைக்கிறது.

தொகுப்பு - வர்மன்

## கஜனின் கவிதைகள்

### உதிரும் அரும்புகள்..!

நிதம் நிதம்
மனச் சிறையில்
மௌனங்கள் கதவுடைக்க,
இனிமைகள் விழிச் சிறையில்
இடை இடை
ஆவியாகும்...!
ஏக்கங்கள்...
நிராசைகள்...
அவல உருவங்கள்...
ஏனென்று புரியாமல்
மனச் சுவரில்
தினம் மோதும்...!

"சொந்த மண்ணில் அகதி"
என
சோக நாடகங்கள்
அகதிகள் கப்பலிலும்
அடர் காட்டிலும்
ஏரோ விமானங்களிலும்
ஒத்திகை பார்த்து
அகதி முகாம்களில்
தினமும் அரங்கேறும்...

"ஒரு
கன்னத்தில் அறைந்தால்
மறு
கன்னத்தையும் கொடு"
என்ற
தேவனவன் வாக்கை
எண்ணி..!




# றோஸ் ஏஜன்சி

No.1
for Money Super Plus
Fast Bankcredit for
Tamils in Switzerland.



Eco Agency என்ற பெயரில் இயங்கிவந்த எம் நிறுவனம் கடந்த 15.10.1996 முதல் Rose Agency எனப் பெயர் மாற்றம் அடைந்துள்ளது. எம் சேவை முன்பு போல் 100 சதவீதமும் உங்கள் திருப்திக்காகவே தொடர்ந்திருக்கும். எம் நிறுவனம் பல வங்கிகளுடன் கூட்டாக இயங்குவதன் மூலம் இன்றுவரை பல தமிழர்களின் பணத்தேவைகளை நிறைவு செய்துள்ளது.
மேலும் இலகுவான முறையிலும், நியாயமான வட்டிவீதத்திலும், கூடிய விரைவிலும் எவ்வித சேவைக் கட்டணமும் இல்லாமல் உங்கள் பணத்தேவைகளைப் பூர்த்தி செய்யக் காத்திருக்கிறோம். உதாரணமாக இங்குள்ள பட்டியலைக் கவனிக்கவும்.

இங்கு தரப்பட்ட தொகைகளைவிட தேவையான மேலதிக தொகைக்கு விபரம் எம்மிடம் கோரவும். சுவிஸ் விசா B அல்லது C பத்திரமுள்ளவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டால் நாம் மேலதிக விபரங்கள் விரிவாகவும், விளக்கமாகவும் உங்களுக்குத் தருவோம்.

SOMASUNDARAM RAMALINGAM
METTLENSTRASSE 1
4554 ETZIKEN (SO)
SWITZERLAND.
Tel: 032 614 40 51
Natel: 077 46 16 94
Fax: 032 614 40 51

| கடன் தொகை | 12 மாதங்கள் | | 18 மாதங்கள் | | 24 மாதங்கள் | | 36 மாதங்கள் | | 48 மாதங்கள் | | 60 மாதங்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வட்டி மாத்திரம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் | வட்டி மாத்திரம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் | வட்டி மாத்திரம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் | வட்டி மாத்திரம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் | வட்டி மாத்திரம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் | வட்டி மாத்திரம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் |
| 10.000 | 726.80 | 893.90 | 1071.80 | 615.10 | 1422.80 | 475.90 | 2148.20 | 337.45 | 2902.40 | 268.80 | 3683.00 | 228.05 |
| 15.000 | 1090.20 | 1340.85 | 1607.70 | 922.65 | 2134.80 | 713.95 | 3223.20 | 506.20 | 4353.60 | 403.20 | 5523.00 | 342.05 |
| 20.000 | 1453.60 | 1787.80 | 2143.60 | 1230.20 | 2846.80 | 951.95 | 4298.20 | 674.95 | 5804.80 | 537.60 | 7366.00 | 456.10 |
| 25.000 | 1817.00 | 2234.75 | 2679.50 | 1537.75 | 3558.80 | 1189.95 | 5371.40 | 843.65 | 7256.00 | 672.00 | 9206.00 | 570.10 |
| 30.000 | 2180.40 | 2681.70 | 3215.40 | 1845.30 | 4270.80 | 1427.95 | 6446.40 | 1012.40 | 8707.20 | 806.40 | 11049.00 | 684.15 |
| 35.000 | 2543.80 | 3128.65 | 3751.30 | 2152.85 | 4982.80 | 1665.95 | 7521.40 | 1181.15 | 10158.40 | 940.80 | 12889.00 | 798.15 |
| 40.000 | 2907.20 | 3575.60 | 4287.20 | 2460.40 | 5694.80 | 1903.95 | 8596.40 | 1349.90 | 11609.60 | 1075.20 | 14732.00 | 912.20 |

# உங்கள் கை வண்ணம்

## இவ்வாரக் கைவண்ணங்கள்



செல்வன்
பாக்கியநாதன்
ரிஷான்கன்
வயது: 9
இடம்: 8200 Shaffhausen, Swiss.



மனிதன்

1. மனிதனில் ஆண் பெண் என இரு வகை உண்டு.
2. மனிதனில் கூடுதலாக இரண்டு உறுப்புகள் உண்டு ஆனால் மூக்கும் வாயும் ஒன்று
3. மனிதனில் கூடுதலாக எலும்புகளும் சதைகளும் உண்டு.
4. மனிதனில் கெட்டவர்களும் உண்டு நல்லவர்களும் உண்டு.
5. மனிதன் பிறந்த மாதிரியே இருக்கமாட்டான் போகப் போக வளர்ந்து கொண்டே போவான்.
6. அறிவு படைத்தவர்கள் மனிதர்கள்.



செல்வி
சிந்துயா கிருஷ்ணகுமார்
வயது: 9
தமிழ்ப் பாடசாலை
இடம்: 8200 Shaffhausen, Swiss.

எனது செல்லப்பிராணி நாய்

1. நாய் ஒரு செல்லப் பிராணி.
2. நாய் ஒரு நல்ல மிருகம்.
3. நாயை வீட்டில் வளர்ப்பார்கள்.
4. நாய் வீட்டுக் காரரைக் கண்டால் வாலை வாலை ஆட்டும்
5. நாயில் பல இனங்கள் உண்டு.
6. நாயில் பல நிறங்கள் உண்டு.
7. நாய் ஓட்டி போகும்.
8. நாய் வள் வள் என்று குரைக்கும்.
9. நாய் ஒரு நன்றி உள்ள மிருகம்.



செல்வி
அனோயா
கிருஷ்ணகுமார்
வயது: 8
தமிழ்ப் பாடசாலை
இடம்: 8200 Shaffhausen, Swiss.

பசு

பசுவை வீட்டில் வளர்ப்பார்கள்.
பசு புல் மேயும்
பசு பால் தரும்.
பசு கன்று ஈனும்.
பசுவிற்கு நான்கு கால்கள் உண்டு.
பசுவிற்கு ஒரு வால் உண்டு.




சின்னக் கதை படிப்போம்

# நான் ஒரு உடைந்த பேனா

நான் உடைந்த ஒது குமிழ் முனைப்பேனா. பெயர் றெனோல்ட். பல பல முறிவுகளுடன் குற்றுயிராய் இந்த வீட்டு மூலையிலே கதியெனக் கிடக்கிறேன்.

இந்த வீட்டிலே சந்திரன் என்னும் பையன் இருக்கிறான். அவனுக்கு அவனுடைய மாமனார் என்னைப் பரிசாகக் கொடுத்தார். அப்போது நான் எவ்வளவு அழகாக இருந்தேன் தெரியுமா? வெள்ளை வெளீர் என்ற உடலும் நீல நிறத் தொப்பியும் அணிந்து கம்பீரமாக காட்சியளித்தேன். தொப்பியைக் கழற்றியதும் என் தலை நீல நிறத்திலே பளிச்சிட்டு தலையில் இருந்த குமிழ்பொன்மணி போல பளிச்சிட்டது. ஒளி வீசியது.

என்னைச் சந்திரன் கண்போலக் காத்தான். என்னைக் கொண்டு முத்து முத்தான எழுத்துக்களை எழுதினான். அவன் என்னை வைத்து [illegible]ன கட்டுரைகள், கதைகள், பாட்டுக்கள் எழுதினான். என்னைக் கொண்டு எழுதியமையினால் அவையெல்லாம் சிறப்பாய் அமைந்தன.

கோப்பாய் காந்தரூபன் அறிவுச்சோலையின் நான்காம் ஆண்டு வகுப்பிலே சேர்வதற்காக பரீட்சை நடந்தது. அந்தப் பரீட்சைக்கு வகுப்பிலே என்னை உபயோகித்து கணிதம், தமிழ்வினாவிடை எழுதினான். ஒவ்வொரு பாடத்திலும் தொண்ணூறு புள்ளிகள் பெற்று முதல்வனாய் வந்தான் அதனால் என்மீது அளவற்ற அன்பு கொண்டான்.

யார் என்னைக் கேட்டாலும் கொடுக்கமாட்டான். ஒருநாள் அவனது புத்தகத்திற்குள் இருந்த நான் தவறிவிழுந்துவிட்டேன். அவன் என்னைக் கவனிக்கவில்லை, அவ்வளவுதான் நான் உடைந்து நொருங்கினேன். சிறிது தூரம் சென்ற



சந்திரன் நான் விழுந்துவிட்டதை அறிந்தான். ஓடிவந்து என்னை எடுத்தான். விம்மிவிம்மி அழுதான். என்னை வீசியெறியாமல் இந்த நிலையில் பத்திரமாய் வைத்திருந்தான்.

அ. சதீஸ்
காந்தரூபன் அறிவுச்சோலை
தமிழீழம்

கவிதை படிப்போம்?

# காகம்

காகம் ஒன்று பறக்கிறது
காகா என்று கரைகிறது
தாகம் கொண்டு தவிக்கிறது
தண்ணீர் தேடித் திரிகிறது

இங்கும் அங்கும் அலைகிறது
ஆனால் எங்கும் கிடையாது
எங்கள் வீட்டு முற்றத்தில்
இருந்து வருந்தி அழுகிறது

சட்டி பானை முட்டியொடு
சருவம் வாளி குடமெல்லாம்
எட்டி எட்டிப் பார்க்கிறது
எங்கும் தண்ணீர் இருந்திலது

என்னைப் பார்த்து இரக்கிறது
ஏதோ கெஞ்சிக் கேட்கிறது
சின்னப் பறவை துன்பமதை
புரிவாா் இலரோ என்கிறது

அன்னை காலை கடைந்திட்ட
அரிய மோரைச் சிரட்டையிலே
முன்னே வைத்தேன் முற்றத்தில்
மகிழ்ந்து காகம் குடிக்கிறது

மீண்டும் என்னை நன்றியொடு
விரும்பிக் காகம் பார்க்கிறது
வேண்டும் போது நான் வருவேன்
என்று சொல்லி எழுகிறது

சிறகை விரித்துக் காற்றினிலே
சீராய் ஆட்டி அசைக்கிறது
உறவைப் பேணி வாழ்கிறது
ஊர்கள் தோறும் பறக்கிறது

தனது அம்மா சொல்லித்தந்த பாட்டை சிறுவர் முற்ற நண்பர்களுக்கு எழுதியவர்.

பி. அங்கதன்
வயது: 6 (14.01.91)
BEZIERS, FRANCE

# செய்தித் துறையில் ஏகபோகம்

# பல உலகம் - ஒரு குரல்

**அ. மார்க்ஸ்**

**செச்சேனியாவில் குண்டு வெடித்தால், பொஸ்னியாவில் ஒரு துப்பாக்கிச் சமர் நடந்தால், அமெரிக்காவிலே ஒரு கொலை நடந்தால், போட்டி போட்டுக்கொண்டு அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து விலாவாரியாக செய்தி வெளியிடும் மேற்குலக செய்தி நிறுவனங்கள் தமிழீழத்திலே பள்ளிக்குழந்தைகள் குண்டு போட்டுக் கொல்லப்பட்டாலும், அப்பாவி மக்கள் தேவாலயங்களுக்குள் வைத்து குண்டு போட்டு அழிக்கப்பட்டாலும், இளம் பெண்கள் சிறீலங்கா இராணுவம் திட்டமிட்ட பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டாலும் அதையெல்லாம் கண்டு கொள்வதில்லை. சமீபத்தில் கிரேக்கக்கடலிலே ஈழத் தமிழர்கள் மூழ்கிப் போனதாக செய்தி வந்த போது அங்கு அது பற்றி ஆராய்வதற்கு முன்வரவில்லை. இதற்கு என்ன காரணம் என்பதற்கு இக்கட்டுரை பதில் தருகிறது. இது பேராசிரியர் அ. மார்க்ஸ் எழுதிய உடைபடும் மௌனங்கள் என்ற நூலிலிருந்து எடுக்கப்படுகின்றன. இதிலுள்ள தரவுகள் 1992-ம் ஆண்டுக்குரியவை. - ஆர்-**

உலகெங்கிலும் அன்றாடம் 'எதார்த்தமாய்' நிகழும் நிகழ்வுகளைத் தொகுத்து செய்தி உருவாக்கப்படுகிறது எனச் சொல்லப்படுகிறது. அதன் மூலம் செய்திக்கு ஒரு இயல்புத் தன்மை வழங்கப்படுகிறது. ஆழ்ந்து சிந்தித்தால் இக் கருத்தாக்கத்திலுள்ள பொய்மை தோலுரிந்துவிடும். செய்தி உருவாக்கம் என்பது உணர்வு பூர்வமான செயற்கையான செயல்பாடுதான். விருப்ப பூர்வமான தேர்வு, குறிப்பிட்ட கருத்தியலடிப்படையிலான தொகுப்பு எனச் செய்தி உருவாக்கம் நடைபெறுகிறது. செய்தி உருவாக்கும் களத்தில் இருப்பவர்கள் இவ்வாறு தேர்வு, தொகுப்பு, வரிசையாக்கம் என்கிற ரீதியில் செயல்பட்டு அடுத்த நாள் உலக மக்கள் இயங்குவதற்கான புதிய எதார்த்தம் ஒன்றை கட்டமைத்து விடுகின்றனர். எதார்த்தத்தின் எதிரொலிப்புதான் செய்தி என்பதைக் காட்டிலும் எதார்த்தத்தின் உருவாக்கமே செய்தி மூலம் மேற்கொள்ளப்படுகிறது என்பதுதான் உண்மை. எத்தியோப்பியாவிலும் ஆயிரக்கணக்கில் மக்கள் மடிவதைக் காட்டிலும் புஷ்ஷைக் காட்டிலும் கிளிங்டனுக்கு செல்வாக்கு கூடுவதை முக்கிய செய்தியாக்கி விட முடியும். சீசெய்குவிற்கு எதிரான ருமேனிய மக்களின் எழுச்சி தொலைக்காட்சி நிலையங்களிலேயே கட்டமைக்கப்பட்டது என்கின்றனர். எனினும் இந்தக் கட்டமைப்புகளை அப்படியே மக்கள் ஏற்றுக்கொள்கின்றனர் என்று சொல்லிவிட முடியாது. இது குறித்து பின்னர் பார்ப்போம்.

உலகில் இன்று 1992-இல் 150 செய்தி நிறுவனங்கள், 8240 தினசரி இதழ்கள், முப்பதாயிரம் வானொலி நிலையங்கள், 33,000 தொலைக்காட்சி நிலையங்கள், 2,50,000 திரைப்படக் கொட்டகைகள், 130 கோடி வானொலிகள், 50 கோடி தொலைக்காட்சிப் பெட்டிகள் புழக்கத்தில் உள்ளன. ஆண்டுக்கு ஏழு லட்சம் நூல்கள் (8,000 மில்லியன் பிரதிகள்) அச்சிடப்படுகின்றன. நாடுவாரியாகப் பிரித்துப் பார்க்கும் போது இவ்விவரங்களின் இன்னொரு பரிமாணம் விளங்கும். ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளிலுள்ள நூலகங்களிலுள்ள நூற்களில் 2/3 பங்கு நூற்கள் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் அச்சிடப்பட்டவை. ரீடர்ஸ் டைஜஸ்ட் 28 மில்லியன், டைம் 12 மில்லியன், நியூஸ் வீக் 6 மில்லியன் பிரதிகள் உலகில் விற்பனையாகின்றன. ஒவ்வொரு வாரமும் 50 மில்லியன் மக்கள் டிஸ்னி இசைக்கு ஆடுகின்றனர். 240 மில்லியன் பேர் டிஸ்னி திரைப்படங்களைப் பார்க்கின்றனர். விளிம்பு நாடுகளில் திரைப்படம் காட்டப்படும் நேரத்தில் பாதியை அமெரிக்கத் திரைப்படங்கள் விழுங்கி விடுகின்றன. NBC.ABC.CBS போன்ற அமெரிக்க தொலைக்காட்சி வலைப்பின்னல்கள் நூறு நாடுகளோடு தொடர்பு கொள்கின்றன. வானொலி அலைகளில் 90 சதத்தை மைய நாடுகளிலுள்ள 10 சத மக்கள் கட்டுப்படுத்துகின்றனர். தரவு வங்கிகளில் 90 சதம் அமெரிக்கக் கட்டுப்பாட்டில் உள்ளன. பன்னாட்டு செய்தி நிறுவனங்கள்_ குறிப்பாக அமெரிக்கப் பன்னாட்டுச் செய்தி நிறுவனங்கள் _தகவல் வங்கிகளிலும் 90 சதம், நுண் எலக்ட்ரானிக்ஸ் உப பாகங்களில் 82 சதம், கணிப் பொறிகளில் 54 சதம், தொலைக்காட்சி நிகழ்ச்சி ... செய்திகளில் 65 சதம், துணைக்கோள்கள் 800 ஆகியவற்றைக் கட்டுப்படுத்துகின்றன. மொத்த உலகின் அலை நிகழ்ச்சி நிரலையும் உருவாக்குகின்றன. முன்னுரிமைகளை நிர்ணயிக்கின்றன. தான்சானியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் ஜூலியஸ்நைரேரே ஒருமுறை வேதனையோடு சொன்னார்: "அமெரிக்க மக்களைக் காட்டிலும் அமெரிக்கத் தேர்தலைப்பற்றி குறை வளர்ச்சி நாட்டு மக்கள் அதிகமாகத் தெரிந்துள்ளனர்."

> **பன்னாட்டு நிறுவனங்கள் விளிம்பு நாடுகள் தமக்கென செய்திகளை உருவாக்கும் முயற்சிகளை கடுமையாய் எதிர்க்கின்றன. ஐக்கிய நாடுகள் அவையின் ஓர் அங்கமாகிய 'யுனெஸ்கோ' வில் 'தகவல்களில் காலனிய நீக்கம்' என்கிற குரல் எழுப்பப்பட்ட போது அதனை இப் பன்னாட்டு நிறுவனங்கள் கடுமையாய்த் தாக்கின.**

உலகிலுள்ள நூற்றைம்பது செய்தி நிறுவனங்களும் தினந்தோறும் 40 மில்லியன் சொற்களில் செய்திகளை விநியோகிக்கின்றன. எனினும் இவற்றில் நான்கே நான்கு பன்னாட்டு நிறுவனங்கள் (AP,UPI, ராய்ட்டர்ஸ், AFP ஆகியவை) மட்டும் கிட்டத்தட்ட 38 மில்லியன் சொற்களை _அதாவது, 97 சதம்_ உருவாக்குகின்றன. அமெரிக்காவின் 'அசோசியேட் பிரஸ்' சுக்கு (AP) மட்டும் 8500 சந்தாதாரர்கள்_ அதாவது செய்தி பெற்றுக் கொள்பவர்கள் உள்ளனர். AP யின் செய்தியை 1000 மில்லியன் வாசகர்கள் நுகர்கின்றனர். மூன்றாம் உலகச் செய்தி நிறுவனங்கள் ('இன்டர் பிரஸ்சர்வீஸ் (IPS), TANJUG, MENA, போன்றவை) மொத்தம் நான்கு லட்சம் சொற்களைத்தான்_(அதாவது வெறும் 1 சதம்) செய்தியாக விநியோகிக்கின்றன.

பன்னாட்டு நிறுவனங்கள் விளிம்பு நாடுகள் தமக்கென செய்திகளை உருவாக்கும் முயற்சிகளை கடுமையாய் எதிர்க்கின்றன. ஐக்கிய நாடுகள் அவையின் ஓர் அங்கமாகிய 'யுனெஸ்கோ' வில் 'தகவல்களில் காலனிய நீக்கம்' (decolonialisation of information) என்கிற குரல் எழுப்பப்பட்ட போது அதனை இப் பன்னாட்டு நிறுவனங்கள் கடுமையாய்த் தாக்கின. 150 நாடுகளைச் சேர்ந்த 2000 பிரதிநிதிகள் கூடி ஆறு வாரங்கள் விவாதித்து 53 தலைப்புகளில் கருத்துக்கள் முன் வைக்கப்பட்ட போது அவற்றை இந் நிறுவனங்கள் இருட்டடிப்புச் செய்தன. கிராம வளர்ச்சி, பெண்களின் நிலைமை, கல்லாமை, உணவு உற்பத்தி ஆகிய தலைப்பிலான செய்திகள் புறக்கணிக்கப்பட்டன. 'யுனெஸ்கோ எழுத்துரிமைக்கு எதிராக நிற்கிறது' என்பதாகத் திரித்து செய்திகளை வெளியிட்டன. மணிலாவில் நடைபெற்ற (ஜூன் 1979) 'உன்க்டாட் V' மாநாட்டில் மைய நாடுகளுக்கெதிரான பொருளாதாரக் கோரிக்கைகள் எழுப்பப்பட்டன. இது குறித்து, மூன்றாம் உலக நாட்டு பிரதிநிதிகள் அரங்கில் தூங்கினர், பிலிப்பைன் பெண்களுடன் சரசமாடினர், இதனால் மணிலா நகரத் தாசிகளின் 'ரேட்' கூடி விட்டது என்றெல்லாம் இப்பன்னாட்டு செய்தி நிறுவனங்கள் , செய்தி வெளியிட்டன. ஒரு நிறுவனம் 'FUNCTAD V' என்று கூடக் குறிப்பிட்டது. இதே நிறுவனங்கள் உலக வங்கி, பன்னாட்டு நிதியம் ஆகியவற்றின் கூட்டங்களில் நடக்கும் கேளிக்கை விவகாரங்கள் குறித்து ஏதும் எழுதியதில்லை. சமீபத்தில் நடைபெற்ற பார்சிலோனியா ஒலிம்பிக் பற்றிய செய்திகளில் கூட மூன்றாம் உலக நாடுகளின் சாதனைகளுக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. ஏதாவது சொன்னாலும் அவை ரொம்பவும் கேலியாகவே சொல்லப்பட்டன. 'எல் பாய்ஸ்' என்கிற ஸ்பானியப் பத்திரிகை மூன்றாம் உலகச் சாதனையாளர்களை காட்டுமிராண்டிகள் என எழுதியது. கியூபா, ஜமேகா போன்ற நாட்டுச்சாதனையாளர்களும் கேவலப்படுத்தப்பட்டனர். (Hindu, July 29. 1992) இதே போல் டெல்லியில் (1983) நடைபெற்ற அணிசேரா நாடுகளின் மாநாட்டில் சிங்கப்பூர் பிரதமர் அமெரிக்காவை ஆதரித்துப் பேசியதற்கு அளவுக்கு மீறி முக்கியத்துவம் கொடுத்தும், ஹராரே மாநாட்டில் (1986) இரண்டு நாட்களுக்கு முன்பு அமெரிக்கக் குண்டு வீச்சில் குழந்தையைப் பறிகொடுத்த லிபியாவின் கர்னல் கடாபியின் உணர்ச்சி வெளிப்பாடுகளைக் கேலி செய்தும் செய்திகளை வெளியிட்டன.

> **பார்சிலோனியா ஒலிம்பிக் பற்றிய செய்திகளில் 'எல் பாய்ஸ்' என்கிற ஸ்பானியப் பத்திரிகை மூன்றாம் உலகச் சாதனையாளர்களை காட்டுமிராண்டிகள் என எழுதியது. கியூபா, ஜமேகா போன்ற நாட்டுச்சாதனையாளர்களும் கேவலப்படுத்தப்பட்டனர்.**

செய்தி உற்பத்தி/விநியோகம் ஆகியவற்றில் மைய நாடுகளின் ஏகபோகக் கட்டுப்பாட்டை எதிர்த்து 'யுனெஸ்கோ' வின் மணிலா (1977) மற்றும் பாரிஸ் (1972) மாநாடுகளில் பேசப்பட்டன. சுயேச்சையான செய்தித் தொடர்புக் கொள்கை பற்றியெல்லாம் இவைகளில் பேசப்பட்டன. இது தொடர்பாக பிராந்திய ரீதியான மாநாடுகள் கூட்டப்பட வேண்டும் என்கிற முடிவின்படி லத்தீன் அமெரிக்கப் பகுதி மாநாடு சான்ஜோஸிலும் (1976), ஆசிய மாநாடு கோலாலம்பூரிலும் (1979), ஆபிரிக்க மாநாடு யூண்டே (1980) யிலும் கூட்டப்பட்டன. இங்கெல்லாம் செய்தி உற்பத்தி, விநியோகம் ஆகியவற்றில் சுயச்சார்பு வலியுறுத்தப்பட்டது. இந்தியா இவற்றில் முக்கிய பங்காற்றியிருக்கிறது. இவை தவிர அணிசேராத நாடுகளின் ஒருங்கிணைப்புக்குழு (1978 ஜாகர்த்தா) கூட்டத்திலும், 'செய்தித் தொடர்புப் பிரச்சினைகள் குறித்து சர்வதேசக் குழு' வால் நடத்தப்பட்ட (நவம்பர் 1979) 'ஒரு உலகம் பல குரல்கள்' என்கிற சீன் மேக் பிரைட் தலைமையிலான கருத்தரங்கிலும் செய்தி வலைப் பின்னணியில் பன்னாட்டு நிறுவனங்களின் கட்டுப்பாடுகள் விமர்சிக்கப்பட்டன. எனினும் இத்தகைய முயற்சிகளை மைய நாடுகள் கடுமையாய் எதிர்த்தன. TANJUG, IPS போன்ற மூன்றாம் உலகச் செய்தி நிறுவனங்கள் தொடங்கப்பட்டாலும் அவையும், ஏன், சோவியத் ரசியாவின் 'தாஸ்' நிறுவனமும் கூட பன்னாட்டு நிறுவனங்களின் கட்டுப்பாட்டைத் தகர்க்க முடியவில்லை. 'ஒரு உலகம் பல குரல்கள்' எனக் கவர்ச்சியாக முழக்கம் எழுதப்பட்டாலும் எதார்த்தம் என்னவோ 'பல உலகங்கள் ஒரு குரல்' என்பதாகவே இருக்கிறது.

## மொழிபெயர்ப்புச் சேவை

உங்கள் அனைத்து மொழிபெயர்ப்புகளுக்கும், கடிதத் தொடர்புகளுக்கும், தொலைநகல் (Fax) சேவைக்கும், எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்

1 பக்கம் மொழிபெயர்க்க - 60Frs.

Fax:- 35Frs (வெளிநாடுகளுக்கு)

Copies la Chapelle

32, Rue Philippe de Girard, 75010 Paris.
Tel: & Fax: 42 09 60 94

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# கிரேக்கக் கடலில் எம்மவர் உயிரிழந்த நிகழ்வு உண்மையா?

ஜெயகாந்தன்
ஸ்ராஸ்பேர்க், பிரான்ஸ்

☞ ஐயா; கிரேக்கக் கடலில் எம்மவர் உயிரிழந்த நிகழ்வு உண்மையா?

✍ உண்மை என்றுதான் உடனிருந்தவர்கள் அடித்துச் சொல்கிறார்கள்.

சங்கீதா
பாரிஸ் 20

☞ தமிழ் சினிமா மோகம் எங்கு கொண்டுபோய் விடும்?

✍ கோடம்பாக்கத்தில்.

நாகலிங்கம்
எசென், ஜேர்மனி

☞ ஈழமுரசின் சிறப்பு என்ன குப்தனாரே?

✍ மதில் மேல் பூனையாய் இல்லாதிருப்பது.

இராவணன்,
பாரீஸ் 11

☞ சொல், செயல் எது கடினம் சித்திர குப்தா?

✍ சொல்தானப்பா கடினம். விடுதலைப் புலிகள் தங்களது பலத்தை செயலில் காட்டி விடுகிறார்கள். அதை வெளியில் 'சொல்'வதில் உள்ள கடினம் சந்திரிகாவுக்கும், ரத்வத்தைக்குமல்லவா தெரியும்.

மனோன்மணி
பேர்லின், ஜேர்மனி

☞ பின்தூங்கி முன் எழுவோர் யார்?

✍ பாரிஸ் தமிழர்கள். காலை 5 மணிக்கு வேலைக்கு போக வேண்டுமானாலும் இரவு 12 மணியானாலும் ஒரு படம் பார்த்துவிட்டு தூங்கப் போகாவிட்டால் அவர்களுக்கு தூக்கம் வராது.

வாணி
சறே, பிரித்தானியா

☞ சிறீலங்காவில் மதத்தையும், அரசியலையும் பிரித்துவிட்டால்?

✍ சிங்களவர்கள் உருப்படுவார்கள்.

ராஜகுமார்
சூரிச், சுவிஸ்

☞ குடியைக் கெடுப்பது யார்?

✍ பொலிஸ்காரர்கள்தான்; இரவில் 9 மணிக்கு மேல் கடைகளில் குடிவகைகளை வாங்க அனுமதிக்கிறார்களில்லையே?

## சித்திரகுப்தனார் பதில்கள்

கமலக்கண்ணன்
ஒஸ்லோ, நோர்வே.

☞ நடிப்பு என்பது யாருக்கு வரும்?

✍ அதற்கான தேவை உள்ளவர்களுக்கு.

பானுமதி லோகசிங்கம்
ஒஸ்லோ, நோர்வே

☞ புத்தர் பூலோகத்திலிருந்து சிறிலங்கா வந்தால்?

✍ அன்பு, அகிம்சை எல்லாம் பேச வேண்டாம் என்று சொல்லி; சிறீலங்கா பெளத்த பிக்குகளே அவரை சுட்டுக் கொன்றுவிடுவார்கள்.

வேலும்மயிலும்
டென்காக், நெதர்லாந்து

☞ ரத்வத்தையார் தற்போது அடக்கி வாசிப்பதன் மர்மம் என்ன?

✍ பம்மைமடு 'நடுக்கம்' இன்னும் போகாததுதான்.

பாக்கியநாதன்
சார்சல், பிரான்ஸ்

☞ யாழ்ப்பாணம் இப்போது எப்படி இருக்கிறது?

✍ திறந்த வெளிச் சிறைச் சாலையாக இருக்கிறது.

சுரேஸ்
ஈஸ்ட்காம், பிரித்தானியா

☞ சந்திரிகா இராணுவ ரீதியாக தோல்வியினைச் சந்தித்தபோதும், தொடர்ந்து யுத்தம் செய்வதில் முனைப்பாக இருப்பதேன்?

✍ தமிழ்ப் பெண்களையும் தன்னுடைய நிலைக்கு கொண்டுவர வேண்டும் என்ற விருப்பம் தான்.


உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
கல்விச் சேவை நடாத்தும்

**கணனி வகுப்புகள்**

லவுசான் மாநகரில் பிரதி வெள்ளி தோறும்
இரவு 20.00 மணி முதல்
22.30 மணி வரை
ஆரம்பம் 31.01.1997 வெள்ளிக்கிழமை
புதிய வகுப்புக்களுக்கான பாடங்கள்:
Mastring Windows 95 and office Admnistration, Windows 95, Camparing Systems, Win Word 7.0, Word Basic, Access 7.0, Excel 7.0, Power Point 7.0, Micro Writing
தொடர்புகளுக்கு: 021 6487537


## 4ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 02 - 01 - 1960



மறைவு: 16 - 01 - 1993

### திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார்
### (தளபதி கேணல் கிட்டு)

கொண்ட கொள்கைக்காய்
வங்கத்தில் சுடராகி
ஆண்டுகள் உருண்டாலும்
ஆற்றுமோ உங்கள் இழப்பை!
மறக்குமோ ஈழத்து சரித்திரம்!
ஓயாத உறுமலால் வெற்றி கொண்ட
யாழ் நகர் அழிகிறது இன்று
கூடுகளற்ற குருவிகளாய்
அலைகின்றனர் நேசித்த மக்கள்
தானைத் தலைவனை அழைக்கிறது மறவர் இனம்
அன்பிற்காய் ஆசை வார்த்தைக்காய்
ஏங்கிடும் உறவுகள்!
காலங்கள் ஓடலாம் சரித்திரம் மாறலாம்
ஆற்றுமோ மாமா எம் துயரம்
மாறுமோ நியதி! வருவீரோ மீண்டு!

*உங்கள் பிரிவால் வாடும் மருமக்கள்*

## 31ம் நாள் கண்ணீர் அஞ்சலி



மறைவு: 28 - 12 - 1996

### திருமதி. இராசட்சுமி சதாசிவம் (கிட்டம்மா)

எம் இனத்தின் ஒளிவிளக்காய்!
அன்பின் சுடரொளியாய்!
எம்மை வழிநடத்திய தெய்வமே!
எம்மை விட்டு எங்கு சென்றாய்?
ஈழவரின் நெஞ்சில் நிறைந்து .
'கிட்டம்மா' என செல்லப் பெயர் பெற்றாய்
ஈழத்தின் இனிய மலர்விற்காய்
நீ பட்ட சோதனைகளும் வேதனைகளும்
யாரும் அறியார்.
ஆயுதம் ஏந்தாத வீராங்கனை - நீ
பார்புகழும் வீரனை ஈன்ற வீரத்தாய் - நீ
உன் தியாகத்தை வரலாறு என்றோ சொல்லும்
கனவுகள் நனவாகி ஆத்மா சாந்தி பெற
இறையருள் வேண்டுகிறோம்.

*உங்கள் பிரிவால் ஆறாத்துயரில் வாடும்
பேரப்பிள்ளைகள்*

# ஞானம் சென்ரர் தொலைபேசி அட்டைகள் ஏனைய தொலைபேசி அட்டைகளை விட விலை குறைந்தவை



# 100 Frs.

| DESTINATION | DURÉE D'APPEL |
|---|---|
| **ALLEMAGNE** | **50 Mn** |
| ANGOLA | 13 Mn |
| ARABIE SAUDIE | 17 Mn |
| ARGENTINE | 20 Mn |
| **BENGLADESH** | **14 Mn** |
| BELGIQUE | 40 Mn |
| BOLIVIE | 16 Mn |
| **BURKINA FASO** | **17 Mn** |
| BURUNDI | 13 Mn |
| CAMBODGE | 12 Mn |
| CAMEROUN | 15 Mn |
| **CANADA** | **62 Mn** |
| REP. C.AFRIQUE | 10 Mn |
| CONGO | 14 Mn |
| **COTE D'IVOIRE** | **18 Mn** |
| CHILI | 21 Mn |
| CHINE | 17 Mn |
| COLOMBIE | 23 Mn |
| CUBA | 15 Mn |
| DANEMARK | 41 Mn |
| EGYPTE | 16 Mn |
| ESPAGNE | 33 Mn |
| ETHIOPIE | 12 Mn |
| FINLANDE | 35 Mn |
| **GABON** | **15 Mn** |
| **GHANA** | **17 Mn** |

| DESTINATION | DURÉE D'APPEL |
|---|---|
| **HAITI** | **17 Mn** |
| HONG KONG | 33 Mn |
| **INDE** | **20 Mn** |
| ISRAEL | 20 Mn |
| ITALIE | 35 Mn |
| JAPON | 36 Mn |
| LIBAN | 15 Mn |
| LUXEMBOURG | 35 Mn |
| **MALI** | **15 Mn** |
| MAROC | 24 Mn |
| MAURICE | 13 Mn |
| MEXIQUE | 31 Mn |
| NORVEGE | 45 Mn |
| **PAKISTAN** | **16 Mn** |
| PAYS-BAS | 40 Mn |
| PHILIPPINES | 18 Mn |
| POLOGNE | 25 Mn |
| PORTUGAL | 29 Mn |
| **SENEGAL** | **14 Mn** |
| **SINGAPOUR** | **40 Mn** |
| **SRI LANKA** | **17 Mn** |
| **SUISSE** | **45 Mn** |
| **THAILANDE** | **16 Mn** |
| TUNISE | 24 Mn |
| VENEZUELA | 27 Mn |
| ZAIRE | 18 Mn |

*நிமிடங்கள் யாவும் ஒவ்வொரு தடவையும் அறிவிக்கப்படும்*

# GNANAM CENTER COMMUNICATION

195, Rue du Faubourg Saint Denis. 75010 Paris.

Tel: 01 46 07 09 36 - Fax: 01 46 07 00 14

M°: La Chapelle / Gare du Nord

(32ம் பக்கத் தொடர்ச்சி)

## கிழக்கில்...

தின் மீதும் புலிகள் கடுமையான மோட்டார் தாக்குதல்களை மேற்கொண்டு பெரும் சேதத்தினை விளைவித்துள்ளனர். இத் தாக்குதலை முறியடிக்கவென அனுப்பப்பட்ட உலங்குவானூர்தியே சுடப்பட்டுள்ளது.

சேதமடைந்த உலங்கு வானூர்தி புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தினுள் விழுந்தால் அதிலிருந்தோரை மீட்கவென இரண்டு MI-24 ரக உலங்குவானூர்திகள் உடனடியாக அனுப்பப்பட்டன. இவை பலத்த தாக்குதல்களை மேற்கொண்ட சந்தர்ப்பத்திலேயே சேதமடைந்த பெல்-212 உலங்கு வானூர்தி படைமுகாமினுள் தரையிறக்கப்பட்டது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

## வடக்கு-கிழக்கு...

தொடருமானால் இந்த நாட்டையும் சிங்கள மக்களையும் பரதேசிகள் நிலைக்கு அது தள்ளிவிடும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

இன்றைய தமிழ் மக்களுடைய எழுச்சியை எந்தச் சக்தியாலும் அழித்துவிடமுடியாதெனவும் அவர்களுடைய எழுச்சியை ஒருபுறம் நீங்கள் அடக்கினால் மறுபுறம் அது வீறு கொண்டு எழுந்தபடியே இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இன்றைய போர் மேற்கு நாடுகளுக்கு எமது மண்ணை விற்பதிலும், ஆயுதவியாபாரிகளுக்கு இலாப மீட்டிக் கொடுப்பதிலேயுமே பெரும் பங்காற்றி வருகிறதெனவும், தமிழர்கள் தங்களுடைய பூர்வீக பூமியில் சுதந்திரமாக வாழ்வதற்கு வழிசமைத்துக் கொடுக்காதவரை நாடு அபாயத்தை நோக்கியே செல்லும் எனவும் குறிப்பிட்டுள்ளார். தென் பகுதியில் வாழ்வோர் தமக்கு சுதந்திரமான வாழ்வு வேண்டும் என நினைப்பது போல, தமிழர்களுக்கும் அந்த வாழ்வு வேண்டும் என நினைத்தால் விடிவு ஏற்படும் எனவும் தனது நீண்ட பத்திரிகைச் செய்தியில் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின குறிப்பிட்டுள்ளார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

## கிரேக்கத்திலிருந்து...

லங்காப் பொலீசார் சித்திரவதை செய்யப்போகிறார்களே என்று சிலர் வாய்விட்டுக் கதறி அழுதனர்.

மிரிகான பொலீஸ் தலைமையகத்திற்கு கொண்டு செல்லப்பட்ட இவர்கள் அனைவரும் சிறீலங்காவில் சர்வதேச பொலீஸ் (இன்டர்போல்) பிரிவிற்கு பொறுப்பாக இருக்கும் அதிகாரியான மித்திர சிறிவர்த்தனாவின் மேற்பார்வையில் விசாரணை செய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இந்த விசாரணையின் போது இவர்கள் அனைவரும் தாம் கொழும்பில் பொலீஸ், இராணுவ கெடுபிடிகளுக்கு அஞ்சியே வெளிநாடு செல்ல முயன்றதாக தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

இன்னும் கிரேக்கத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 22 பேரும் விரைவில் கொழும்புக்கு அனுப்பப்படவுள்ளார்கள். இதேவேளை இவர்களின் பிரயாணத்துக்கு ஏற்பாடு செய்து கொடுத்த பிரதான முகவரை ... முகவர்களையும் ... பொலிசார் வலை விரித்துள்ளனர்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

## வவுனியா...

வேப்பங்குளம் தமிழ் மகா வித்தியாலயம், பூந்தோட்டம் கல்வியியல் கல்லூரி, நெல்லுக்குளம் அகதி முகாம் ஆகிய இடங்களுக்கு சென்று அங்குள்ள அகதிகளிடம் அவர்களது குறைகளை கேட்டறிந்த நோர்வே அதிகாரிகள் தாண்டிக்குளம் சோதனைச் சாவடிக்கும் சென்று அங்குள்ள நடைமுறைகளையும் அவதானித்துச் சென்றுள்ளனர்.


# A.S.C.E.S

41, Rue Didot, 75014 Paris. Métro: Pernety - Tel: 01 42 57 23 56

01.02.97 மாலை 1.30 பிரெஞ்சு ஆரம்ப எழுத்து பேச்சு, பயிற்சி வகுப்பு
05.01.97 காலை 1.00 மணிக்கு பிரெஞ்சு வகுப்பு ஆரம்பமாகியுள்ளது.
01.02.97 மாலை 1.30 மணிக்கு புதியநடன வகுப்பு
01.02.97 மாலை 2.00 மணிக்கு வயலின்
மாலை 3.00 மணிக்கு சங்கீத வகுப்பு
01.02.97 மாலை 1.30 மணிக்கு Organ Keyboard வகுப்பு
02.12.97 மாலை 2.00 மணிக்கு மிருதங்க/ வயலின் வகுப்பு
02.02.97 மாலை 1.30 மணிக்கு சிறுவர் தமிழ், ஆங்கில, பிரெஞ்சு, Computer வகுப்பு
01.02.97 மாலை 3.30 மணிக்கு தையல் வகுப்பு
02.02.97 மாலை 2.30 மணிக்கு கேக் அலங்கார வகுப்பு
01.02.97 காலை 10.30 மணிக்கும், மாலை 2.00 மணிக்கும் Computer வகுப்பு.
02.02.97 மாலை 1.30_ 3.30 ஆங்கில வகுப்பு

அரும்பு நடைமுறை பிரெஞ்சு நூல்களை வெளியிட்ட A.S.C.E.S தனது 7வது ஆண்டு விழாவையொட்டி சிறுகதை, கவிதைப் போட்டி நடாத்துகின்றது. சிறந்த முதல் இரு படைப்புகளுக்கும் தங்கப் பதக்கங்கள் வழங்கப்படும். யாவரும் பங்கு பற்றலாம். படைப்புகள் பிரசுரமாகாதவையாக இருக்கவேண்டும். பிரதிகளை 28.01.1997-க்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பவும்.

**அனுப்ப வேண்டிய முகவரி**
A.S.C.E.S - 62, Rue Poteau, 75018 Paris

7 வருட காலமாய் தமிழ் மக்கள் கல்வி பயின்றுவரும் A.S.C.E.S-இன் பிறிதொரு கிளை **பாரதி நுண்கலைக் கல்லூரி**
Rg N° 92977

## பாரதி நுண்கலைக் கல்லூரி

Eglise Sainte- Helene, 6, Rue Esclangon - 75018 Paris
Tel: 42 57 23 50

08.02.97 மாலை 2.00 மணிக்கு புதிய பிரெஞ்சு வகுப்பு
08.02.97 மாலை 2.00 மணிக்கு நடன வகுப்பு
08.02.97 மாலை 2.00 மணிக்கு சிறுவர்களுக்கான தமிழ் பிரெஞ்சு, ஆங்கில வகுப்பு
08.02.97 மாலை 3.00 - 6.00 மணிக்கு 6eme - Bac maths, chemistry.

**திங்கள் மாலை 5.00 மணிக்கு பிரெஞ்சு வகுப்பு நடைபெறவுள்ளது.**

இடம்: La Maison verte, 127 Rue Marcadet, 75018 Paris
Metro: Joules Joffrin / Marcadet Poissoniers
Bus: 31,60,80, 85 - தரிப்பிடம்: Mairie 18.



ஈழமுரசு

பிரான்சிற்கான ஆண்டுச் சந்தா

420 Frs.


# 4ம் ஆண்டு நினைவாஞ்சலி



தோற்றம்: 05.09.1949 மறைவு: 01.02.1993

## அமரர் தம்பிப்பிள்ளை சுந்தரலிங்கம்

### (இளையதம்பி) மருதங்கேணி

அன்புதனை அருவியாக்கி
பண்புதனை சிகரமாக்கி
பார்போற்ற வாழ்ந்திட்ட பாசமிகு தந்தையே!
ஆண்டு மூன்று சென்றிடினும்
மறைந்திடுமோ நின் மலர்ந்த முகம்
எம் வாழ்வின் ஒளிவிளக்கே!

உங்கள் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கும்

மனைவி இராசலட்சுமி - பிள்ளைகள் சிறீவரதன், அச்சுதன், வாசுகி, சிறீகரன், மணிவண்ணன், அகிலன், நிமலன் - மருமகன் சாந்தகுமார் - தம்பிமார் தனபாலசிங்கம், இராசலிங்கம், யோகராசா, மற்றும் மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்

தகவல்: சு. சிறிவரதன் - ஜெனிவா

# 41-வது நாள்

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்: 05.04.1972 மறைவு: 15.12.1996

## ஜெயராஜசிங்கம் கண்ணதாசன்

கரணவாய் வடக்கு நெல்லியடியைச் சேர்ந்தவர் ஜேர்மனியில் அகாலமரணமானார்.

தம்பி உனது சகோதரர்கள் உன்னை நினைத்து நினைத்து வாடுகிறார்கள். உனது வாழ்க்கை என்ன கனவா தம்பி! உன் புன்னகை முகம் எங்கே காண்போம். நம்ப முடியவில்லையே உனது மறைவினை. அண்ணா என்று சொல்லுவாயே எப்படி எங்கள் எல்லோரையும் விட்டுவிட்டுப் போனாய்.

இனி எங்கே உன்னைக் காணப்போகின்றோம்.
உனது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
உன் பிரிவால் தவிக்கும் உனது ஐயா, அம்மா, அண்ணன், தம்பி.

J.Kanesalingam
Matteld Str-15, 9532 Ricenbach.
Tel: 071 9254389


**வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்**

* விருப்பத்திற்கேற்ப தெரிவுகள்
* விலையில் சிக்கனம்
* தைத்த ஆடைகளின் சுரங்கம் இன்னும்
* புதிய பழைய CDக்கள்
* தரமான ஐங்கரன் பிரதிகள்
* அன்பளிப்புப் பொருட்கள்

அனைத்திற்கும்

**ரஜிந்தாஸ்**

RAJINTHAS TEXTILES

TEL: & FAX: 40 36 53 20
Métro: La Chapelle

9, Rue Perdonnet
75010 PARIS



500 FF இற்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு ரஜிந்தாசின் பாடல் பிரதி (Video) ஒன்று அன்பளிப்பாக வழங்கப்படும்.

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

WOODLANDS
AXS Card 100 பிராங்க் மட்டுமே!
Cabin இல் இருந்து தொடர்புகொள்ள 90Fr - 15Min
மிகமிகக் குறைந்த விலையில் கூடிய நேரம் தொடர்பு கொள்ளலாம்.
வர்த்தகர்களுக்கு விசேட விலையுண்டு
அட்டையில் பாவிக்கக் கூடிய நேர அளவு கணனி முறை பதிவில் உங்களுக்கு அறிவிக்கப்படும்
Australie........45 Min.
Canada......... 60 Min.
Inde..............20 Min.
Pakistan.......17 Min.
London.........70 Min.
Sri Lanka......17 Min.
USA..............70 Min.
Germany........50 Min.
Denmark.........50 Min
Thailand.........20 Min
Singapore......45 Min.
இன்னும் பல நாடுகள் மிகமிகக் குறைந்த விலையில்...
70, Rue Louis Blanc, 75010 Paris - Tel: 01 40 35 01 04 / 01 40 35 00 27

# வடக்கு-கிழக்கு தமிழரின் தாயகபூமி இதனை எவருமே மறுதலிக்கமுடியாது

## விக்கிரமபாகு கருனாரத்தின

வடக்கு-கிழக்கு தமிழர்களுடைய தாயகபூமி என்றும் அந்த மண்ணிலே அந்த மக்கள் சுதந்திரமாக வாழ அனைவருக்கும் வழிவிட வேண்டும் எனவும், இந்த யதார்த்தமான நிலைமையை எவருமே மறுதலித்துவிட முடியாதெனவும் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார். அவர் தனது நீண்ட பேட்டியில் தமிழ் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்திற்கான நியாயத் தன்மையையும், சிங்கள பேரினவாத அரசுகளின் வக்கிரமான நிலைப்பாடுகளையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

தமிழர்களின் பாரம்பரிய பூமியில் சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டு திட்டமிட்ட முறையாலே தமிழர்தம் பூமி பறிக்கப்பட்டு வந்தமையினையும் அவர் சாடியுள்ளார்.

அண்மைக்காலமாக சந்திரிகாவும் அவரது மாமனாரும் மக்களுக்குக் கூறிவந்த பொய்யுரைகளை அண்மையில் நடைபெற்ற பரந்தன்- ஆனையிறவுத் தாக்குதல் தகர்த்துவிட்டதாகவும் இனி மக்களுக்கு இந்த அரசியல் சாக்கடைகள் எதனைக் கூறப் போகிறார்கள் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

விடுதலைப்புலிகள் பலம் வாய்ந்த ஒரு சக்தியாக தமிழ் மக்களுடைய பிரதிநிதிகளாக போராடிவருகிறார்கள் எனவும் குறிப்பிட்ட அவர், இந்த அரசுகள் தொடர்ந்தும் போரை

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

## கிரேக்கத்திலிருந்து அனுப்பப்பட்டோர் 'இன்டர்போலால்' விசாரணை

கிரேக்க கடல் அனர்த்தத்திலிருந்து உயிர்தப்பி கிரேக்க பொலிசாரினால் தடுத்து வைக்கப்பட்டிருந்தோரில் நாடு கடத்தப்பட்ட 29 தமிழர்களும் கடந்த வியாழக்கிழமை (23.01.97) கொழும்பை வந்தடைந்தனர்.

விமான நிலையத்திலிருந்து இவர்கள் அனைவரையும் சிறீலங்காப் புலனாய்வுத்துறையினர் கையேற்றுகொண்டு சென்ற காட்சி உறவினர்களை கதறி அழவைத்தது. "அவர்கள் மரணத்திலிருந்து தப்பி வந்தவர்கள்; மீண்டும் அவர்களை சிறீ

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

## கிழக்கில் -பெல்வானூர்தி சுடப்பட்டது - 6 படையினர் பலி

கிழக்கில் விடுதலைப்புலிகளினால் சிறீலங்கா வான்படைக்குச் சொந்தமான பெல்-212 ரக உலங்கு வானூர்தி சுடப்பட்டு கடும் சேதத்திற்கு உள்ளாகியுள்ளது. [illegible] உலங்குவானூர்தியின் [illegible] கடும் சேதமடைந்துள்ளதால் இனிமேல் அதனை சேவையிலீடுபடுத்த முடியுமா என்ற சந்தேகத்தினை விமானப் படையினர் வெளிப்படுத்தியுள்ளனர்.

வெலிக்கந்தை பகுதியில் வைத்தே இந் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடும் சேதமடைந்த உலங்கு வானூர்தியை பெரும் சிரமத்துடன் ஹிங்குராங்கொடை படைமுகாமினுள் விமானி இறக்கியுள்ளார்.

இதேவேளை கல்லாறுப் பகுதியில் ரோந்து சென்ற இராணுவ அணிமீது விடுதலைப் புலிகள் பிறிதொரு தாக்குதலை நடாத்தியதில் ஆறு படையினர் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்த ஆயுதங்களும் புலிகளினால் கைப்பற்றிச் செல்லப்பட்டன.

வெலிக்கந்தை பகுதியில் நிலைகொண்டுள்ள சிறீலங்கா இராணுவத்தின் 23 ஆவது படைப்பிரிவு தலைமையகத்

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

## எமது அரசியல்வாதிகளின் மனைவிமார் விதவைகள் ஆவதை ஏற்கமாட்டோம்

### குஜ்ரால்

எமது நாட்டு அரசியல் வாதிகளின் மனைவிகள் மீண்டும் விதவைகளாவதை நாம் ஏற்க மாட்டோம் என கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய வெளியுறவு அமைச்சர் குஜ்ரால் தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக கொழும்புத் தமிழ்க் குழுக்களுடன் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றிலேயே அவர் மேற்படி கருத்தினை வெளிப்படுத்தியுள்ளார்.

இனப் பிரச்சினையில் தலையிடுமாறும், மூன்றாவது தரப்பு மத்தியஸ்தத்தை இந்தியா மேற்கொள்ள வேண்டும் எனவும் தமிழ் குழுக்கள் குஜ்ராலை வலியுறுத்திய போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அத்துடன் இலங்கை இனப் பிரச்சினையில் தாங்கள் எவ்வித தலையீடும் மேற்கொள்ளப் போவதில்லை எனவும் அவர் உறுதியாகக் குறிப்பிட்டார்.

குஜ்ராலுடன் நடைபெற்ற கலந்துரையாடலில், கூட்டணி, ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எப், ஈரோஸ், ரெலோ போன்ற குழுக்கள் கலந்து கொண்டன.

## யாழ்ப்பாணத்தில் சீனி மோசடி

சிறீலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப் படும் சீனி, இரகசியமான முறையில் தனியார் வியாபாரிகளுக்கு இலஞ்சம் வாங்கிக்கொண்டு கை மாற்றப்படுவதாக புகார் செய்யப் பட்டுள்ளது.

யாழ் குடாநாட்டில் கூட்டுறவுச் சங்கக் கடைகளில் கிலோ 32 ரூபாவுக்கு விற்கும் சீனியை தனியார் வியாபாரிகள் அங்குள்ள ஊழியர்களுக்கு லஞ்சம் கொடுத்து வாங்கி கிலோ 40 ரூபா முதல் 50 ரூபா வரை விற்று வருகின்றனர்.

யாழ் நகரத்திலுள்ள கூட்டுறவுச் சங்கக் கடைகளில் ஒரு ஊழியர் மட்டுமே வேலைசெய்வதாகவும் ஏனையோர் பயத்தின் காரணமாக வேலைக்கு வராதிருப்பதால் வேலைக்கு வந்த கையூட்டு வாங்கும் ஊழியர் மீது நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாதிருப்பதாகவும் யாழ் அரசாங்க உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## வவுனியா அகதிகளை நோர்வே அதிகாரிகள் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியாவினுள் பல்வேறு இராணுவத் தடுப்பு முகாங்களில் உள்ள அகதிகளை நோர்வே நாட்டு அதிகாரிகள் சென்று பார்வையிட்டுள்ளனர்.

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

ஞானம் சென்ரரின் புதிய தொலைபேசி அட்டை
Gnanam Center Communication
இலங்கை .......... 17 நிமிடம்
இந்தியா ........... 20 நிமிடம்
கனடா ......... 62 நிமிடம்
ஜேர்மனி....... 50 நிமிடம்
100Frs மட்டுமே! (மிகக் குறைந்த விலையில்)
10 தொலைபேசி அட்டைகள் 900Frs

195, Rue du Faubourg Saint Denis. 75010 Paris. Tel: 01 46 07 09 36 - Fax: 01 46 07 00 14